"உலகத்தில் எந்த நாடும் எமது தாயகத்திற்கு இணையாக மாட்டாது, இன்னும் எத்தனை பிறவி எடுத்தாலும் எனது மக்களுக்கும், மண்ணுக்கும் சேவை செய்யும் பேறு எனக்குக் கிடைக்க வேண்டும்"

- கேணல் கிட்டு


# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் 13-01-1995

அன்பளிப்பு 40P


கேணல் கிட்டு அவர்களினதும், சக வேங்கைகளினதும் இரண்டாம் ஆண்டு நினைவலைகள் நடுப்பக்கத்தில்...

# நவீன துறைகளில் வளர்வதன் மூலமே தமிழீழத்தில் சாதனைகள் புரிய முடியும்!

## ☐ தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன்

**"கட்டியெழுப்பப்படவுள்ள தமிழீழத்தின் வளர்ச்சிக்கு ஆயுதத்தை மட்டும் நம்பியிராது எல்லாத் துறைகளிலும் வளர வேண்டும் என்பதில் நாம் அக்கறையாக உள்ளோம்; எதிர்காலத்தில் எலக்ரோனிக் கம்பியூட்டர் யுகம் வரப்போகின்றது. இன்னும் அதில் நாம் எவ்வளவு வேகமாக வளர்கின்றோமோ அதன் மூலமே நாம் மாற்றத்தை அடைவோம்".**

என நிதர்சன நிறுவனத்தின் ஒளிவீச்சு, புலிகளின் குரல், தொழில் நுட்பப்பிரிவு, படப்பிடிப்பு பிரிவுகளைச் சேர்ந்தோரை அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில்:

ஒவ்வொரு துறைசார்ந்தோரும் தமது துறைகளில் தொடர்ந்து வளர்ச்சியடைய வேண்டும். அந்த வளர்ச்சி மூலமே நிறைய விடயங்களைச் சாதிக்கமுடியும்.

ஒவ்வொரு துறையிலும் ஈடுபட்டோர் தாம் செய்யும் பணிகளில் திருப்தியடைதல் கூடாது; திருப்தியடைந்த மனிதர்களாக இருப்பது வளர்ச்சிக்குரியதல்ல. திருப்திகாணாத மனிதர்களாக இருந்தாலே நாம் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டிருப்போம். இதனால் நிறைய விடயங்களைத் தரமாக்க முடியும். இதற்காக நிறையப் படிக்க வேண்டும். அறிவை வளர்க்க வேண்டும்.

உதாரணமாக ஒரு படம் எடுப்பவர் நூற்றுக்கணக்கான படங்களை பார்த்திருக்க வேண்டும். பொறுப்புணர்வுடன் பலரது அபிப்பிராயங்களையும் பெற்று செயற்படவேண்டும். கலைக்கு சர்வாதிகாரம் இருக்கக் கூடாது. அப்படியிருந்தால் கலைத்துறையில் வளரமுடியாது. அத்துடன் காலமாற்றத்திற்கு ஏற்பவும் வளர்ந்து செயற்படவேண்டும்.

எமது தேசத்தின் இலைமறை காயாக மறைந்திருப்பவர்களின் திறமையை வெளிக்கொணர வேண்டும். இதன் மூலமே எமது வளர்ச்சியைக் கூட்ட முடியும். வசதிகள் இல்லாத நம்மிடமிருந்து தரமான படைப்புகள் வெளிவருவதை வெளியுலகம் அதிசயமாகப் பார்க்கின்றது. அதற்கேற்ப நாம் இன்னமும் வளரவேண்டும்.

தமிழீழத்தில் எடுக்கப்படும் திரைப்படங்களில் போராளிகளை மட்டும் காண்பிக்காது, இப்போராட்டத்தில் மக்கள் படும் துன்பங்களையும் நெருக்கடிகளுக்கு மத்தியில் மக்கள் எப்படி வாழ்கின்றனர் என்பதையும் வெளிப்படுத்த வேண்டும்.

கட்டியெழுப்பப்படவுள்ள தமிழீழத்தின் வளர்ச்சிக்கு ஆயுதத்தை மட்டும் நம்பியிராது, எல்லாத் துறைகளிலும் வளரவேண்டும் என்பதில் நாம் அக்கறையாக உள்ளோம். எதிர்காலத்தில் எலக்ரோனிக் கம்பியூட்டர் யுகம் வரப்போகின்றது. இன்னும் அதில் நாம் எவ்வளவு வேகமாக வளர்கின்றோமோ அதன் மூலமே நாம் மாற்றத்தை அடைவோம். ■

# மோதல் தவிர்ப்பு
## தலைவர் பிரபாகரன் - ஜனாதிபதி சந்திரிகா
# கைச்சாத்து

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரச படைகளுக்கும் இடையிலான 'மோதல் தவிர்ப்பு' கடந்த, சனி நள்ளிரவு முதல் அமுலாகியுள்ளது. இதற்கான மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரும் தமிழீழத் தேசியத் தலைவருமான வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களும், சிறீலங்காப் பாதுகாப்பு அமைச்சரும் சிறீலங்கா ஜனாதிபதியுமான சந்திரிகா அவர்களும் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்த ஒப்பந்தத்தின்படி இருதரப்பினரது முகாம்களும் அமைந்துள்ள எல்லைகளில் இருந்து 600 மீற்றர் (1900 அடி) பிரதேசம் இராணுவ சூன்ய பிரதேசமாக (Demilitarised Zone)ப் பிரகடனப் படுத்தப்படுகிறது. ஆயினும் இப் பிரதேசத்துள் தங்கள் சொந்தப் பதுங்குகுழிகள் உள்ள பகுதிகளில் 100 மீட்டருக்கு நடமாடுவதற்கான உரிமை ஒவ்வொரு பகுதிக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 16 ஆம் பக்கம்...

# 'தேசியத் தலைவருக்கு அம்பாள் அனைத்து வல்லமைகளையும் வழங்குவாள்'

## ☐ சிறப்பு வழிபாட்டு வைபவத்தில் தங்கம்மா அப்பாக்குட்டி

"போருக்கு உரியவள் துர்க்கை. அவளுக்கு இன்று நாம் சிறப்பு வழிபாடும், நவசக்தி அர்ச்சனையும் செய்து, எமது தலைவர் பிரபாகரனுக்கு நல்வாழ்த்துவேண்டி நிற்கின்றோம். எமது தேசியத் தலைவருக்கு அனைத்து வல்லமைகளையும் அம்பாள் வழங்குவாள்".

- இவ்வாறு குறிப்பிட்டார் தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோவில் பரிபாலன சபைத் தலைவி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி.

தமிழீழத் தேசியத் தலைவரின் 40 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, அவருக்கு நல்வாழ்த்து வேண்டி, கடந்த சனியன்று (2-6. 11. 1994) காலை தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோவிலில் நடைபெற்ற சிறப்பு வழிபாட்டில் கலந்துகொண்டு, வாழ்த்துரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தமது வாழ்த்துரையில் மேலும் கூறியதாவது, "இன்று ஒரு சிறப்பான நாள்; நேர்மை, நீதி, திறமை அனைத்தும் கொண்ட ஒரு தலைவனை நாம் பெற்றுள்ளோம். இந்தத் தலைவர் தெய்வசக்தி படைத்தவர்.

அல்லலுறும் தமிழீழ மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கென, இறைவனால் அனுப்பப்பட்டவர் தான் எமது தலைவர் பிரபாகரன்.

அவர் சிறப்புற வாழ்ந்து, எமது தேசத்தை எமக்குப் பெற்றுத்தர வேண்டும்.

- இப்படி அவர் கூறினார். ■




மாவீரர் நினைவின்போது...
தலைவரின் மாவீரர் நாள் செய்தி உள்ளே...

# தமிழ் மக்களின் புனர் வாழ்வுக்கு 40 கோடி ரூபா

தமிழீழ மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அவர்களது புனர்வாழ்வுத் திட்டங்களுக்காக 40 கோடி ரூபாவினை (816 மில்லியன் அமெரிக்க டாலர்) உடனடியாக ஒதுக்க சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா ஒப்புக்கொண்டுள்ளார்.

சிறீலங்காவின் இராணுவ நடவடிக்கைகளினால் அகதிகளாக்கப்பட்டுள்ள இலட்சக்கணக்கான மக்களின் புனர்வாழ்வுத் திட்டங்களுக்கும், வீடுகள், பொது இடங்கள், சாலைகள், மின்சார விநியோகம், போக்குவரத்துப் பாதைகளைத் திருத்தல், தொலைபேசி வசதிகளை ஏற்படுத்தல் என்பவற்றுக்கும் இத்தொகை பயன்படுத்தப்படுமெனத் தெரிகிறது. ஆயினும் வடக்கு -கிழக்கில் சிறீலங்கா அரசபடைகளால் ஏற்படுத்தப்பட்டுள்ள சேதங்களைச் சீரமைப்பதற்கும், அகதிகளாக்கப்பட்டுள்ள இலட்சக்கணக்கான மக்களுக்கு நிரந்தரப் புனர்வாழ்வு அளிப்பதற்கும் வழங்கப்படவுள்ள இத்தொகை மிகச் சிறியதே என பொருண்மிய திட்டமிடல் அவதானிகளால் கருதப்படுகின்றது. ■

# இருவாரங்களுக்குப் பரீட்சார்த்தமானது என்ற சந்திரிகாவின் அறிவிப்பால் அதிருப்தி

சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா இருவாரங்களுக்கு பரீட்சார்த்தமான 'மோதல் தவிர்ப்பு' ஒன்றையே தமது அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக அறிவித்தமை அவதானிகள் இடையே பலத்த அதிருப்தியை ஏற்படுத்தியதாக "டெக்ஸ்டர் குருஸ்" எனும் அனைத்துலக செய்தியாளர் தெரிவித்துள்ளார். "சிறீலங்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாணத்தில் நடந்த இரண்டாம்கட்ட பேச்சுவார்த்தையின்போது முதலில் இருதரப்பினரும் போர் நிறுத்தத்திற்கே இணங்கினர். ஆயினும், கடந்த வெள்ளிக்கிழமை (6 ஆம் நாள்) சிறீலங்கா ஜனாதிபதியின் அறிவித்தலில் இருவாரங்களுக்கு மட்டுமே பரீட்சார்த்தமான மோதல் தவிர்ப்பினை மேற்கொண்டுள்ளதாக அறிவித்துள்ளமை ஆச்சரியத்தை அளிப்பதுடன், இருதரப்பினருக்கும் இடையில்தொடரும்

தொடர்ச்சி 16 ஆம் பக்கம்...

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழ முதனிலைத் தேர்வு

## ஆனைப்பந்தி மெ.மி.த.க.வி. மாணவன் முதலிடம்

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினரால் இந்த ஆண்டு நடத்தப்பெற்ற, 5 ஆம் ஆண்டு இறுதித் தேர்வான தமிழீழ முதனிலைத் தேர்வுக்கான பெறுபேறுகள், அண்மையில் வெளியாகியுள்ளன.

பெறுபேறுகள் பாடசாலைகளுக்கு, கல்விக் கோட்டப் பணிமனைகளினூடாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. யாழ். மாவட்டத்தின் 13 கல்விக் கோட்டங்களிலும் கிளிநொச்சி மாவட்டம் -பளைக் கல்விக் கோட்டத்திலுமாக 15 ஆயிரம் மாணவர்கள் இத்தேர்வில் தோற்றியிருந்தனர்.

இத்தேர்வில் நல்லூர் கோட்டம் ஆனைப்பந்தி மெ. மி. த. க. வித்தியாலயத்தைச் சேர்ந்த ஜோ. சிவராமசர்மா 500 இற்கு 476 புள்ளிகளையும், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த துரைராஜா இரஜீவன் 471 புள்ளிகளையும், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த இ. கேதாரசர்மா 466 புள்ளிகளையும் பெற்று முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுள்ளனர்.
நான்காவது இடத்தை உடுவில் மகளிர் கல்லூரி, புனித பரியோவான் கல்லூரி, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பெற்றுள்ளனர். ■

# "இதுதான் தர்மம் என்று எவரும் எல்லை போட முடியாது"

**■ பாரதக்கதை வெளியீட்டு விழாவில் புதுவை இரத்தினதுரை**

"தர்மத்திற்கு எவரும் எல்லைபோட முடியாது; இதுதான் தர்மம் என எவரும் வரையறுக்கவும் முடியாது. உயிர்ப்பலி தர்மம் அல்ல என்று சொல்வது பிழை; எதிரியின் வலுவை அழிப்பதற்கு நாம் உயிராயுதத்தையே பயன்படுத்துகின்றோம்".

நாவலர் கலாச்சார மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற வரதரின் பாரதக் கதை நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு பேசும்போது கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து பேசும்போது, "வரதர் ஐயா அறியப்பட்ட எழுத்தாளர். மறுமலர்ச்சியை உருவாக்கியவர். செய்தித்தாள் துறை வரலாற்றில் சுவடு பதித்தவர். எமது மூத்த எழுத்தாளர் இவர் வியாசரின் பாரதக் கதைக்கு ஏன் இன்னொரு வடிவம் கொடுக்க விரும்பினார் என்று புரியவில்லை.

தர்மத்திற்கு எவரும் எல்லை போடமுடியாது; அது மாற்றமடையக்கூடும். ஒரு ஆக்கத் திறமையுடன்தான், ஆக்க இலக்கியத்தை இன்னொரு ஆக்க இலக்கியக்காரன் பார்க்கமுடியும். இந்த நூலை வரதர், காலத்தின் தேவைக்காக எழுதினார் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. நாம் புதிய செல் நெறியில் செல்கின்றோம்; எமது நகர்வு சரியானது என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. பாரதக் கதையை வாசித்த பாரதி, பாஞ்சாலியை இழுத்த சம்பவத்தைக் கண்டு கொதித்தான்; அவனுக்கு அது பிடிக்கவில்லை; அது காலத்திற்கு தேவையானது. அதுவே பாஞ்சாலி சபதம்.

இன்றைய இந்த வெளியீடு காலத்திற்குப் பொருந்தாது என்றே சொல்வேன். அடைமழையில் ஐஸ்கிறீம் குடிக்கமுடியாது. தேநீர்தான் தேவை.

பாரதத்தையும் இராமாயணத்தையும் எவரும் வாசிக்காமல் இருக்க முடியாது என்பதில் நான் ஒத்த கருத்துக்கொண்டவன்; ஆனால் இன்றைய தேவை இதுவல்ல. எமது போராட்டக் கதை இலக்கியமாகப் படைக்கப்படவேண்டும். இந்த மூத்த எழுத்தாளரிடம் இதைத்தான் நாம் எதிர்பார்க்கின்றோம்.

கோவில்களில் நடைபெறும் சொற்பொழிவுகளில் கருத்துக்கள் திரிபுபடுத்தப்படுகின்றன. சொற்பொழிவாளர்கள் கருத்துத்திரிவு பற்றி யோசிக்காமல் பேசிவிட்டு, பணம் பெற்றுக்கொண்டு போய்விடுகிறார்கள். ஏதோ ஒரு அலுவலாக சமீபத்தில் கோவில் பக்கம் செல்ல நேரிட்டது. அங்கு புஸ்பா தங்கத்துரையின் கதையைப்போல மதச் சொற்பொழிவு நடைபெறுவதை அவதானித்தேன். இது தவிர்க்கப்படவேண்டும்.

மாணவப் பருவத்தில் தேர்வுக்காக நான் பாரதக்கதையைப் படித்துள்ளேன். அதன் பின்னர் இந்த நூலை வாசிக்கவேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு நேற்று ஏற்பட்டது. இந்த நூலாசிரியரின் சொந்த ஊரான பொன்னாலைக்கு இப்போது செல்லமுடியுமா? இதை எழுதுங்கள். வரதர் எழுதிய 'தீ வாத்தியார்' எங்கே? அதை நூலாகத் தந்திருந்தால் சந்தோசப்பட்டிருப்பேன்" என்றார். ■

# இராணுவத்தின் கொடூரத் தாக்குதலால்

## உடலின் ஒரு பகுதி செயலிழந்துவிட்டது

**■ விடுவிக்கப்பட்ட படகோட்டி தெரிவிப்பு**

"சிறீலங்கா படையினரின் ஈவிரக்கமற்ற கெடுபிடிகளால் தாக்குதல்களுக்கும் இம்சைக்கும் இலக்காகிய எனக்கு, ஒரு கால் எழுந்து நடக்க முடியாதவாறு செயலிழந்துள்ளதோடு நாரிப் பகுதியும் செயலிழந்துவிட்டது"

பதின்னான்கு மாதங்களுக்கு மேலாக பலாலி சிறீலங்கா இராணுவ தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டு அண்மையில் வெளிவந்தவர்களில் ஒருவரான கிளாலி படகோட்டி சந்தியாப்பிள்ளை சவுந்தரநாயகம், தனக்கு நேர்ந்தவற்றை கண்ணீர் மல்கிய நிலையில் பருத்தித்துறை துறைமுகத்தில் வைத்து எமது வடமராட்சி செய்தியாளருக்கு முன்கண்டவாறு விபரித்தார்.

அவர் அங்கு மேலும் விபரிக்கும் போது "நான் கிளாலியில் படகோட்டியாக செயற்பட்டேன். 29-7-93 அன்று வழமைபோல் படகோட்டிச் சென்றபோது, அக்கடல் பகுதியில் வந்த கடற்படையினர் என்னைக் கைது செய்தனர்.

என்னைக் கைது செய்த படையினர் கறுக்காய்த்தீவு இராணுவ முகாமுக்குக் கொண்டு சென்றனர். அங்கு இருபத்திநான்கு மணிநேரம் படையினரின் இம்சைகளுக்கும் கொடுமைகளுக்கும் ஆளானேன். என்னை எல்லோரும் மாறி மாறித் தாக்கினர். அதேசமயம் எனது கண்கள் கட்டப்பட்டன. கைகள் இரண்டும் பின்புறமாகக் கட்டப்பட்டன. இந்த இரண்டு சித்திரவதைகளையும் என்னால் தாங்கமுடியாதபோது, எனது இரு தொடைகளிலும் குண்டூசிகளை அடுக்கடுக்காக ஏற்றினர்.

குண்டூசி ஏற்றுவது எனக்குத் தெரிந்தது. ஆனால் என்னால் இதனைப் பார்க்கமுடியவில்லை. இரண்டு தொடைகளும் குண்டூசிகளினால் நிறைந்து இருந்ததை என்னால் அப்போது உணரமுடிந்தது. ஆனால் இப்போது எனது இடதுகால் உணர்ச்சியற்றுப் போய்விட்டது.

கறுக்காய்த்தீவு முகாமில் ஒரு நாள் பூராவும் இந்த சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் பலாலிக்கு மறுநாள் எடுத்துச் சென்றனர். அங்கும் பதினொரு தினங்கள் படையினரினால் தாக்கப்பட்டேன். எனது காலும் இடுப்பும் செயலற்றுப் போனதினால் எனது எதிர்கால வாழ்வே அழிந்து போனதற்குச் சரியாகிவிட்டது" என்றார்.

சங்கானையைச் சேர்ந்த ஐயம்பிள்ளை சோதிநாதன் என்பவர் தனக்கு ஏற்பட்ட கதியை விபரிக்கையில், "19. 11. 93 அன்று காரைநகரில் குடும்பத்துடன் தங்கி இருந்தபோது படையினர் வந்து விசாரணை எனக்கூறி அழைத்துச் சென்றனர்; நான் பலாலியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது 10. 01. 94 அன்று இராணுவ சார்ஜன் ஒருவன் எமது இடத்திற்கு இரவு 8. 00 மணிக்கு வந்து எங்களை ஆடையின்றி அரைமணிநேரம் ஆடுமாறு பணித்தான். அங்கே எங்களால் இதனை மறுக்கவா முடியும். எங்களை இரவு பகலாக சங்கிலிப் பிணைப்புடனேயே வைத்திருப்பர்.

எங்களைப் படையினர் தலைகீழாக நிற்க வைத்து இரண்டு இஞ்சிக் குழாய்களினால் கண்டபடி தாக்குவர். உடைந்த குழாய்களை வாயில் திணித்து விடுவர். கைதிகளுக்கு கைதிகள் அடிக்கவைத்து இராணுவத்தினர் வேடிக்கை பார்ப்பார்கள். எங்களை இம்சைப்படுத்துவதிலும் வேதனைப்படுத்தி புழுபோல துடிக்க வைத்தால் படையினருக்கு பெருமகிழ்ச்சி" என்றார். ■

# மட்டக்களப்பில் அரச படைகளால் 5182 பேர் கொல்லப்பட்டுள்ளனர்

மட்டக்களப்பில் சிறீலங்கா அரச படையினர் மேற்கொண்ட வன்முறைகளில், இதுவரை 5,182 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு செயலக புனர்வாழ்வுப் பகுதியில், மேற்படி கொல்லப்பட்டவர்கள் பற்றிய விபரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 1990 யூன் மாதம் முதல் இடம்பெற்றுவரும் சிறீலங்காப் படையினரின் வன்முறைகளிலேயே இந்த 5,182 பேரும் கொல்லப்பட்டுள்ளனர். இவ்வாறு கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும் இத்தொகையானது சரியானது அல்ல எனவும் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை இதைவிட அதிகமானது எனவும் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திரு. பத்மநாதன் தெரிவித்துள்ளார். ■

# திருமலைக் கிராமங்களுக்கு பொருட்கள் எடுத்துச்செல்ல படையினர் கெடுபிடி

திருகோணமலை மாவட்டத்தின், கிராமங்களில் வாழும் மக்களுக்குப் பலவகையான பயன்பாட்டுப் (பாவனை) பொருட்களும் அத்தியாவசிய பொருட்களும் கட்டடப் பொருட்களும் எரிபொருள் வகைகளையும் எடுத்துச்செல்வதில், படையினர் தொடர்ந்து கட்டுப்பாடுகளை விதித்துவருகின்றனர்

கிராமங்களில் வாழும் மக்கள் தமக்குத் தேவையான இப்பொருட்களை எடுத்துவருவதற்கு, அவ்வப்பகுதியில் இருக்கும் படை (இராணுவம்) முகாம் பொறுப்பதிகாரிகளின் கட்டுப்பாட்டுக்கு அமைவாகவே, நடந்துகொள்ளவேண்டிய நிலை தொடர்ந்து காணப்படுகின்றது.
நகரப்புறங்களில் இருக்கும் கடைகளில் இருந்து, இப்பொருட்களை கொள்வனவுசெய்து எடுத்து வருவதற்கும்கூட, படைமுகாம் பொறுப்பதிகாரியின் எழுத்துமூல அனுமதி கோரப்படுகின்றது. இதனால் கிராமங்களில் வாழும் மக்கள் தமக்கான அன்றாட உணவுப்பொருட்களை எடுத்து வருவதற்குக்கூட, படை அதிகாரியின் அனுமதியை பெறுவதற்காக, முகாம்களில் நீண்டநேரம் காத்திருக்க வைக்கப்படுகின்றனர்.
மேலும் மாதந்தோறும் உணவுப் பொருட்கள், பயன்பாட்டுப் பொருட்கள், எரிபொருளாக மண்ணெண்ணெய் என்பன குறிப்பிட்ட அளவுகளில் மட்டுமே எடுத்துவர அனுமதிக்கப்படுகின்றது. அத்துடன் அரிசி, சீனி, கோதுமைமா, தீப்பெட்டி, தேங்காய் எண்ணெய், மண்ணெண்ணெய், பால்மா வகைகள், சவர்க்காரம் போன்ற பொருட்களும் குறிப்பிட்ட அளவுக்குமேல் எடுத்துவருவதை படையினர் தடுத்துவருகின்றனர்.
படையினரின் இச்செயற்பாட்டால், கிராமப்புறங்களில் வாழும் சாதாரண மக்கள் பெரும் துன்பத்தை அனுபவிக்கவேண்டி இருப்பதாக, அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன. ■

# சமூகச் சீர்கேடு புரிந்தவருக்கு தண்டனை விதிப்பு

சமூகச்சீர்கேடு புரிந்த ஆணுக்கு, குற்றப்பணமும் சிறைத்தண்டனையும் என சாவகச்சேரி நீதிமன்று தீர்ப்பளித்துள்ளது.

வண்ணாங்கேனி பளைப் பகுதியைச் சேர்ந்த திருமணம் செய்த ஆண் ஒருவர், வேறு ஒரு பெண்ணுடன் தொடர்புவைத்திருந்தார் என சாவகச்சேரி காவல் துறையினர் இவரை மன்றில் முற்படுத்தினர்.

மன்றானது குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பெயரில், இவரை எச்சரித்து, இனி எதுவித தொடர்பும் இல்லாது இருக்கும்படியும் குற்றப்பணமாக 2500 ரூபாவும், ஒன்றரை மாதச் சிறையும் என தீர்ப்பளித்துள்ளது. ■

# அக்கரைப்பற்றுப் பகுதியில் படையினர் தீவிர தேடுதல்

பாதுகாப்புப் படையினர் அக்கரைப்பற்றுப் பகுதியில், தமது தேடுதல்களைத் தீவிரப்படுத்தியுள்ளனர். அண்மையில் பெய்த மழையையும் பொருட்படுத்தாமல், மேற்கொள்ளப்படும் இச்சுற்றிவளைப்புத் தேடுதல்களில், தமிழ் மக்கள் முகாம்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றனர். வீதிகளிலும் சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்தின் எல்லைப்புறங்களிலும் காட்டுப்பகுதிகளிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டு இருக்கின்றன. படையினரின் இந்நடவடிக்கைகளின் காரணமாக, விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ■

# மன்னார் கடலில் மீன்பிடிக்க நிபந்தனை

மன்னார் கடற்பிராந்தியத்தில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்கு, பாதுகாப்பு அமைச்சு பல நிபந்தனைகளை விதித்துள்ளது.

பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டில் மட்டுமே மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளமுடியும் என்றும் கடலில் சுமார் ஒரு மைல் தூரம் வரையுமே செல்லமுடியும் எனவும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. இதனைவிட, பகல் நேரங்களில் மட்டும் கடற்றொழில் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. மன்னார் வடபகுதிக் கடலில் காலை 6 மணி முதல் மாலை 4 மணி வரையும், மன்னார் தென்பகுதிக் கடலில் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையும் மாத்திரம் மீன்பிடிக்கமுடியும். பொறிப் (இயந்திரம்) படகில் செல்வோர் 15 குதிரை வலுக்கொண்ட பொறிகளையே வைத்திருக்கலாம். ஒரு படகில் நாலு பேருக்குட்பட்டவரே செல்லமுடியும். மீனவர்கள் பாதுகாப்புப் படையினரால் வழங்கப்பட்ட சிறப்பு அடையாள அட்டையை வைத்திருக்கவேண்டும். ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் படையினர் குறிப்பிடும் இடத்திலிருந்து புறப்பட்டு, மீண்டும் அதே இடத்திற்கு வந்து சேரவேண்டும். ஆகிய நிபந்தனைகள் படையினரால் விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பழைய "சித்தை"யில் புதிய இரசம்

தேசிய இனங்களுக்கிடையிலான பிரச்சினைக்குத் தனது அரசு, 1957 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டு, சிங்கள பௌத்த பேரின வாதிகளின் அழுத்தத்தால் கைவிடப்பட்ட பண்டா -செல்வா ஒப்பந்தத்தின் அடிப்படையில், தீர்வினை முன்வைக்கும் என சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா கூறியுள்ளார்.

26 ஆடி 1957 திகதியிடப்பட்ட 'பண்டா - செல்வா ஒப்பந்தம்' என்ற ஆவணத்தில் உள்ள சில முதன்மையான பகுதிகளை இங்கு மீள நினைவுகூருவது இன்றைய நிலையைத் தெளிவுபடுத்த உதவும்.

"முன்னாள் பிரதம மந்திரி எஸ். டபில்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா சமஸ்டி அரசியலமைப்பை அமைப்பது பற்றியோ அல்லது பிரதேச சுயாட்சியை (Regional Autonomy) ஏற்படுத்துதல் அன்றேல் சிங்களம் மட்டும் எனும் அரசகரும மொழிக்கொள்கையால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கு எத்தகைய நடவடிக்கைகளை எடுப்பது பற்றியோ கலந்துரையாடுவதற்கு தனது அரசு தயாராக இல்லை என ஆணித்தரமாக விளக்கினார். இதன்பின்னர் சமஸ்டிக் கட்சியானது, (அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி) தனது அடிப்படைக் கொள்கைகள், நோக்கங்கள் என்பவற்றைச் சரணாகதி அடையச் செய்யாமல் அல்லது கைவிடாமல் ஏதாவது வகையில் அரசுடன் ஒத்துப்போக (Adjustment)க் கூடிய வழிவகைகள் உண்டா என்ற கேள்வி எழுந்தது. இந்நிலையில் பிரதம மந்திரி, தனது அரசினால் முன்வைக்கப்படவுள்ள பிரதேசசபைகள் மசோதா (Regional Councils Bill Draft) மாதிரியானது, சமஸ்டிக் கட்சியுடன் ஒத்துப் போகக்கூடிய சில நியாயமான விடயங்களைக் கொண்டிருப்பதாகவும் அதுபற்றி ஆராயும்படியும் கேட்டுக்கொண்டார்" என பண்டா - செல்வா ஒப்பந்தத்தின் மூன்றாவது, நான்காவது பந்திகள் விளக்குகின்றன.

எனவே பண்டா - செல்வா ஒப்பந்தமானது, தமிழர் பிரச்சினைக்கான இனப்பிரச்சினைத் தீர்வாக அல்லாமல், தமிழரசுக்கட்சி, சிங்கள பௌத்த பேரினவாதிகளின் சார்புடைய சிறீலங்கா சுதந்திரக் கட்சியால் "சிங்களம் மட்டும் சட்டம்" இயற்றப்பட்டுவிட்ட சூழலில், தமது பாராளுமன்ற பதவிகளுக்கு ஆபத்து ஏற்படாதவகையில், சிங்கள அரசுடன் எவ்வாறு அனுசரித்து (Adjustment) ஒத்துப்போகலாம் என எழுப்பிய கேள்விக்கு விடையாகப் பிறந்த ஒன்று. 'ஒத்துப்போதல்' என்பது வேறு; 'ஒத்துவாழ்தல்' என்பது வேறு; இதனை அன்றைய தமிழ்த் தலைமைத்துவம் சரியாக உணரவில்லை; அல்லது உணர்த்தவில்லை. "நீ எதைச் சொன்னாலும் செய்தாலும், உனது அமைப்பு முறைக்குள் எப்படியாவது நாம் வாழ்ந்தேயாகவேண்டும்" என்பது ஒத்துப்போதல். இங்கு மக்கள் மறக்கப்பட்டுவிடுகிறார்கள். ஆனால் ஒத்துவாழுதல் என்பது, இலங்கைத்தீவின் மற்றைய தேசிய இனத்துடன் சமமானமுறையில், எமது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், உரிமைகள் நிரந்தரமாக நிறுவப்பட்ட அமைப்பில் கூடிவாழுதல். இதுதான், இன்றைய தமிழீழ மக்களின் தேவை. எனவே தேவை மாறிய நேரத்தில் -நோக்கு தெளிவாக முன்வைக்கப்பட்ட நிலையில், ஜனாதிபதி சந்திரிகா முன்னோக்கிச் சிந்திக்காது பின்னோக்கிச் சிந்திப்பது, வியப்பாக உள்ளது. அதுவும் "நாங்கள் அதிகளவில் அதிகாரப்பரவலாக்கம் செய்யப்போகின்றோம் என மக்களுக்குத் தெளிவாகக் கூற விரும்புகிறேன்; எங்களுடைய முன்வைப்பானது, மிக அதிக அளவிலான அதிகாரப் பரவலாக்கத்தைக் கொண்டிருக்கும். மக்கள் அதற்கே வாக்களித்தனர். நாங்கள், முன்பே விற்கப்பட்டுள்ள பழைய யோசனைகளை விற்கவிரும்பவில்லை" எனக்கூறும் சந்திரிகா, பின்னர் முன்னுக்குக்குப் பின் முரணானவகையில், தனது தீர்வும் பழைய யோசனைகளின் அத்திவாரத்தில் எழுப்பப்படும் எனக்கூறுவது அரசியல் யதார்த்தத்தைப் புறக்கணிப்பதாக உள்ளது.

மேலும் சந்திரிகா அம்மையார், எல்லோரும் கையாண்ட 'அதிகாரப் பரவலாக்கம்' (Devolution) எனும் சொற்றொடரைப் பிரயோகிக்கின்றார். அதிகாரப் பரவலாக்கம் என்பது கூம்பகத்தன்மையானது. உச்சத்தில் அனைத்து அதிகாரங்களும் குவிக்கப்பட்ட நிலையில், அந்த அதிகாரங்களைப் பயன்படுத்தி, மக்களை நிர்வகிப்பது. இது, 'ஆளுவோர்' 'ஆளப்படுவோர்' என்ற பிரிவினையை உறுதிப்படுத்தக் கூடியது. எனவே 'அதிகாரப் பரவலாக்கம்' என்ற சொற்றொடரைத் தழுவிய சிந்தனை, "இலங்கைத்தீவில் இருநாட்டினங்கள் (Two Nations) உள்ளன; இவற்றுக்கு சுயநிர்ணய உரிமையுண்டு" என்ற அரசியல் யதார்த்தத்தின் அடிப்படையில் உருவாகக்கூடிய ஆரோக்கியமான தீர்வினுக்கு தொடக்க ஆப்பாக அமைந்துவிடும் அபாயம் உள்ளது.

இந்நிலையில், தன்னலமறுப்புடன் உறுதியான துணிவான தலைமைத்துவமாகத் திகழும் இன்றைய தமிழர்களின் தேசியப் பாதுகாப்பின் அரணான தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் பழைய தமிழ்த் தலைமைத்துவங்களுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை சந்திரிகா அம்மையார் மறக்கக்கூடாது. இலங்கைத்தீவின் அமைதிக்கும், இலங்கைத்தீவின் இரு நாட்டினங்களினதும் ஏனைய அனைத்து மக்களதும் நல்வாழ்வுக்கும் விடுதலைப் புலிகளும் -சிறீலங்கா அரசும் ஏற்படுத்தியுள்ள 'மோதல் தவிர்ப்பு' ஒப்பந்தத்தை போர் நிறுத்தமாக மாற்றி, இரு நாட்டினங்களும் கௌரவத்துடனும் சமத்துவத்துடனும் வாழக்கூடிய தீர்வினைக் கொண்டுவருதல் சந்திரிகாவின் தலைமைத்துவக் கடமை. புதிய திராட்சை இரசத்தை 'பழைய சித்தை'களில் வார்க்கக்கூடாது என்பதை, சந்திரிகா மறத்தல் கூடாது. ■

# 1994 மாவீரர் நாளை முன்னிட்டு தலைவர் அவர்கள் வழங்கிய செய்தி

## எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே!

இன்றைய நாள் மாவீரர் நாள்.

இன்றைய நாளை நாம் எமது தியாகிகளின் திருநாளாக, எமது தேசத்தின் பெருநாளாக, எமது போராட்டத்தின் எழுச்சி நாளாகக் கொண்டாடுகின்றோம்.

எமது தேசம் விடுதலைபெறவேண்டும்; எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, தன்னாட்சி உரிமைபெற்று தன்மானத்துடன் வாழவேண்டும் என்ற உயரிய இலட்சியத்திற்காகத் தமது இன்னுயிரை ஈகம்செய்த எம்முயிர்ப் போராளிகளை, நாம் எமது இதயக் கோவிலில் பூசிக்கும் புனித நாள் இன்று.

உலக வரலாற்றில் எங்குமே, எப்பொழுதுமே நிகழ்ந்திராத அற்புதமான தியாகங்கள் இந்த மண்ணில் நிகழ்ந்திருக்கின்றன. மனித ஈகத்தின் உச்சங்களை எமது போராட்ட வரலாறு தொட்டு நிற்கிறது. இந்த மகோன்னதமான தியாக வரலாற்றைப் படைத்தவர்கள் எமது மாவீரர்கள்.

விடுதலை என்பது ஒரு அக்கினிப் பிரவேசம்; நெருப்பு நதிகளை நீந்திக் கடக்கும் நீண்ட பயணம். தியாகத்தின் தீயில் குதிக்கும் யாகம். இந்த விடுதலை வேள்விக்கு தமது உயிரை ஈகம் செய்தவர்கள் மாவீரர்கள்.

தமிழர் வரலாற்றில் என்றோ மாண்டுபோன வீர மரபு மீண்டும் மறுபிறப்பு எடுத்தது; அடிமைத்தனத்தின் அமைதியைக் குலைத்துக்கொண்டு ஒரு புயல் எழுந்தது. சருகாக நெரிபட்ட தமிழன், மலையாக எழுந்து நிமிர்ந்தான்; அடிமை விலங்குகளால் பிணைக்கப்பட்டு, நீண்ட நெடுங்காலமாகத் தூங்கிக்கொண்டிருந்த தமிழ்த் தேசம் விழித்துக்கொண்டது. இந்தத் தேசிய எழுச்சிக்கு மூச்சாக இருப்பவர்கள் எமது மாவீரர்கள்.

எமது விடுதலைக் காப்பியத்தின் ஒவ்வொரு அத்தியாயத்திலும், ஒவ்வொரு பக்கத்திலும், ஒவ்வொரு பந்தியிலும் எமது மாவீரர்களின் தியாக வரலாறு நெருப்பு வரிகளால் எழுதப்பட்டிருக்கிறது.

விடுதலைக்காக, எமது தேசம் மதிப்பிடமுடியாத பெருவிலையைக் கொடுத்திருக்கிறது; விடுதலைக்காக, இந்த மண்ணில் இரத்த ஆறு ஓடியிருக்கிறது; விடுதலைக்காக, இந்தப் பூமி ரணகளமாக மாறியிருக்கிறது; விடுதலைக்காக, எமது வீரர்கள் இன்றும் செத்துக்கொண்டே இருக்கிறார்கள். இந்த நிலத்தில் புதையுண்டிருக்கும் ஆயிரமாயிரம் சமாதிக்கற்களும் விடுதலையையே குறியீடுசெய்து நிற்கின்றன. வீதிகளில், சந்துகளில், சுவர்களில் நாம் சந்திக்கும் மாவீரர்களது திருவுருவங்களும் விடுதலையின் சாட்சிகளாகவே எமக்குக் காட்சி தருகின்றன.

விடுதலை என்ற இலட்சியத்தை நாம் இலகுவாகத் தேர்ந்தெடுக்கவில்லை; வரலாறுதான் அதை எம்மிடம் கட்டாயமாகக் கையளித்தது; சுதந்திரம் வேண்டுவதைத் தவிர வேறு வழி எதையும் வரலாறு எமக்கு விட்டுவைக்கவில்லை; ஓயாத புயலாக வீசிய ஒடுக்குமுறையின் கோரத்தாண்டவம் விடுதலைப் பாதையில் எம்மைத் தள்ளிவிட்டது. இன அழிப்பின் தாங்கமுடியாத நெருக்குவாரங்களின் விளைவாக, நாம் ஒரு விதிசெய்துகொண்டோம்; எமது தலைவிதியை நாமே நிர்ணயிக்கத் தீர்மானித்தோம்; விடுதலைபெற்ற மனிதர்களாக வாழ்வதற்கு நாம் முடிவுசெய்துகொண்டோம்.

விடுதலை நோக்கிய எமது இலட்சியப் பயணம் ஆரம்பமாகி, நீண்ட காலம் ஆகிறது. இந்த நீண்ட பயணத்தில் நாம் எத்தனையோ சவால்களையும் சோதனைகளையும் சந்தித்துவிட்டோம். எத்தனையோ சக்திகள் எமக்கு எதிராகக் கிளர்ந்தன; எமது வல்லமைக்கு மிஞ்சிய வல்லாதிக்க சக்திகளும் எமக்கு விரோதமாக எழுந்தன. எமது பாதைக்கு முன்னே பாரிய முட்டுக்கட்டைகள் போடப்பட்டன; எமது பாதையிலிருந்து எம்மைத் திசைதிருப்ப எத்தனையோ சூழ்ச்சிகள் செய்யப்பட்டன; போகும் வழியெல்லாம் பொறிகள் வைக்கப்பட்டன. சமாதானச் சதி வலையில் நாம் சிக்கிவிட மறுத்தபோது, போர் என்ற பூதம் எம்மீது ஏவப்பட்டது. நாம் உறுதி தளராது நின்றோம்; பாதை விலகாது பயணத்தைத் தொடர்ந்தோம்.

நீண்ட காலமாக எமது இலட்சிய உறுதியுடன் மோதியவர்கள் இன்று, தோல்வியைச் சந்தித்து நிற்கின்றனர்; சிங்கள பேரினவாத அரசியலும் இன்று ஆட்டங்கண்டு நிற்கிறது. உறுதியான ஒரு போராட்ட சக்தியை எத்தகைய பலத்தாலும் வெற்றிகொள்ள முடியாது என்பதை, இன்று சிங்கள தேசம் உணரத் தொடங்கியுள்ளது. இந்த விழிப்புணர்வால் தென்னிலங்கையில் பெரியதொரு அரசியல் மாற்றம் நிகழ்ந்திருக்கிறது; புதிய ஆணையுடன், புதிய அணுகுமுறையுடன் புதிய அரசு ஆட்சிபீடம் ஏறியிருக்கிறது.

சந்திரிகா அரசு சமாதானக் கரத்தை நீட்டியபொழுது, நட்புறவுடன் நாம் அதைப் பற்றிக்கொண்டோம்; நிபந்தனைகள் எதையும் விதிக்காமல், நிர்ப்பந்தங்கள் போடாமல் நாம் பேச்சுவார்த்தையில் பங்குபற்றினோம். முதற் கட்டமாகத் தொடங்கிய இந்தப் பேச்சுவார்த்தைகளின்போது, நாம் எமது மக்களின் நலன்களுக்கே முதன்மை கொடுத்தோம்.

முடிவில்லாமல் தொடர்ந்த அரச வன்முறை எமது தேசத்தின் முகத்தைச் சிதைத்துவிட்டது; சாவும் அழிவும், எண்ணில்லா இன்னல்களும், குடிபெயர்ந்த அகதி வாழ்வுமாக எமது மக்களின் அன்றாட சீவியம் பெரும் அவலமாக மாறியது; சாதாரண வாழ்வின் சாதாரண தேவைகள்கூட எமது மக்களுக்கு மறுக்கப்பட்டன; இயல்பான வாழ்விற்கு ஏதுவான எல்லாவற்றிற்குமே தடைகள் விதிக்கப்பட்டன; இதனால், எமது மக்களின் அன்றாட வாழ்க்கை ஒரு ஜீவமரணப் போராட்டமாக மாறியது.

பூதாகரமாக வளர்ந்துநிற்கும் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் முதற்படியாகத் தீர்த்துவைக்கப்படவேண்டும் என்பதை, பேச்சுக்களின்போது நாம் வலியுறுத்தினோம். சிங்கள பேரினவாத அரசுகள் தொடர்ச்சியாக இழைத்துவந்த கொடுமைகளுக்கு புதிய அரசு முதலில் பரிகாரம் காணவேண்டும்; தேசிய இனப்பிரச்சினையின் அடிப்படைகளை ஆராய்வதற்கு முன்னராக, எமது மக்களின் ஜீவாதாரப் பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்படவேண்டும்; சமாதான சூழ்நிலையை உருவாக்கி, தமிழர் மீதான தடைகளை நீக்கி, பொருளாதார வாழ்வைச் சீரமைத்து, இயல்பு நிலையைத் தோற்றுவிக்க அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்பதை வலியுறுத்தினோம்.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தலைவர் அவர்களின் மாவீரர் நாள் செய்தியின் தொடர்ச்சி...

இயல்புநிலையைத் தோற்றுவிப்பதற்கு சந்திரிகா அரசு, இன்னும் உருப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. பொருளாதாரத் தடையை முற்றாக நீக்கிவிடவோ, போக்குவரத்துப் பாதையைத் திறந்துவிடவோ அரசாங்கம் தயாராக இல்லை. இது ஒருபுறமிருக்க, இராணுவம் போர் நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்துகிறது; யுத்தத் தயாரிப்பு வேலைகளை தீவிரமாகச் செய்து வருகிறது; நவீன ஆயுதங்களை வாங்கிக் குவிக்கிறது. சமாதானம்பற்றிப் பேசிக் கொண்டபொழுதும் இராணுவத்தின் கரங்களைப் பலப்படுத்துவதிலேயே சந்திரிகா அரசு அக்கறை காட்டிவருகிறது.

தமிழர் பிரச்சினைக்கு சமாதான வழிமூலம் தீர்வு காண்பதை, சிங்கள இராணுவம் விரும்புவதாகத் தெரியவில்லை. இராணுவத்தின் விட்டுக்கொடாத கடும் போக்கும், போர் நடவடிக்கைகளும், யுத்தத் தயாரிப்பு வேலைகளும் இந்த உண்மையையே எடுத்துக்காட்டுகின்றன. சந்திரிகா அரசும் இராணுவ அணுகுமுறையைக் கைவிட்டதாகத் தெரியவில்லை; இராணுவத்தின் இறுக்கமான நிலைப்பாட்டிற்கு மாறாகச் செயற்படுவதையும் அரசு விரும்பவில்லை; இராணுவத்திற்கு எவ்வித அழுத்தம் போடுவதற்கும் தயாராக இல்லை. இப்படியான ஒரு நிலைமையில், சமாதான சூழ்நிலையோ இயல்புநிலையோ ஏற்படுவது இலகுவான காரியமல்ல.

இன்றைய நிலைமையில், சகல ஆட்சி அதிகாரங்களும் சந்திரிகா அரசிடம் கைமாறியிருக்கும் சூழ்நிலையில், அரசு வேறு ஆயுதப்படைகள் வேறு என்றோ, அல்லது அரசின் நிலைப்பாடு வேறு ஆயுதப்படைகளின் போக்கு வேறு என்றோ, பாகுபடுத்திப் பார்ப்பது தவறு. ஆயுதப்படைகள் அரசின் ஒரு அங்கம்; அரசின் நிலைப்பாட்டையே ஆயுதப்படைகள் பிரதிபலிக்கின்றன என்றே நாம் கருதவேண்டும். எனவே, அரசுக்கு சமாதானப் பாதையில் உண்மையான, நேர்மையான அக்கறை இருக்குமானால் ஆயுதப்படைகளையும் அந்த வழிக்கு இட்டுச்செல்வது சிரமமாக இருக்க முடியாது.

போர் நடவடிக்கைகளை நிறுத்துவதும், பொருளாதாரத் தடைகளை நீக்குவதும், போக்குவரத்துப் பாதையைத் திறப்பதும், கடல் வலயத் தடையை நீக்குவதும், அகதிகளை மீளக் குடியமர்த்துவதும் எல்லாமே ஆயுதப்படையினரின் நிலைப்பாட்டில் தங்கியிருக்கின்றன. ஆயுதப்படையினர் இறுக்கமான நிலைப்பாட்டைக் கடைப்பிடித்தால், அரசும் அதற்கு உடந்தையாக இருந்தால், எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குப் பேச்சுமூலம் தீர்வு ஏற்படுவது சாத்தியமில்லை. எமது மக்கள் இன்று எதிர் கொண்டுநிற்கும் சாதாரண பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாதுபோனால், மிகவும் சிக்கலான அடிப்படைப் பிரச்சினைகளை அரசினால் தீர்த்துவைக்க முடியுமா என்பது, சந்தேகத்திற்கு இடமானது.

நாம் சமாதானத்தின் பாதைக்கு இடையூறாக நிற்கவில்லை; நாம் சமாதானத்தின் கதவுகளைச் சாத்திவிடவும் இல்லை. நாம் சமாதானப் பேச்சுகளுக்குத் தயாராகவே இருக்கிறோம்; பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடருமானால் நாம் அதில் பங்குகொள்வோம்.

எமது மக்கள் எதிர்கொள்ளும் அன்றாடப் பிரச்சினைகளுக்கு முதலில் தீர்வுகாணப்படவேண்டும் என்பதையே, நாம் விரும்புகிறோம். எமது மக்களின் நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் பெறுவதானால், சந்திரிகா அரசு, முதற்கட்டமாக எமது மக்களின் அவசரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு, தமிழர் தாயகத்தில் சமாதான சூழலையும் இயல்பு நிலையையும் தோற்றுவிக்கவேண்டும்.

தமிழரின் தேசியப் போராட்டம் நாற்பது ஆண்டு காலத்திற்கு மேலான நீண்ட, சிக்கலான வரலாற்றுச் சூழ்நிலைகளால் உருவாக்கம்பெற்று பெருவளர்ச்சி கண்டிருக்கிறது. இன்று அதன் பரிமாணம் வேறு; வடிவம் வேறு. நீண்ட காலமாக இரத்தம் சிந்திப் போராடிய எமது இயக்கம், இன்று தமிழ்ப் பகுதிகளில் தன்னாட்சிக் கட்டமைப்புகளை நிறுவும் அளவிற்குப் போராட்டத்தை உயர்ந்த படிநிலைக்கு எடுத்துச்சென்றிருக்கிறது. இன்று நாம் மிகவும் பலமான, உறுதியான அத்திவாரத்தில் நிற்கிறோம். இந்த வலுவான அத்திவாரத்தை இட்டுத்தந்தவர்கள் எமது மாவீரர்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. நாம் ஒரு பலமான சக்தியாக வலுவான தளத்தில் நிற்பதால்தான், சிங்கள அரசு எம்முடன் பேச்சுக்களை நடத்த விரும்புகிறது.

சமாதான வழியில், தமிழரின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண சந்திரிகா அரசு முயற்சிகளை எடுக்குமானால், நாம் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவோம். தமிழரின் தேசியப் போராட்டத்தினது இன்றைய வளர்ச்சிக் கட்டத்தைக் கருத்திற்கொண்டு, உருப்படியான சுயாட்சித் தீர்வுத்திட்டங்கள் முன் வைக்கப்படுமானால், நாம் அதனைப் பரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறோம்.

**எனது அன்பார்ந்த தமிழ் மக்களே!**

நாம் விடுதலைக்காகப் போராடும் ஒரு மக்கள் - தேசம். நாம் சலுகைகளுக்காகக் கைநீட்டி நிற்கும் ஒரு சாதாரண கூட்டமல்ல; எத்தனையோ ஆண்டுகளாக, எத்தனையோ அழிவுகளைச் சந்தித்து, எத்தனையோ உயிர்களைப் பலி கொடுத்து, எத்தனையோ தியாகங்களைப் புரிந்து, எத்தனையோ நெருக்கடிகளை எதிர்கொண்டு, நாம் எமது போராட்டத்தை எமது இலட்சியப் பாதையில் முன்னகர்த்தி வருகிறோம். நாம் சிந்திய இரத்தமும் கண்ணீரும் வீண்போகவில்லை; இன்று எமது போராட்டம் தன்னாட்சியை நோக்கி வளர்ச்சியும் உயர்ச்சியும் கண்டு வருகிறது. ஒரு தொடர்ச்சியான, உறுதியான போராட்டத்தின்மூலமே நாம் இந்தக் கட்டத்தை எட்டிவிட முடிந்தது.

எமது தாயக மண்ணில், வரலாற்றுரீதியாக எமக்கு உரித்தான எமது சொந்த மண்ணில், நாம் நிம்மதியாக, சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழவேண்டும் என்பதே எமது குறிக்கோள்; இதுவே எமது தேசத்தின் அபிலாசை. இந்தத் தேசிய அபிலாசையை நிறைவுசெய்யும் ஒரு தீர்வையே நாம் வேண்டிநிற்கிறோம். அந்தத் தீர்வே நிரந்தரத் தீர்வாக அமையும்; அந்தத் தீர்வே, நிரந்தரமான சமாதானத்தையும் தோற்றுவிக்கும். அந்தத் தீர்வு எமக்குக் கிட்டும்வரை, நாம் ஒன்றுபட்ட மக்களாக -ஒன்றுதிரண்ட தேசமாக -தளராத உறுதியுடன் இருக்கவேண்டும்.

இன்றைய தேசிய நாளில், எமது தேசத்தின் விடுதலைக்காக மரணித்த எமது மாவீரர்களை நாம் நெஞ்சில் நிறுத்தி நினைவுகூரும் இந்தப் புனித நாளில், நாம் எமது குறிக்கோளை உறுதியாகப் பற்றிக்கொள்வோமென உறுதிமொழி செய்வோம்.

சுதந்திரத்தின் ஆலயங்களான துயிலும் இல்லங்களில், ஈகத்தின் சுடரொளிகளை நாம் ஏற்றிவைக்கும்பொழுது, அந்த அற்புதமானவர்களின் ஆன்ம அபிலாசைக்கு நாம் செலுத்தும் காணிக்கையாக, இந்த உறுதிமொழியை நாம் செய்துகொள்வோமாக.

**"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"**

வே. பிரபாகரன்
தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்

# போர் நிறுத்தம் - போக்குவரத்து...

### முதலாம்கட்ட பேச்சுவார்த்தையும் பாதை விவகாரமும்

அத்தோடு, பாதை திறப்பு விவகாரம் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையில் நடைபெற்ற முதலாம் கட்ட பேச்சுவார்த்தையின் போதும் பிரஸ்தாபிக்கப்பட்ட முக்கிய விடயங்களின் ஒன்று. அப்பொழுது, "யாழ். குடாநாட்டு மக்கள் பாதுகாப்பாகவும், சுதந்திரமாகவும் நடமாட தரைவழிப் பாதை ஒன்று திறக்கப்படல் வேண்டும்" எனத் தெளிவாகவே வலியுறுத்தப்பட்டது. அதன் பிரகாரம் போக்குவரத்துப் பாதைக்கு இடையூறாகவுள்ள இராணுவ முகாம்கள் எடுக்கப்பட்டு / மூடப்பட்டு போக்குவரத்துப் பாதை திறக்கப்பட வேண்டும் எனப்புலிகளின் நிலைப்பாடாக இருந்தது.

இந்த வகையில், ஆனையிறவுப் பாதை திறப்பதைவிட, பூநகரிப் பாதை திறப்பது என்பது சாத்தியமானது என்ற ரீதியிலே தமிழ் மக்களினாலும் விடுதலைப் புலிகளினாலும் இப் பாதை திறப்பது பற்றி அடிக்கடி வலியுறுத்தப்பட்டது. ஆனால் இராணுவத் தரப்பு இதனைப் பரிசீலனை செய்வதற்கு எப்பொழுதுமே தயாராக இருக்கவில்லை.

இதன் காரணமாகவே ஆனையிறவுப் பாதையூடாகப் பயணம் மேற்கொள்வது பற்றி அரசாங்கம் பிரசாரம் செய்கிறது. தரைவழியாக சுலபமாகப் பிரயாணம் செய்யக் கூடியதான ஆனையிறவுப் பாதை இருக்கையில் கடல்வழிப் பாதையான பூநகரிப் பாதையை ஏன் திறந்து விட வேண்டும்? என இராணுவத்தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா கேள்வி எழுப்புகின்றார்.

**- ஜெயராஜ் -**

இதில் அரசாங்கமும் -இராணுவமும் விடயத்தை முற்றாகவே திசை திருப்ப முற்படுகின்றனர். தமிழ் மக்கள் இன்று கேட்பது பாதுகாப்பானதும், சுதந்திரமானதுமான பாதை ஒன்றையே ஒழிய, சுலபமான இலகுவான பாதை ஒன்றை அல்ல. இந்த நிலையில், ஆனையிறவுப் பாதை எத்தகைய தூரம் இவற்றை நிவர்த்தி செய்யும் என்பதே முக்கியமானதாகும்.

ஆனையிறவு முகாமிற்கூடாக அதாவது இயக்கச்சி சந்தியில் இருந்து பரந்தன் சந்திக்கு அண்மை வரையிலுள்ள பல மைல்கள் பயணம் செய்வதென்பது எத்தகைய தூரம் தமிழ் மக்களின் சுதந்திரமான நடமாட்டத்தையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்தக் கூடியது. மேலும் நெருக்கடியான ஒரு வேளையில் இவ் இராணுவக்கிராமங்களுக்குள் சிக்குபவர்களின் உயிருக்கும், உடமைக்குமான உத்தரவாதத்தை எவ்வாறு பெற்றுக் கொள்வது.

இவையாவற்றிற்கும் மேலாக தனது யாழ். குடா நாட்டின் மீதான போர் முறைத்திட்டத்தை கைவிடத்தயாராக இல்லாத இராணுவத்தலைமைப் பீடத்தை நம்பி பாதையைத் திறந்து விடுதல் என்பது எத்தகைய சாத்தியமாகக் கூடியது. ஏற்கனவே உடன்பாடு மூலம் திறந்து விட்ட பாதையை தனது இராணுவத் தேவைக்குப் பயன்படுத்தி மாதகல், இளவாலைப் பகுதிகளை இராணுவம் ஆக்கிரமித்துக் கொண்ட வரலாறும் இல்லாமல் இல்லை.

### ஏற்கனவே நிராகரிக்கப்பட்டது

இவற்றின் அடிப்படையிலே 1993லேயே இராணுவத்தினரின் கண்காணிப்பின் கீழ் பூநகரிப் பாதை ஊடாக பயணம் செய்யும் திட்டம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியும். அதற்கு பாதுகாப்பு இன்மை, சுதந்திரமான நடமாட்டத்திற்குத் தடை என்பதையே காரணம்என விளக்கப்பட்டமையும் தெரியும். ஆனால், அப்பொழுது கிளாலிக்கடற்பரப்பில் - முழுமையான பாதுகாப்பான பயணம் இருக்கவில்லை என்பதும் முக்கியமானதாக இருந்தது.

ஆனால் அவ்வாறான நிலையிலும் ஏற்றுக்கொள்ளாத ஓர்விடயத்தை, கிளாலிக்கடற்பரப்பு விடுதலைப்புலிகள் பூரணக் கட்டுப்பாட்டில் வந்த பின்னர் அதாவது தமிழ் மக்களின் சுதந்திரமான, பாதுகாப்பிற்கு வழி ஏற்பட்ட பின்பும், அரசதரப்பும், இராணுவத்தரப்பும் ஆனையிறவுப் பாதையை வலியுறுத்துவதென்பது அவர்கள் தமது சிந்தனையிலும் குறிக்கோளிலும் இருந்தும் மாறவில்லை என்பதையே காட்டுவதாக உள்ளது. இந்தவகையில் இன்று பாப்பரசரின் வருகையுடன் பாதை திறப்பதை சம்பந்தப்படுத்துவது தமிழர் மத்தியில் முரண்பாட்டைத் தோற்றுவிப்பதற்கான முயற்சி என்றே கூறலாம். அத்தோடு, சமாதானப் பேச்சுக்கள் வந்தாலும் சரி, போர் நிறுத்தம் ஏற்பட்டாலும் சரி தனது நிலைகளில் இருந்து இராணுவம் பின்வாங்குவதில்லை என்ற உறுதியான நிலைப்பாட்டை இது வெளிப்படுத்துவதாகவுள்ளது.

இதன் அடிப்படையிலே, யாழ்-ஆயரைச் சந்திப்பதற்கு ஏற்கனவே ஒப்புக் கொண்டிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இறுதி நேரத்தில் இச்சந்திப்பை இரத்துச் செய்ததையும் நோக்க வேண்டும். பூநகரிப் பாதை தொடர்பான ஆயரின் கோரிக்கைக்கு ஜனாதிபதியால் பதில் அளிக்க முடியாத சங்கடமான நிலையே இச்சந்திப்பு தவிர்க்கப்பட்டமைக்கான காரணம் எனக் கொள்ளுதல் தவறானதாகாது.

இந்த வகையில், ஒருபுறம் தனது இராணுவ தந்திரோபாயங்கள் எவையும் பாதிக்கப்படாமல், அதேசமயம் மத ரீதியான சில உணர்ச்சிகர விடயங்களை தூண்டும் விதத்திலேயே யாழ் குடாநாட்டிற்கான பாதை திறப்பு விடயத்தை அரசும் -இராணுவமும் கூட்டாகக் கையாளுகின்றன என்பதே இன்றைய முக்கிய விடயமாகின்றது.

இது அரசிற்கும் - இராணுவத்திற்கும் இடையில் ஜனாதிபதி தேர்தலின் பின் ஏற்பட்ட விட்டுக் கொடுப்பின் அடிப்படையிலானதும், அரசின் சிந்தனையில் ஏற்பட்ட மாற்றத்தின் வெளிப்பாட்டினடிப்படையிலானதும் ஆகும். ■

**நன்றி: ஈழநாதம்**

# அதிரடிப்படைச் சீருடையில் ஊர்திகளைத் திருடிய பிக்கு

புத்தபிக்கு ஒருவர், அதிரடிப் படைச் சீருடையில் ஊர்திகளைக் (வாகனம்) கொள்ளையடித்துவந்த சம்பவங்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

கம்பகாப் பகுதியில் ஆறுபேர்கொண்ட இக்கொள்ளைக் குழுவிற்கு, மேற்படி புத்தபிக்கு தலைமை தாங்கியதாகவும் சட்டத்தரணிகள், மருத்துவர்கள் என தங்களைக் கூறிக்கொண்டு, ஊர்திகளை வாடகைக்கு அமர்த்தியும் இவர்கள் கொள்ளைகளை நடத்தியதாகவும் தெரியவந்துள்ளது. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தலைவர் பிரபாவின் போராடும் திறமை கெரில்லா தலைவர் எவரிடமுமில்லை

- சண்டே ரைம்ஸ் செய்தித்தாளில் பாதுகாப்புத்துறை செய்தியாளர் தெரிவிப்பு

"விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது 40 ஆவது வயதை அடைந்துள்ளார். ஒரு தசாப்த காலத்திற்கு மேலாக போரிட்டவாறு அதே சமயம் தனது கட்டுப்பாட்டின் கீழ் ஒரு பிராந்தியத்தையும் தொடர்ந்து வைத்திருக்கும் திறமை வேறு எந்த கெரில்லாத் தலைவரிடமும் இருந்ததில்லை. இதில் உலகின் நான்காவது மிகப்பெரிய இந்தியப் படையுடனும், சிறிய ஆனால் உயர் பயிற்சி பெற்ற சிறீலங்காப் படையுடனும் அவர் மோதியிருக்கிறார்" இவ்வாறு சன்டே ரைம்ஸ் செய்தித்தாளில் அதன் பாதுகாப்புத்துறை செய்தியாளர் தெரிவித்துள்ளார்

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்: தனக்கு நிகராக எவரும் இல்லை என்பதை பிரபாகரன் நிருபித்துள்ளார். தனது ஈழக்கோரிக்கையை விட்டுக் கொடுக்கப் போவதில்லை என்றும் அவர் உறுதி செய்துள்ளார். இதற்காக அவர் தனக்கு நிதியுதவி அளித்து, பயிற்சி அளித்து, ஆயுதம் வழங்கிய இந்தியாவோடுகூட போரிட்டிருக்கின்றார்.

கடந்த 25 ஆண்டுகாலப்பகுதியில் பிரபாகரனும் அவரின் படையும், இந்திய மற்றும் சிறீலங்காப் படைகளுக்கு எதிராக வெற்றிகரமாக முகம் கொடுத்து வந்துள்ளனர். இன்று பிரபாகரனை அழித்துவிடுவதற்காக பல முயற்சிகள் எடுக்கப்படுவதும் ஒன்றும் இரகசியமல்ல என குறிப்பிட்டுள்ளார். ■

# தலைவர் பிரபாகரனைக் கொலை செய்ய இந்திய புலனாய்வுத்துறை 'றோ' தீவிர முயற்சி

## இஸ்ரேலிய உதவியினைப் பெறுவதற்கும் முயற்சிக்கலாம் எனத் தகவல்

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனைக் கொலை செய்ய இந்தியா தனது புலனாய்வுத் துறையான 'றோ' மூலம் மிக அண்மைக் காலத்தில் தீவிரமாக முயற்சித்து வருகின்றது. இதற்கு பல்வேறு வழிமுறைகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. தமிழ்க் குழுக்களுக்கு ஆயுதங்கள் மற்றும் வெடிப்பொருட்களை வழங்குதல், இந்தியப் படையினரை இலங்கைக்கு அனுப்புதல், இஸ்ரேலிய 'புலனாய்வுத் துறையின் உதவியைப் பெற்றுக் கொள்ளுதல்' போன்ற பலவழிகளில் சிந்திக்கப்பட்டதாகவும் சண்டே ரைம்ஸின் பாதுகாப்புத்துறைச் செய்தியாளர் கட்டுரை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: இந்தியாவின் புலனாய்வுப் பிரிவான 'றோ' விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை ஒழித்துவிட முயற்சி செய்து வருகிறது. இந்தியப்படையினர் இலங்கையை விட்டு வெளியேறியதை அடுத்து 'றோ' இலங்கைத் தமிழர் சிலருக்கு துப்பாக்கி மற்றும் வெடிமருந்து பிரயோகம் தொடர்பாக பயிற்சிகளை அளித்து, பிரபாகரனை கொல்லும் பொருட்டு இலங்கைக்கு அனுப்பி வைத்தது. எனினும் இவை வெற்றிபெறவில்லை.

மிக அண்மைக் காலமாக 'றோ'-வின் நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது. பெயர் வெளியிட விரும்பாத மூத்த இந்திய இராஜதந்திரி ஒருவர் இந்தியா தனது படைகளை இலங்கைக்கு அனுப்பி பிரபாகரனை கைது செய்வது குறித்து ஆராய்வதாகக் குறிப்பிட்டார். இது செலவு கூடிய நடவடிக்கையாகவே அமையும். எனினும், இந்தியா மேற்கொள்ளக்கூடிய வேறு வழிமுறைகளும் உண்டு.

'றோ' தனது நடவடிக்கைக்கு இஸ்ரேலிய உதவி பெற்று மட்டுப்படுத்தப்பட்ட படைநடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும் என புதுடில்லியில் உள்ள மூத்த இந்தியத் தலைவர் ஒருவர் கூறியிருந்தார்.

சிறீலங்காப் படை (இராணுவம்), படைத்தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்ணாவிற்கு கீழாக வரும் வரையில், சிறீலங்கா அரசு பிரபாகரனை கொலை செய்வது குறித்து பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. பிரபாகரனையோ, பொட்டு அம்மானையோ கொலை செய்ய எடுத்த பல நடவடிக்கைகள் வெற்றி பெறாமைக்குக் காரணம், பாதுகாப்பு உயர் மட்டத்தின் கவனம் வேறு எங்கோ இருந்தமையினால் ஆகும்.

எனினும், பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்ததும் பிரபாகரனைக் கொல்ல மேற்கொள்ளப்பட்ட அனைத்து சதி நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டன. இத்தகைய நடவடிக்கைகள் குறித்து, மிக இரகசியமாகவே ஆராயப்பட்டாலும் அது அரசியல் மட்டத்தில் அங்கீகாரம் பெறவேண்டி இருந்தது.

பிரபாகரனின் தனிப்பட்ட மெய்க்காவல் சொர்ணத்தின் கீழ் மிக இறுக்கமாக உள்ளது. அவருக்கு இரவு பகலாக மூன்று வலயங்களாக பாதுகாப்பு வழங்கப்படுகின்றது. இது பிரபாகரனை ஒழித்தல் வெறும் கனவு என்பதையே காட்டுகின்றது. பிரபாகரனை கொலை செய்ய ஒரேவழி, புலனாய்வுத் தகவலை வைத்து விமானத் தாக்குதல் நடத்துவதே என மூத்த படை அதிகாரி ஒருவர் கூறுகின்றார். எனினும் இதுவும் ஓர் அசாத்திய நடவடிக்கையே என அச்செய்தியாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். ■

# "போர் நிறுத்தம் ஏற்படினும் இராணுவம் போர்த் தயாரிப்புக்களை நிறுத்தமாட்டாது"

## கமில்டன் வணசிங்கா தெரிவிப்பு

"போர் நிறுத்தம் செய்து கொள்வதை இராணுவத் தலைமைப்பீடம் விரும்பவில்லை; அத்துடன் போர் நிறுத்தம் ஏற்பட்டால், போருக்கான தயாரிப்பு வேலைகளை எக்காரணம்கொண்டும் கைவிடத் தயாராகவும் இல்லை". இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. கமில்டன் வணசிங்கா தெரிவித்துள்ளார்.

இரண்டாம்கட்டப் பேச்சுவார்த்தைக்கு முன்னர், அவரைச் சந்தித்த வெளிநாட்டுச் செய்தியாளர் ஒருவருக்கே, திரு. கமில்டன் வணசிங்கா இவ்வாறு தெரிவித்தார். போர் நிறுத்தம் ஏற்படும்பட்சத்தில், தற்பொழுது, இராணுவம் நிலைகொண்டிருக்கும் பகுதிகளில் இருந்து ஒரு அங்குலம்தானும் பின்வாங்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வழமையான ரோந்து நடவடிக்கைகளும் காவல் கடமைகளும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் என்றும் தற்பொழுது நிலைகொண்டிருக்கும் பகுதிகளில் இருந்தே, போருக்கான தயார்ப்படுத்தலை இராணுவத்தினர் மேற்கொள்வர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

திரு. கமில்டன் வணசிங்கா கொண்டிருக்கும் மேற்படி கருத்தையே, இராணுவத் தலைமைப் பீடத்தின் அநேக இராணுவ உயரதிகாரிகளும் கொண்டிருப்பதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ■

அயல் நாட்டுச் செய்திகள்

# படைக் கட்டமைப்பு மாற்றம் விரைவில் ஏற்பட வாய்ப்பில்லை

## சிரேஸ்ட அதிகாரிகளுக்கு சேவைக்காலம் நீடிப்பு

படைத் (இராணுவத்) தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமில்டன் வணசிங்கா, காவல்மா அதிபர் பிராங்டி சில்வா ஆகியோரது சேவைக்காலம் மேலும் நீடிக்கப்பட்டமைக்கு, அரசு மீண்டும் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களைத் தொடக்க எடுத்த முயற்சிகளே காரணம் என, ஐலண்ட் செய்தித்தாள் செய்தி வெளியிட்டுள்ளது. அரசின் சமாதான முயற்சிகளுக்கு எந்தவிதமான ஆதரவையும் தாம் தரத்தயாராக இருப்பதாக, கமில்டன் வணசிங்கா அரசுக்கு உறுதியளித்துள்ளார்.

இதேசமயம் பாதுகாப்பு அமைச்சின் செயலராக இனிவரும் காலத்தில், குடிசார் (சிவில்) அதிகாரியே அமர்த்தப்படவேண்டும் என்ற ஆலோசனை அரச உயர்மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என, படை வட்டாரங்கள் கூறியதாகவும் ஐலண்ட் செய்தித்தாள் குறிப்பிட்டுள்ளது.

முன்னர் எதிர்பார்க்கப்பட்டபடி, படைக்கட்டமைப்பிலும் பாரிய மாற்றங்கள் இப்போது மேற்கொள்ளப்படமாட்டாது எனவும் சமாதானப் பேச்சுக்களைத்தொடர, அரசு முடிவு எடுத்தாலும் திட்டமிட்டபடி, படையினருக்கான படைக்கலக் (ஆயுதம்) கொள்வனவு தொடரும் எனவும் படை வட்டாரங்களை மேற்கோள்காட்டி, ஐலண்ட் செய்தித்தாள் செய்தி வெளியிட்டுள்ளது. ■

# ஊழல் நிருபிக்கப்பட்டால் ஐ.தே.கவில் இடமில்லை

□ உறுப்பினர்களுக்கு கட்சித்தலைவர் ரணில் எச்சரிக்கை

"ஊழல் புரிந்ததாக நிருபிக்கப்படுபவர்களுக்கு, ஐ. தே. கவில் எதுவித பதவியும் வழங்கப்படமாட்டாது". இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐ. தே. க. தலைவருமான ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

"கடந்த அரசில் இருந்த அமைச்சர்களோ, கட்சி உறுப்பினர்களோ ஊழல் செய்ததாக, தற்போதைய அரசு நியமித்துள்ள ஊழல் விசாரணை ஆணைக்குழு சட்டபூர்வமாக நிருபித்தால், அவ்வாறானவர்களுக்கு ஐ. தே. கவில் எதுவித பதவியும் வழங்கப்படமாட்டாது" எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுசரித்த மண்டபத்தில் நடைபெற்ற கட்சிக் கூட்டத்தில், உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், "கடந்த காலத்தில் சில தவறுகள் இடம்பெற்றுவிட்டன; அத்தகைய தவறுகள் நிகழ, இனி இடமளிக்கமாட்டோம்" எனவும் குறிப்பிட்டார். ■

# அர்த்தமுள்ள தீர்வைக் காண்பதானால் புலிகளுடனேயே பேசவேண்டும்

□ ஜனாதிபதி சந்திரிகா கூறியதாக அமைச்சர் தர்மசிறி செனநாயக்கா

"இனச்சிக்கலுக்கான சமாதானத் தீர்வை எய்துவதென்பது, விடுதலைப் புலிகளுடன் அரசு நடத்தும் பேச்சுக்களினாலேயே அர்த்தம் உடையதாக இருக்கும். மீண்டும் சமாதானப் பேச்சுக்களைத் தொடங்குவதற்கு, அரசு தனது செயற்பாடுகளை முன்னெடுத்துவருகின்றது". இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகச் செய்தி வெளியிட்டுள்ள 'தினமின' செய்தித்தாள் குறிப்பிடுகையில், அண்மையில் விசும்பாயாவில் நடைபெற்ற ஏழல் (வாராந்த) செய்தியாளர் மாநாட்டின்போது, சமாதான முயற்சிகள் தொடர்பான தனது கருத்தை செய்தியாளர்களுக்கு தெரிவிக்குமாறு, அமைச்சரவைப் பேச்சாளரான தர்மசிறி சேனநாயக்காவை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பணித்ததாகவும் -இதன்படி மேற்குறித்த செய்தியை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா செய்தியாளர்களுக்கு அறிவித்ததாகவும் தினமின தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா செய்தியாளருக்கான தனது செய்தியில், "வடக்கு - கிழக்குச் சிக்கலை சமாதான மூலம் தீர்க்கவேண்டும் என்பதில், அரசு தெளிவாக இருப்பதாகவும் -இதற்கமையவே பூர்வாங்க நடவடிக்கைகளை அரசு எடுத்துவருவதாகவும்" தெரிவித்துள்ளதாக, அமைச்சர் தர்மசிறி சேனநாயக்காவை மேற்கோள் காட்டி தினமின மேலும் குறிப்பிட்டுள்ளது. ■

### படையினருக்கு மாற்றப்பட்ட அமெரிக்க உதவிப்பொருட்கள்

அமெரிக்கா அனுப்பிய உதவிப்பொருட்களில், சிறீலங்காப் படையினரிற்கு கைமாற்றப்பட்ட பொருட்களின் விபரம் வெளிவந்துள்ளது. ஆறு அம்புலன்ஸ் வண்டிகள், நடமாடும் சத்திரசிகிச்சை வண்டிகள், குளிரூட்டிப் பெட்டிகள், ஐம்பதிற்கும் மேற்பட்ட கட்டில்கள், மருந்துப் பொருட்கள் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

### சிறுகதை

# அர்ச்சுனன்...

'வாத்தியார்.... கிட்டுமாமாவை இனி எங்கே காண்போம்...'

மீண்டும் அந்த ஆறுவயது நிரம்பாத மழலையின் வெதும்பல்.

'குழந்தாய்.... நீ.... சிரித்துக்கொண்டு முகக்கண்ணாடியைப் பார். உன் சிரிப்பில் கிட்டுமாமா தெரிவார். மழலையில் உன் கிட்டுமாமா ஒலிப்பார்.

வாசலில் அவனது வரவிற்காகச் சங்கர் காத்து நின்றான். என்றுமே மாறா அந்த கறுப்பு கொழுகொழுத்த குளிர் அங்கியும் அரைத்தாடியின் மத்தியில் வந்த புன்சிரிப்பும் நேசனை வரவேற்றது.

நேசனின் வாய் மெதுவாக அசைந்தது. கிட்டுமாமா ஈழத்தின் அர்ச்சுணன் தான்.

வாக தமிழீழம் செல்வதற்குச் சில நிமிடங்களுக்கு முதல், என்னை தொலைபேசியில் அழைத்து என்னிடம் ஒரு பொறுப்பை ஒப்படைத்தார். நான் அதைச் செய்யவேண்டும். அதனால் நான் உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்.'

தர்மன் என்ற தார்மீகத் தலைவனின் தம்பி...! ■

### யாவும் கற்பனை

# மன்னார் தீவிலும் சைப்பிரஸ் பறவைகள்

மன்னார் தீவுக்கு சைப்பிரஸ் நாட்டிலிருந்து பறவைகள் வந்து, தங்கத்தொடங்கியுள்ளன. காலநிலை மாற்றங்களைத் தொடர்ந்து, இப்பறவைகள் தங்களது சுவாத்தியத்திற்காக பல்லாயிரக்கணக்கான கிலோமீட்டர்களைக் கடந்து, சைப்பிரஸ் பகுதியிலிருந்து வரத்தொடங்கியுள்ளன.

இப்பறவைகள் கரிசல், மன்னார் நகர்ப் பகுதிகளில் உள்ள குளங்களுக்கருகில் குடியமர்ந்துள்ளதாகத் தெரியவருகின்றது. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழத்தின் தொழிற்றுறை



தற்போதைய பொருண்மிய நெருக்கடிகளின் கீழ் மனிதவளம் உள்ளிட்ட எமது சகல வளங்களையும் அடையாளம் காண்பது அவற்றை எட்டக்கூடிய உச்சத்தரத்தோடு உச்சப் பயன்பாட்டுக்கு உட்படுத்தி பொருண்மியத் தடைகளை உடைப்பது அவசியம்.

சிறீலங்கா சுதந்திரம் பெற்ற 1948 ஆம் ஆண்டுக்குப் பின், மாறி மாறிப் பதவிக்கு வந்த சிங்களப் பேரினக்கட்சிகள் எவையாக இருந்தாலும் அவற்றின் கைத்தொழில் கொள்கைகள் தமிழீழ பிரதேசங்களைப் பொறுத்தவரை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன், ஏன் அதைவிட மோசமானவையாகக் கூட அமைந்து வந்திருக்கின்றன. எமது வரட்சியான காலநிலையைச் சுட்டிக் காட்டியே பல தொழில்களை இங்கு வரவிடாமல் தடுத்த பெருமை அன்றைய டி. எஸ். சேனாநாயக்காவிலிருந்து பின்னைய ஜே. ஆர் ஜெயவர்த்தனா, ஆர். பிரேமதாஸ, டி. பி. விஜேதுங்கா ஆகியோருக்கும் உண்டு.

தமிழ்த் தலைவர்களாக இருந்த சிலரின் அடிவருடித் தனங்களுக்குப் பரிசாக, தப்பித்தவறி வர விடப்பட்ட திட்டங்களும் அத்திட்டங்களின் போர்வையில் தமிழர் நிலங்கள், தமிழர் வேலை வாய்ப்பு போன்றவற்றை அபகரிக்கும் நோக்கிலும் சிங்கள குடியேற்றம் மேற்கொள்ளும் நோக்கிலுமே அனுமதிக்கப்பட்டன. விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய திட்டங்களே 1948 -1990 வரையான நான்கு தசாப்தங்களிலே அனுமதிக்கப்பட்டன.

சீனி ஆலையால் கந்தளாய் பறிபோனது. காங்கேசன்துறையிலே ஒரு சீமேந்து ஆலை எமது சுண்ணக்கற்களை சுரண்டியது. ஆனையிறவிலே எமது உப்பு வளம் அரசாங்கக் கஜானாவை நிரப்பியது, புல்மோட்டையின் இல்மனைற் வளம், மணலாறு சிங்கள இராணுவக் குடியேற்றப் பிரதேசமாகியது. ஏராளமான அந்நியச் செலாவணியையும் ஈட்டிக்கொடுத்தது. வாழைச்சேனைக் காகித ஆலையை வைத்து சிங்கள குடியேற்றம். இவை தவிர பெரிதாக எதுவும் கைத்தொழில் முயற்சியாக இங்கு மேற்கொள்ளப்படவில்லை.

தொழிற்றுறைகளை இங்கு ஆரம்பிக்க தனியார் எடுத்த முயற்சிகளும் பல்வேறு அழுத்தங்கள், நெருக்கடிகள் மூலம் தடுக்கப்பட்டன. இங்கு ஒரு தொழிலுக்கு அனுமதிப்பத்திரம் எடுப்பது முயற் கொம்பாக மாறியவேளை, ஏராளமான தொழிற்றுறைகள் தெற்கே வளர்ச்சி பெற்றன. இங்கு அனுமதிக்கப்பட்ட தொழிற்றுறைகளும் மூலப்பொருட்களுக்கு கொழும்பை எதிர் நோக்கி நிற்க வேண்டியிருந்தது. "பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது" போல் 1990 இல் ஆரம்பித்த போருக்குப் பின்னால் உடனடியாக மின்சாரத்தை நிறுத்தி தொழிற்றுறையின் கழுத்தை நெரித்த அரசு, தொடர்ந்து குண்டு வீசி இருந்த தொழிலகங்களையும் அழித்துக் கொண்டிருக்கிறது அல்லது இராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளாகியிருக்கிறது.

இந்தப் பின்னணியில் தான் 1991 ஆம் ஆண்டின் முற்பகுதியில், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கீழியங்கும் கைத்தொழில் பகுதி தன் செயற்பாட்டை முடுக்கி விட்டது. பாரிய பல பொறுப்புக்கள் அதற்காகக் காத்துக் கிடந்தன. பாரிய தொழில்களை சீரமைக்கவோ புதிய பாரிய தொழில்களை ஆரம்பிப்பதோ உடனடிச் சாத்தியமில்லாத நிலையிலே, "கிடைக்கும் வளங்களின் உச்சப்பயன்பாடு" என்பது அதன் தாரகமந்திரமாயிற்று.

| | தொழில் எண்ணிக்கை | ஊழியர் தொகை | உற்பத்திப் பெறுமதி (மில்லியன்) |
|---|---|---|---|
| 5 பேருக்குக் குறைந்த பணியாளர்களுடன் இயங்கியவை | 8,156 (84.34%) | 18,656 | 475.13 (9.71%) |
| 5 பேருக்குக் கூடிய பணியாளர்களுடன் இயங்கியவை | 1,514 (15.66%) | 31,782 | 4413.67 (90.29%) |
| மொத்தம் | 9670 | 50438 | 4888.80 |

எமது விடுதலைப் போர் முனைப்படைந்த 1983 ஆம் ஆண்டுக்கு முந்திய புள்ளி விபரங்களின்படி;
தற்போது 168 தொழில்கள் மட்டும் (1. 73%) இயங்குகின்றன. இவற்றில் பெரும்பாலானவை மென்பானம் (44), அப்பளம் (28), இரும்பு (28), திருத்தவேலை (46) ஆகியவையாகும்.

போர்க்கால சூழலினால் அரசினால் நடாத்தப்பெற்று வந்த பெரும் உற்பத்தித்திறன் கொண்ட தொழிலகங்கள் ஒன்றில் முடங்கிப் போயின அல்லது இராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளாகிப் போயின. தொழிற்றுறை, கட்டுமானத்துறை என்பன முற்றாக ஸ்தம்பிதம் அடையும் நிலை ஏற்பட்டது. நிச்சயமற்ற சூழ்நிலைகளினால் பழைய தொழில்களை மீண்டும் தொடங்கவோ அல்லது புதியவற்றை ஆரம்பிக்கவோ மக்கள் தயங்கிக் கொண்டு இருந்தார்கள்.

இங்கும் வளங்கள் இருக்கின்றன. இவற்றைப் பயன்படுத்தி நாம் இங்கு வாழமுடியும் என்று மக்களுக்கு உணர்த்தி அவர்களுக்கு நம்பிக்கையூட்ட, நாமே சில திட்டங்களை முன்னெடுக்க வேண்டியிருந்தது. உதாரணத்துக்கு உப்பு உற்பத்தியைக் குறிப்பிடலாம். போர் தொடங்கிய காலப்பகுதியில் உப்பு கிலோ முப்பது ரூபாவரையில் விலை போயிற்று. அத்தியாவசிய தேவையான இதனை பூர்த்தி செய்ய முயன்ற கைத்தொழில் பகுதி, செம்மணியிலும் வேறு இடங்களிலும் கைவிடப்பட்டிருந்த உப்பளங்களை சீரமைத்து, மக்களின் பெரும்பங்களிப்போடு தற்போது சுயதேவை பூர்த்தி மட்டத்திலே கையிருப்பைக் கொண்டிருப்பது மட்டுமல்லாமல், விற்பனை விலையை 8. 50 -10 ரூபாவரை விற்கப்படும் விதத்தில் கணிசமான விலைக்குறைப்பை ஏற்படுத்தியுள்ளது.

புதிய வளங்களை அடையாளம் காணும் முயற்சிகள் முடிவேயில்லாமல் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. உதாரணத்துக்கு தோல் பதனிடுதலைக் குறிப்பிடலாம். வீணே புதைக்கப்பட்டுக் கொண்டிருந்த கால்நடைகளின் தோல்களை தற்போது பதனிட்டு வெற்றிகரமாக சந்தைப்படுத்தியிருக்கிறோம். தொழிலின்றி ஏங்கிய பல மக்கள் இதனால் தொழில்வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள்.

அடையாளம் காணப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டவை மூலவளங்கள் மட்டும்தான் என்றில்லை. தொழில்நுட்பங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன. தமிழீழத்துக்கு முற்றிலும் புதியதான ஒரு தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி நடமாடும் ஐஸ் தொழிற்சாலை ஒன்று (ஒரு நாளைக்கு 1 தொன்) உருவாக்கப்பட்டிருக்கிறது. இவை மட்டுமல்லாது, முன்னர் பெரியளவில் இயங்கி தற்போதைய பொருண்மிய தடைகளினால் முடங்கிக் கிடக்கும் சில தொழிற்சாலைகளை இயக்க வைக்கும் முயற்சிகளிலும் கைத்தொழில் பகுதி ஈடுபட்டு வருகின்றது. உதாரணமாக மின்சாரமின்மை, ஊழியர் மாற்றம், குண்டுவீச்சுச் சேதங்கள் போன்றவற்றால் மூடிக்கிடந்த ஓட்டுத் தொழிற்சாலை புனரமைக்கப்பட்டு இன்று அது தன் உற்பத்திகளை ஆரம்பித்துள்ளது. மேலும் இனிப்பு வகைகளை உற்பத்தியாக்கும் தொழிற்சாலை ஆகியவற்றை இயக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுகின்றன.

உருவாகும் தொழிற்றுறைகளை நெறிப்படுத்தி வழிநடத்த 'தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம்' ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆலோசனை, தரநிர்ணயம், தொழில்நுட்ப அறிமுகம், வளங்களை இனங்காணல், ஆய்வு மேம்பாடு, உரிமங்களை பதிவு செய்தல் முதலியன இந் நிறுவனத்தின் சில பணிகளாகும்.

பல்கலைக்கழக மட்டத்தில் தொழில்சார் திறனாளர்களது ஒத்துழைப்போடு ஆலோசனைச் சபைகள் அமைக்கப்படுகின்றன. தொழிற்றுறை ரீதியாக மக்களை நிறுவனமாக்கி வருகின்றோம். நெசவுத் தொழிலாளர் சங்கம், அரிசி ஆலை உரிமையாளர் சங்கம், எண்ணெய் உற்பத்தியாளர் சங்கம், பேக்கரி உரிமையாளர் சங்கம், அப்பள உற்பத்தியாளர் சங்கம் போன்றவை இவற்றில் அடங்கும்.

எம்மிடம் மனிதவளம் நிறையவே உண்டு. மூளைவளம் எம்மிடமிருப்பது உலகறிந்த உண்மை. இன்றைக்கு உலகத்து ஆயுத வகைகள் அனைத்தையும் கொண்டுள்ள எதிரியோடு, களத்தில் சமராடி எதிரியை புறமுதுகிட்டு ஓட வைக்கும் அளவுக்கு எமது இராணுவ போர்க்கால தொழில்நுட்பம் வளர்ந்திருக்கிறது. அதேஅளவுக்கு ஏனைய தொழிற்றுறைகளையும் வளர்த்தெடுப்பதற்கான அடிமட்டக்கட்டுமான வேலைகளாக மேற்படி முயற்சிகள் இருக்கின்றன.

எதிர்காலத்தில் இறைமையுள்ள மக்களாக நாம் மாறும் நேரத்தில் தொழிற்றுறை திட்டங்கள் குறித்து தடுமாறிக் கொண்டிராமல், இப்போதே அதற்கான திட்டமிடுதலிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

ஒட்டுமொத்தமாக சொல்லப்போனால் தற்போதைய பொருண்மிய நெருக்கடிகளின் கீழ், மனிதவளம் உள்ளிட்ட எமது சகல வளங்களையும் அடையாளம் காண்பது, அவற்றை எட்டக்கூடிய உச்சத் தரத்தோடு கூடிய உச்சப்பயன்பாட்டுக்குட்படுத்தி பொருண்மியத் தடைகளை உடைப்பது, உடனடி எதிர்காலத் திட்டங்கள், நீண்டகால அடிப்படையிலான திட்டங்கள் முதலியவற்றை அடையாளம் கண்டு அவற்றுக்கான கட்டமைப்புக்களை இப்போதே ஆயத்தப்படுத்துவது என்ற பணிகளிலே கைத்தொழில் பகுதி முனைப்போடு செயற்பட்டு வருகிறது எனலாம். ■

**நன்றி: 'ஆதாரம்'**

# தமிழீழ இயற்கைவளங்களைப் பாவித்து கைத்தொழில் மேம்பாடு



கைத்தொழில் மேம்பாட்டிற்கு உள்ளூர் மூலவளங்களின் உச்சக் கட்டப் பாவிப்பு மிகவும் அவசியம். இதனால் உற்பத்திச் செலவுகளைக் குறைப்பதோடு, கூடுதலான வேலை வாய்ப்பையும் அதிகரிக்கச் செய்யலாம்.

1. உள்ளூர் மூலவளங்கள் :-
   1. கடல் நீர்
   2. சூரிய சக்தி / காற்று
   3. கனிப்பொருட்கள்
   4. விலங்கு வேளாண்மை

ஆகிய துறைகளில் நிறைந்து காணப்படுகின்றன.

2. தமிழீழப் பிரதேசம் முழுவதும் கடல்/கடலேரி அண்டிக் காணப்படுவதால் கடல் வளமும், மழை வீழ்ச்சி, பருவகால இயல்பு உடையதால் சூரியசக்தி, காற்று ஆகியவையும் எல்லையற்ற அளவில் பெறும் வாய்ப்புக்கள் உள்ளன. இம்மூலவளங்களைப் பயன்படுத்தி, கைத்தொழில் அபிவிருத்தி எந்தவகையில், எந்த அளவில் மேற்கொள்ளலாம் என ஆராய்வது அவசியமாகின்றது.

**விடுதலை வேண்டிப் போராடும் நமது இனம் பொருண்மிய முன்னேற்றம் பற்றியும், கிடைக்கக் கூடிய மூலவளங்களைப் பயன்படுத்துவது பற்றியும் ஆராய்வது அவசியம்.**

3. பேரினவாத அரசினால் ஒடுக்கப்பட்டும் பொருளாதார தடைகள் விதிக்கப்பட்டும் அல்லல்படும் நேரத்திலும் விடுதலை வேண்டிப் போராடும் நமது இனம், பொருளாதார முன்னேற்றம் பற்றியும், கிடைக்கக்கூடிய மூலவளங்களைப் பயன்படுத்துவது பற்றியும் ஆராய்வது அவசியமானது.

4. இந்தவகையில் தமிழீழத்தில் 1990 இல் ஆரம்பமான இரண்டாம் கட்ட விடுதலைப் போராட்டத்தின் மத்தியில் மக்களின் வாழ்க்கைக்கு வேண்டிய அபிவிருத்தி தொடர்பான புதிய சிந்தனைகள், கோட்பாடுகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் உருவாக்கி பல்வேறு திட்டங்களிலும் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

5. கடல்நீர், சூரியசக்தி, காற்று ஆகியவற்றைப் பயன்படுத்தியும் குறைந்த அளவு இயந்திர சாதனம், எரிபொருள் பாவனையுடனும் அதிக அளவு வேலை வாய்ப்பை ஏற்படுத்தக் கூடியதுமான உப்பு உற்பத்தி பற்றியும் உப்பை மூலப் பொருளாகக் கொண்டுள்ள இரசாயன உற்பத்தி பற்றியும் ஆராய்வது முக்கியமானதாகும்.

6. கடல் நீரில் இருந்து ஜிப்சம் உப்பு, கறியுப்பு, எப்சம் உப்பு ஆகியவை சூரியசக்தி, காற்று

தொடர்ச்சி 8 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அறிவுச்சோலையில் பூத்த நினைவுப் பூக்கள்



எனது அம்மாவிற்கும் அப்பாவிற்கும் நான் ஒரே பிள்ளை, எனது அம்மா என்மேல் அளவு கடந்த பாசம் உள்ளவர், நான் சிறுவயதாகவுள்ளபோதே, அப்பாசமுள்ள அம்மா தீராத நோயினால் பீடிக்கப்பட்டு சரியான வைத்திய வசதி செய்யாமையால் நோய் முற்றி இறந்துவிட்டார். அம்மாவில்லாத நான் என் அப்பாவினால் வளர்க்கப்பட்டேன். ஆனால் நான் எந்தநேரமும் எனது அம்மாவை நினைத்து அழுதவண்ணமிருப்பேன். இதைக் கண்ட அப்பா என்னை ஒழுங்காக வளர்க்கவும் பாசத்தோடு கவனிக்கவும் சின்னம்மாவைத் திருமணம் புரிந்தார். ஆனால் அப்பா நினைத்தது நடக்கவில்லை. அதற்கு நேர்மாறாகத்தான் எல்லாம் நடந்தது. சின்னம்மா என்னை பேணி வளர்க்கவுமில்லை பாசமுடன் கவனிக்கவுமில்லை, என்னை சிறிது நேரம்கூட சும்மா இருக்கவிடமாட்டார், எப்போதும் ஓயாமல் ஏதேனும் வேலை சொல்லிக்கொண்டே இருப்பார், சின்னம்மாவின் பிள்ளைகளும் எனக்கு வேலைகளைத் தருவார்கள். அவற்றையும் நான் செய்யத்தான் வேண்டும். இல்லையேல் சின்னமாவிடம் சொல்லி அடி வாங்கித் தருவார்கள், அப்பா நாட்டாமை வேலைசெய்ய புலர்ந்தவுடன் சென்றுவிடுவார். அப்பா இல்லாத வேளைகளில்தான் எனக்கு அதிகமாக சின்னம்மா அடிப்பார். எனக்குப் பாடசாலைக்குச் சென்று கல்வி கற்கவேண்டுமென்று நிரம்பவும் ஆசை, ஆனால் சின்னம்மா என்னை பாடசாலை எனும்பெயரை உச்சரிக்கக் கூட விடாமல் ஒரு பெரியவேலை தந்தார். அதுதான் சந்தைக்குச் சென்று மண்ணெய், பிஸ்கட், சவர்க்காரம் முதலியவற்றை விற்று ஒவ்வொரு நாளும் அக்காசை அவவிடம் கொடுக்க வேண்டும், அவ்வாறு நான் சந்தைக்குச் சென்று எனது வேலையை செய்துவரும்போது, ஒரு நாள் முன் வீட்டில் படம் ஓடுவதைக் கண்ட நான், நானும் சிறுவன்தானே படம் பார்க்கும் ஆசையில் முன் வீட்டில் நின்று படம் பார்த்தேன், நான் சந்தைக்குப் போகாமல் படம் பார்ப்பதைக் கண்ட சின்னம்மா என்னைக் கூப்பிட்டு நல்லா அடித்துவிட்டு அப்பா வருவதற்கு முன் இங்கிருந்து ஓடிவிடு என்று சொன்னார். நான் பயத்தினால் கால் போன போக்கில் ஓடிக்கொண்டிருந்தேன். அப்போது எனது கையில் ஒரு லீற்றர் மண்ணெண்ணையும் 500 ருபா காசும் இருந்தது. நான் மிரண்டு மிரண்டு ஓடுவதைக் கண்ட ஒரு அண்ணா என்னைப் பிடித்து நிறுத்தி என்னைப் பயப்படவேண்டாம் என்று ஆறுதல் கூறி எனது அழுக்கான ஆடைகளை கழட்டி, நல்ல ஆடை அணிவித்து தாயக சிறுவர் இல்லத்தில் கொண்டு போய் சேர்த்துவிட்டார், நன்றாகப் படிக்கவேண்டும் எனவும் என்னை அடிக்கடி வந்து பார்ப்பதாகவும் கூறிவிட்டுச் சென்றார். எனது வீட்டில் நான் ஆசைப்பட்டு எட்டாக் கனியாக இருந்த கல்வியை நான் தாயக சிறுவர் இல்லத்தில் விரும்பி விடா முயற்சியோடு படித்தேன். அங்கே எனக்கு ஒரு குறையுமில்லை, நான் வெகு சந்தோசமாக அங்கு கல்வி கற்கும் பல சகோதரர்களுடன் பாசத்தைப் பகிர்ந்து கொண்டும் எனது வாழ்க்கை என்னும் படகைச் செலுத்திக்கொண்டிருந்தேன்,

> காந்தருபன் அறிவுச்சோலையைச் சேர்ந்த சிறார்கள் சிலர், தாங்கள் ஏதிலிகளாக்கப்படுவதற்குக் காரணமாகவிருந்த மறக்கமுடியாத சம்பவங்களைப் பகிர்ந்துகொண்டபோது பெற்ற விபரங்களே, 'அறிவுச்சோலையில் பூத்த நினைவுப் பூக்கள்' என்ற தலைப்பின் கீழ் வெளியிடப்படுகின்றது.

சென்ற இதழ் தொடர்ச்சி

அப்போதுதான் ஒரு நாள் எமது தாயகப் பொறுப்பாளர் வந்து எங்களிடம் கூறினார், "யாழ்ப்பாணத்தில் காந்தருபன் அறிவுச்சோலை ஒன்று உண்டு; அங்கே நீங்களெல்லாம் போக வேண்டும். அங்கே போனால் இங்கே படித்தவற்றைவிட அதிகம் படிக்கலாம், அதனால் நீங்களெல்லாம் அங்கேபோய் நல்ல பிள்ளைகளாகப் படித்து பட்டம் பெறவேண்டும், நாங்கள் உங்களை அடிக்கடி அங்கு வந்து பார்ப்போம்" என்று அதன்படி, ஒரு இரவு புறப்பட்டு காந்தருபன் அறிவுச்சோலையை வந்தடைந்தோம். இங்கு வந்த பிறகுதான் எனக்குத் தெரிந்தது என்னைப்போன்ற பல தம்பிகள் இங்குள்ளனர் என்று, இங்கே நான் எந்தவிதமான குறையுமின்றி நல்ல மகிழ்ச்சியாக வாழ்கின்றேன். நான் மூன்றாம் ஆண்டில் கல்வி பயில்கின்றேன் . எம்மைக் கண்ணின் கருமணிகள் போல மாமாக்களும் அப்பாவும் பேணி வளர்க்கிறார்கள், தலைவர் மாமாவின் ஆசைப்படி, நன்றாகப் படித்து நல்ல பிரஜைகளாக வாழவேண்டுமென்பதே எனது இலட்சியம். ■

**த. பாபு**
**ஆண்டு - 3.**




தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (யேர்மன் கிளை) 10-12-94 இல் ஒபகௌசன் நகரில் நடாத்திய "இரங்கும் இன்னிசை இரவு" என்ற நிகழ்ச்சியின் போது இடம் பெற்ற கலை நிகழ்வுக் காட்சிகள் சில.




## பொசுனியச் சிக்கலைத்....

(SLAVS) இனத்தைச் சேர்ந்த சேர்பியரை கைவிட இன்னமும் தயாராகாத நிலையில் ருஸ்யாவும், பொசுனியா சேர்பியருக்கு உதவ முன்வரலாம் என்றும் கருதப்படுகின்றது. அத்தோடு ஆயுதத்தடை நீக்கப்பட்டால், தான் உடனடியாகத் தனது அமைதிப்படைகளை பொசுனியாவிலிருந்து விலக்கிக் கொள்வேன் என்றும் பிரித்தானியா கூறி வருகின்றது. பிரித்தானியா விலகினால் பிரான்சும் உடனே வெளியேறத் தயாராகவுள்ளது. இந்நிலையில், ஐ. நா. வினால் பிரகடனப்படுத்தப்பட்ட பாதுகாப்பு வலயங்களும் கிழக்கு பொசுனியாவிலும், மேற்கு பொசுனியாவிலும், சேர்பியரால் சூழப்பட்டு ஐ. நா. வின் நிவாரண உணவு உதவிகளில் முற்றிலும் தங்கியிருக்கும் பகுதிகள் பெரும் இக்கட்டான நிலையை அடைய நேரிடும் என்பதே இச் சிக்கலின் இன்னொரு பரிமாணமாகிவிட்டது. எனவே இத்தகைய நிலையில் ஆயுதமா? உணவா? என்கிறதொரு கேள்வி பொசுனிய அரசின் முன்னே தோன்றிவிட்டது. அதே சமயம் பொசுனிய சேர்பியரை ஒரு தீர்வுக்குக் கொண்டுவரத்தக்க அழுத்தத்தை இன்னமும் மேற்குலகால் பிரயோகிக்கவும் முடியவில்லை. அதே சமயம் ஐ. நா. ஆயுதத்தடையை நீக்காத நிலையில் ஏட்ரியாட்டிக் கடலில் அமெரிக்கா தவிர்ந்த ஐரோப்பிய நாடுகிளின் போர்க்கப்பல்கள் கண்காணிப்பை மேற்கொள்ளும் நிலையும் இப்போதுள்ளது.

இவை இவ்வாறாக இருந்த போதும், போதிய பயிற்சியும் தேவையான கனரக ஆயுதங்களும் கிடைக்குமிடத்து பொசுனிய முசுலிம், குரோசிய கூட்டுப்படைகளால் இராணுவ வெற்றிகளை அடைமுடியும் என்பது இப்போது நிருபணமாகிவிட்டது. ஆனால் பொசுனிய விவகாரங்களில் தலையிட்ட அமெரிக்கா ஒரு திசையிலும், ஐரோப்பிய நாடுகளோ இன்னொரு திசையிலும் இவை இரண்டிற்கும் புறம்பாக ஐ. நா. வோ வேறொரு திசையிலுமாக முரண்பட்டு நிற்பதால், பொசுனிய சிக்கல் எதிர்காலத்தில் என்னவாகும் என்பதே தெரியாத நிலையாகிவிட்டது. ஐ. நா. வைப் பொறுத்தவரை, பொசுனிய சேர்பியர்மீது போர் பிரகடனப்படுத்தும் நிலை வருவதை விரும்பவில்லை. பொசுனிய சேர்பியர் மீது அதிக அழுத்தம் பயன்தராது என்பது ஐ. நா. வின் நிலை. ஐ. நா. வின் 100 க்கு மேற்பட்ட படைவீரர்களை சேர்பியர் தடுத்து வைத்தது குறித்து, பொசுனிய சேர்பிய தளபதி ஜெனரல் றட்கோ மிலாடிச்சிடம் வினவப்பட்ட போது அவர் கேலியாக, "முதலில் நேட்டோவின் அடுத்த தாக்குதல் இலக்கு எதுவென்பதைத் தெரியப்படுத்துங்கள்; பின் இவர்களை விடுவிப்பது பற்றி யோசிக்கலாம்" என்றார்.

இப்போது வெளிவரும் தகவல்களின்படி அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி காட்டர் அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சியின் பயனாக, ஒரு போர் நிறுத்தம் ஏற்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதாக அறியப்படுகின்றது. ஆனால் ஐ. நா., பொசுனிய சேர்ப் படைத்தளபதிகள் நான்கு மாதகால போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தக்கூடிய ஒப்பந்தத்தை நோக்கி ஆமை வேகத்திலேயே முன்னேறுகின்றனர். அமெரிக்காவோ பொசுனியச் சேர்பியர் தாம் கைப்பற்றிய பொசுனியப்பகுதிகளில் கணிசமானவற்றை கைவிட்டு பொசுனிய முசுலிம், குரோசிய கூட்டரசை அங்கீகரித்தால், சேர்பியாவோடு பொசுனியச்சேர்பியர் இணைப்பாட்சியை ஏற்படுத்தலாம் என ஆசை வார்த்தையாக ஆலோசனையொன்றை முன்வைத்துள்ளது. இவ்வாறாக முடிவில்லாத தொடர்கதையாக பொசுனியச் சிக்கல் தொடர்கின்றது. தமக்குள் ஒருமித்த நிலைப்பாடொன்றை எடுக்க முடியாமல் பொசுனியாவின் தலைவிதியை தடுமாற வைக்கும் மேற்குலகைப் பார்க்கும்போது, **"கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன் -வானமேறி வைகுண்டம் போக நினைத்த கதைதான் ஞாபகத்திற்கு வருகின்றது"** ■

## உலகத்தமிழர் இயக்கம் நடாத்திய பொதுத்தேர்வு

### ■1136 மாணவர் பங்கேற்றனர்

கடந்த 17. 12. 1994 அன்று, உலகத்தமிழர் இயக்க கல்விப்பணி 1994 ஆம் ஆண்டிற்கான பொதுத் தேர்வை நடாத்தியது. 22 தேர்வு மண்டபங்களில் தேர்வுகள் நடாத்தப்பட்டன.

யேர்மனியில் உலகத்தமிழர் இயக்கம், தமிழ் மாணவரின் எதிர்கால நலன்கருதி, 'தமிழாலயம்' என்ற பெயரில் கல்வி நிலையங்களை நடாத்திவருகின்றது. யேர்மன் நாடு முழுவதுமாக 78 தமிழாலயங்களில், 2500 இற்கும் அதிகமான மாணவர்கள் தமிழ் பயின்றுவருகின்றனர்.

இந்த மாணவர்களுக்கும் வெளிவாரி மாணவர்களுக்குமாக பொதுத்தராதரப் பாடத்திட்டத்தின்கீழ், உலகத்தமிழர் இயக்கம் ஆண்டுதோறும் தேர்வுகள் நடாத்தி, சான்றிதழ்களை வழங்கிவருகின்றது.

இந்த ஆண்டிற்கான தேர்வுகளை, ஒரேநேரத்தில் யேர்மனி நாடு முழுவதும் -22 தேர்வு மண்டபங்களில், உலகத்தமிழர் இயக்கம் நடாத்தியது. தமிழ், சுற்றாடல் ஆகிய பாடங்களுக்கான -இரண்டாம் கல்வியாண்டிலிருந்து ஒன்பதாம் கல்வியாண்டு வரையிலான தேர்வுகள், ஒரே நேரத்தில் யேர்மன் முழுவதும் நிர்வாக நேர்த்தியுடன் நடாத்தப்பட்டமை பாராட்டத்தக்கது. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அரசியலமைப்பு

## ஜேயாரால் ஜேயாருக்காக ஜேயாருடைய

## ஐ.தே.கட்சியைப் பாதுகாக்க விகிதாசாரப் பிரதிநிதித்துவம்

விகிதாசாரப் பிரதிநிதித்துவம் இரு முதன்மைக் காரணங்களுக்காக ஐரோப்பாவில் தோன்றியது. பல்லினத் தன்மைவாய்ந்த நாடுகளில், சிறுபான்மை இனங்கள் தொகுதிவாரிப் பிரதிநிதித்துவத்தின் மூலம் தெரிவுசெய்யப்பட முடியாத அளவிற்குச் சிதறிவாழும் சூழலில், தேசம் தழுவிய அல்லது மாவட்டம் தழுவிய அளவில் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் பெறவைப்பதற்காக இது உருவானது. 1855 ஆம் ஆண்டு இதற்கான முதலாவது தேர்தல் டென்மார்க்கில் நிகழ்ந்தது.

இதைத் தொடர்ந்து 1892 ஆம் ஆண்டு சுவிட்சலாந்தின் கன்ரன்களிலும் பின்பு, பெல்ஜியத்திலும் இது பயன்பாட்டிற்கு வந்தது.

**சென்ற இதழ் தொடர்ச்சி**

எழுச்சி பெற்றுவந்த தொழிலாளர் வர்க்கம், 19 ஆம் நூற்றாண்டில் நகரப்புறங்களைச் சார்ந்து குவியத்தொடங்கி, இதனால் குறிப்பிடக்கூடிய தொகுதிகளில் மேலாதிக்கம் பெற்று, அதிக ஆசனங்களைத் தொழிற்கட்சி கைப்பற்றும் நிலை வளர்ந்துவந்தது. நாடு தழுவிய விவசாயிகளுடன் ஒப்பிடுகையில், தொழிலாளர் வர்க்கம் 19 ஆம் நூற்றாண்டில் விவசாயிகள் வர்க்கத்தைவிடச் சிறியதுதான். இதனால் நாடு அல்லது மாவட்டம் தழுவிய தேர்தல் முறையின் மூலம், தொழிலாளர் வர்க்கப் பிரதிநிதித்துவத்தை வலுவிழக்கச் செய்வதற்காகவே, பெல்ஜியத்தில் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் முதல் முறையாகப் புகுத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது. தொடக்கத்தில் இது இப்படி அங்கு இருந்திருப்பினும், தொழிலாளி வர்க்கம் வளர்ச்சி அடைந்த பிற்காலத்தில், இது பொருந்தமுடியாது.

இந்த முறையை அறிமுகப்படுத்தியோர், தத்தமது காலச்சூழலில் ஏதோ தமக்குச் சாதகமான காரணங்களையிட்டு அறிமுகப்படுத்தியதுபோலவே, இலங்கையில் ஜே. ஆர். இதனை ஐ. தே. கட்சிக்குச் சாதகமான முறை எனக்கண்டு, பிரயோகத்திற்குக் கொண்டுவந்தார்.

1947 ஆம் ஆண்டிலிருந்து 1977 ஆம் ஆண்டு வரை இலங்கையில் நிகழ்ந்த பொதுத் தேர்தல்களை அவதானிக்குமிடத்து, தனிப்பெரும் கட்சி என்ற வகையில், விகிதாசார அடிப்படையில் ஐ. தே. க. முன்னணியில் இருப்பது அவதானிக்கப்பட்டது. அதாவது ஐ. தே. க. ஆட்சி அதிகாரத்தை இழந்த கட்டங்களிலும்கூட, விகிதாசாரரீதியில் சுதந்திரக் கட்சியைவிடக் கூடிய விகித வாக்குகளைப் பெற்றிருப்பது தெரியவந்தது. இந்நிலையில் தொகுதிவாரிப் பிரதிநிதித்துவத்தைவிடவும் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தைக் கொண்டுவருவது, கட்சி அடிப்படையில் ஐ. தே. கட்சிக்கு இலாபமாகப்பட்டது. எனவே இங்கு தேசிய நலனைவிடவும் ஐ. தே. கட்சியின் கட்சி நலனை முதன்மைப்படுத்தி, அதற்கேற்ப இவ்வரசியல் அமைப்பில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை புகுத்தப்பட்டுள்ளது என்பதே பொதுவான கருத்துமாகும்

இவ்விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் குறைபாடுகள், அதன் நல்ல அம்சங்களைவிடவும் பெரியவையாகும். விகிதாசாரப் பிரதிநிதித்துவம் கொண்டுவரப்பட்டு, அது தொடக்க நடைமுறையிலேயே மாற்றத்திற்கு உள்ளாகியது. ஒன்று விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தில் வாக்கு, நபருக்கு அல்ல; கட்சிக்கே என்பதை அது அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆனால் இது நடைமுறையில் சிக்கலுக்குள்ளாகியது. அதாவது விகிதாசாரப் பிரதிநிதித்துவத்திற்கான பட்டியல் முறையில், பிற்பகுதிப் பெயர்களைக் கொண்டிருந்தவர் தாம் பதவிக்கு வரமுடியாது என்பதை நம்பினர். அதாவது எடுத்துக்காட்டிற்கு ஒரு தேர்தல் மாவட்டப் பட்டியலில் 30 நபர்களின் பெயர்கள் இடம்பெற்றிருக்குமிடத்து, அதில் 10 அல்லது 15 நபர்களே வெற்றி வாய்ப்பு பெற முடியும் என்பதை அப்பட்டியலில் உள்ளவர்கள் உணர்ந்துவிடுவார்கள். பட்டியலில் வரிசைக்கிரமத்தில் உள்ளபடி முதல் 10 அல்லது 15 நபர்களும் பதவி பெற, எஞ்சியோர் பதவி பெற முடியாது என்பதனால், அவர்கள் தேர்தலுக்காக கடுமையாக உழைக்கமாட்டார்கள். அதே வேளை பட்டியலின் முன்வரிசையில் உள்ளோர் தமக்கு வெற்றி நிச்சயம் என்பதாலும் கடுமையாக உழைக்கமாட்டார்கள். இதனால் கட்சிக்குப் பெரும் பாதிப்பு ஏற்படும் என்பதை அனுபவரீதியாக உணர்ந்ததன் மூலமே, இதில் திருத்தத்தைக் கொண்டுவந்தனர். அதன் பிரகாரம் மக்கள் ஒரு கட்சிக்கு மட்டும் வாக்களிப்பதாக இல்லாமல் அக்கட்சியில் உள்ளோரில் விரும்பும் நபர்களுக்கும் வாக்களிக்கக்கூடிய வகையில் விருப்பத்தேர்வு வாக்களிப்பு முறை புகுத்தப்பட்டது. இது முன்பு இருந்ததைவிட சற்று மேலானது. ஆனால் இச்சிறு உண்மையை முன்னுணர, அரசியல் அமைப்புத் திட்டத்தை உருவாக்கியவர்களினால் முடியவில்லை என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

**தமிழீழத்திலிருந்து**
**மு.திருநாவுக்கரசு**

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையானது வேறு பல குறைபாடுகளையும் கொண்டுள்ளது. ஒன்று, மக்களுக்குப் பொறுப்பான ஒரு குறித்த பிரதிநிதி, தொகுதிவாரித் தேர்தல் முறையின் மூலம் பதவியில் இருந்தார். ஆனால் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின்கீழ், ஒரு பிரதிநிதி குறித்த மக்கள் பகுதியினருக்குப் பொறுப்பு என்பதில் இருந்து விடுபட்டுவிட்டார். மக்கள் தமது தேவைக்கு, தமது பிரதிநிதி யாரென்று தெரியாது தவிக்கும் நிலையை இத்திட்டம் உருவாக்கியது. இதனால் மக்களுக்கும் பிரதிநிதிக்கும் இடையிலான தொடர்பும் பரஸ்பர தங்குநிலையும் விடுபட்டது. ஒரு பிரதிநிதி தனது கட்சிக்கு மட்டும் பொறுப்பாக இருக்க முடியுமே தவிர, மக்களுக்கு அல்ல என்ற நிலை இங்கு தோன்றுகின்றது. இது கட்சியின் அதிகார வர்க்க அமைப்புக்கு வலுச்சேர்க்கின்றது.

விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் கீழ் சுயேச்சை உறுப்பினர்கள் தமது வலுவை இழந்தனர். எந்த ஒரு நபரும் தனித்து நின்று, தேர்தலில் நிற்கமுடியாது என்ற நிலையைத் தோற்றுவித்தது. அவ்வாறு சுயேச்சையாக ஒருவர் போட்டியிட முற்பட்டால், அவர்கள் குழுவாக வேண்டும். இவ்வாறு குழுவாகும்போதே அவர் தன் தனித்துவத்தை இழந்து விடுகின்றார். எனவே பெயரளவில் இங்கு சுயேச்சைக்குழு எனச் சொல்லப்பட்டாலும், நடைமுறையில் அவர் குழுவாகும்போது சுயேச்சை இல்லாமலேயே போய்விடுகின்றார்.

**அத்தியாயம் - 6**

இவ்விகிதாசாரப் பிரதிநிதித்துவம் பெரிய கட்சிகளுக்கு வாய்ப்பையும் சிறிய கட்சிகளுக்குப் பாதிப்பான சூழலையும் உருவாக்கியுள்ளன. ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகள் கூட்டுச்சேருமிடத்து, அவை இரண்டு வகைப் பாதிப்புக்குள்ளாகின்றன. ஒன்று, சிறிய கட்சிகள் தேர்தலில் தமது சின்னத்தை இழந்துவிடுகின்றனர்; பெரிய கட்சியின் சின்னத்தின் கீழ் போட்டியிடவேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்படுகின்றது. கட்சிக்கே வாக்கு என்ற முதல் கோட்பாடு இருப்பதனால், பெரியகட்சியின் சின்னத்தின் கீழ் போட்டியிட்ட சிறிய கட்சி, பெரிய கட்சியுடன் முரண்படும் காலத்தில், தனது ஆசனத்தை இழக்கவேண்டி ஏற்படுகின்றது. அவ்வாறு இழப்பதைப் பாதுகாப்பதற்கு, நேரடியாக அரசியல் அமைப்புத் திட்டத்தில் ஏற்பாடு இல்லை. ஆனால் இக்குறைபாட்டை உணர்ந்துகொண்டு, நடைமுறையில் இதனால் வரக்கூடிய நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக, 1994 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலை மையமாகக் கொண்டு, ஐ. தே. கட்சிக்கும் இ. தொ. காங்கிரசிற்கும் இடையே ஏற்பட்ட கூட்டமைப்பில், இரு கட்சிகளும் ஐ. தே. கட்சியின் யானைச் சின்னத்தின் கீழ் போட்டி இடுவதென்று முடிவானது. இதில் இ. தொ. காங்கிரசினால் நிறுத்தப்படும் உறுப்பினர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க, ஐ. தே. கட்சிக்கு உரிமை இல்லை என்று ஓர் ஒப்பந்தத்தை மேற்படி இரு கட்சிகளினதும் தலைவர்கள் செய்துள்ளனர்.

அரசியற் சட்டத்தின்படி யானைச் சின்னத்தின்கீழ் தெரிவான உறுப்பினர்களைப் பதவி நீக்கம்செய்ய, ஐ. தே . கட்சிக்கு உரிமை உண்டு. அரசியற்திட்டம் உருவாக்கிய இந்த உரிமையை மறுதலிப்பதற்கே, மேற்படி ஒப்பந்தம் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. உண்மையில் இப்படியான இந்த ஒப்பந்தம் என்பதே அரசியல் அமைப்பினது குறைபாட்டின் வெளிப்பாடுதான்.

இந்த வகையான ஒப்பந்தம் எவ்வளவு தூரம் வலிமையானது என்பதை உறுதியாகக் கூறமுடியாது. ஓர் இ. தொ. கா. நாடாளுமன்ற உறுப்பினரை ஐ. தே. க. பதவிநீக்கம் செய்யுமாயின், இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் இ. தொ. கா. நீதிமன்றம் செல்லலாம். அரசியல் அமைப்பின் சரத்தை மீறும்வகையில் யாரும் ஒப்பந்தம் செய்யமுடியாது என்றும், எனவே இந்த ஒப்பந்தம் செல்லுபடி அற்றதென்றும் நீதிமன்றம் தீர்க்கலாம். இதனைவிடவும் இன்னொருவிடயமும் உண்டு. அதாவது இனச் சிக்கல் தொடர்பான விடயத்தில், சிங்கள நீதி பரிபாலனத்தின் மனச்சாய்வு சிங்களக் கட்சிகள் பக்கமே. எனவே இப்படியான விடயங்களில் ஐ. தே. கட்சிக்கு சாதகமாகத் தீர்ப்பு அமைவது இயல்பு. இரு சிங்களக் கட்சிகளுக்கிடையிலான சிக்கல்கள் எனில், முதலாவது வகைத் தீர்ப்புக்கோ அல்லது அந்தக் காலகட்ட ஆட்சியாளருக்குச் சாதகமான தீர்ப்புக்கோ நீதிமன்றம் போகலாம்.



விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமை, சிறுபான்மை இனங்களின் நலனில் கணிசமான அளவு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனால் முஸ்லிம் மக்களும், மலையக மக்களும் அதிகம் பாதிப்படைந்துள்ளனர். இம்முறைமை ஐ. தே. கட்சிக்கே முதற்தர சேவை செய்துள்ளது என்பதுடன், சிங்கள இனத்திற்கும் இலாபமீட்டிக் கொடுக்கக்கூடியதாய் உள்ளது. அடுத்து இதனால் பெரிய கட்சிகள் சிறிய கட்சிகளை விழுங்குவதற்கான வாய்ப்பும் ஓரளவுண்டு.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழான தேர்தலில், இடைத்தேர்தலிற்கு இடமில்லாது போய்விடுகின்றது. தொகுதிவாரித் தேர்தலில் எப்போதும் இடைத்தேர்தல்களிற்கு வாய்ப்பேற்படும். இடைத்தேர்தல் நாட்டின் அரசியற்துடிப்பை அறிவதற்கான ஒரு நாடித்துடிப்பாக அமையும். இத்தகைய இடைத்தேர்தல் இல்லாத இடத்து, மாகாணசபைத் தேர்தல், மற்றும் உள்ளூராட்சித் தேர்தல் என்பன நாடித்துடிப்பை ஓரளவு அறிய உதவுமாயினும், இடைத்தேர்தல்களுக்கு இருக்கும் வலு இவற்றிக்கு இருக்க முடியாது. ஏனெனில் இடைத்தேர்தல்களினால் நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய தொகையில் ஏற்படும் மாற்றம், ஒரு முதன்மைத் தாக்கத்தை ஏற்படுத்தும் இயல்புடையது.

அடுத்து ஒரு கட்சி அல்லது ஒரு சுயேச்சைக்குழு தனது நாடாளுமன்றப் பிரதிநிதிப் பதவிகளைப் புறக்கணிக்குமாயின், அதன்மூலம் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்ப, இம்முறைமையில் வழியில்லை. 1991 -1994 ஆம் ஆண்டுக் காலப்பகுதி யாழ். தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகள் இவ்வாறு வெற்றிடமாய் இருந்ததனை நடைமுறையிற் காணலாம்.

இப்படியான ஒரு வெற்றிடநிலை ஏற்படக்கூடும் என்பதைச் சிறிதும் யோசிக்க இயலாதவர்களது அரசியற்திட்டம் என்பதை மனதிற் கொள்ளவேண்டும் என்பதுடன், பொதுவாக அரசியல் அமைப்பில் எதற்கும் ஒரு மாற்றுவழி வைப்பது இயல்பு; ஆனால் அந்த இயல்புகூட இங்கு முதன்மையான விடயத்தில் கவனிக்கப்படவில்லை. ■

**(தொடரும்...)**

## தமிழீழ இயற்கை வளங்களைப்....

ஆகியவற்றின் உதவியுடன் உற்பத்தி செய்ய முடியும். மேலும் கறியுப்பைப் பிரதான மூலப்பொருளாகக் கொண்டு மின்சார இயந்திர சாதன உதவியுடன் பல இரசாயனப் பொருட்கள் - கோஸ்ரிக் சோடா, குளோரின் ஆகியவை கூடுதலான அளவிலும், கண்ணாடி, மட்பாண்ட வகைகள், கடதாசி, புடவை ஆகிய உற்பத்திகளுக்குத் தேவையான சிறுஅளவிலான இரசாயனப் பொருட்களையும் - உற்பத்தி செய்யும் வாய்ப்புகள் உண்டு.

7. கறி உப்பின் பாவனையைப் பொறுத்தவரையில், மனிதநுகர்வுக்குத் தேவைப்படும் அளவு ஏறக்குறையத் திடமானதாகும். நிரம்பிய மூலவளம் கொண்டு, தமிழீழத்தில் செய்யக்கூடிய உப்பின் மேலதிக தொகையை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது அடுத்த நோக்கமாகும்.

8. இன்றைய சூழ்நிலையில் மனிதவலுவுடன் உப்பையும் சேர்த்து நடைமுறைப்படுத்தக் கூடிய தொழில் முறைகள் இனங் காணப்படல் வேண்டும். அவற்றுடன் மீன் பதனிடுதல், தோல் பதனிடுதல் ஆகியவை முதன்மை பெறுகின்றன. கடல் தடைச்சட்டத்தால் மீன் பிடித்துறை பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மீன் பதனிடுதலில் ஓரளவு செயற்பாடு மட்டும் உள்ளது. தோல் பதனிடுதல் முயற்சி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன, கைத்தொழில் பகுதியினரின் விடா முயற்சியால் செயற்பட்டு வருகின்றது.

9. கனிப் பொருட்களைப் பொறுத்தவரையில், குடாநாட்டின் பல பகுதிகளில் ஏராளமான தரம் உயர்ந்த சுண்ணாம்பு கல் படிவங்கள் காணப்படுகின்றன. அதன் பெரும்பகுதி சீமெந்து உற்பத்தியின் பிரதான மூலப் பொருளாக அமைகின்றது. மேலும் வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள வல்லிபுரம், அம்பன் ஆகிய பகுதிகளில் உயர்ந்த ரக "சிலிக்கா" என்னும் கனிப்பொருள் காணப்படுகின்றது. 90 -95% தூய்மை உள்ள இக்கனிப்பொருள் உயர்ந்த ரக கண்ணாடி, சிரமிக் கோப்பை, சோடியம் சிலிகேற்பசை ஆகியவற்றின் உற்பத்திக்கு உகந்தது.

இவ்வாறான இயற்கை எமக்களித்த வளங்கள் எதிர்கால தமிழீழ பொருண்மிய சுபீட்சத்திற்குப் பெரிதும் உதவியளிக்கும். தற்போது உப்பு உற்பத்தியில் தன்னிறைவு காணப்பட்டதுடன், மேலதிக ஓராண்டுக் கையிருப்பும் காணப்படுகின்றது. எனவே எதிர்கால இலக்குகளில் எமது இயற்கை வளங்களின் பயன்பாடு நோக்கி நகர்வோம். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பொசுனியச் சிக்கலை தீர்க்க முனைந்த மேற்குலகே இப்போது சிக்கலின் ஒரு பகுதியாகிவிட்டது

பொசுனியா தொடர்பான நம்பிக்கையூட்டும் செய்திகள் அங்கிருந்து வருகிறது. மேற்குலக படையெடுப்பை நம்பியிருந்த பொசுனிய முசுலிம்கள் தம் கையே தமக்குதவி என்பதை உணர்ந்ததால், சில இராணுவ வெற்றிகளைப் பெற்றனர். அத்தோடு இதுவரைகாலமும் பொசுனிய சேர்பியரின் கொடுங்கோன்மைக்குதவியளித்து வந்த சேர்பிய சனாதிபதி மிலோசவிச் உலக அழுத்தம், பொருண்மியத் தடை காரணமாக அவர்களைக் கைகழுவி விட்டமை அறிந்ததே. இப்போது என்னவென்றால் இத்தகைய மாற்றங்களால் வெகுண்ட பொசுனிய சேர்பியர் மீண்டும் தமது அடாவடித் தனங்களை இன்னமும் வலுவிழக்காத தமது படை மேலாண்மையைப் பயன்படுத்தி பொசுனிய முசுலிம்கள் மேல் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். இதனால் முசுலிம்களின் அவலக் கதை நீடிப்பதோடு, ஐ. நா. வின் முகத்திலும் பெரும் கரியை அள்ளிப் பூசியதோடு, வான் வெளித்தாக்குதலை நிகழ்த்தி அச்சுறுத்த முனைந்த மேற்குலகப் படை கூட்டமைப்பான நேட்டோவுக்கும் தீராத அவமானத்தை ஏற்படுத்திவிட்டது. அண்மைக்கால பொசுனியச் சேர்பியரின் ஆக்கிரமிப்புக்கள், மேற்குலக அரசியலை பெருத்த இக்கட்டுக்குள் தள்ளிவிட்டும் உள்ளன.


### வென்றதை இழந்த பொசுனிய முசுலிம்கள்

கடந்த ஆண்டு டிசம்பர் தொடக்கத்திலே தான் பொசுனிய முசுலிம்கள் இராணுவ ரீதியான பெரு வெற்றியொன்றை அடைந்திருந்தனர். பொசுனிய கேர்சகோவினாவின் 70 விழுக்காட்டு நிலத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் சேர்பியர் மேல், தீடிரென வியக்கத்தக்க முறையில் -பொசுனியாவின் வட மேற்குப் பகுதியின் பிரதான நகரான பீகச்சை (Bihac) சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து சேர்பியரை விரட்ட பெரும் தாக்குதலை முசுலிம்கள் மேற்கொண்டிருந்தனர். முதல் தடவையாக பொசுனிய முசுலிம்களின் அரச படை தாங்கிகள், பீரங்கிகள் போன்றவற்றைப் பயன்படுத்தி பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட சேர்பிய மக்களையும் சேர்பியப் படைகளையும் இப்பகுதியிலிருந்து விரட்டி 260 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு மண்ணை மீட்டனர். சேர்பியருக்கு பெரும் தோல்வியாக இப்போர் முடிந்தது. பொசுனிய சேர்பியரின் போர் உறுதி குன்றி விட்டதாக அப்போது கூறப்பட்டது. அத்தோடு சேர்பியாவின் உதவிகள் நிறுத்தப்பட்டதன் பாதகமான விளைவுகள் இதற்குக் காரணம் என்று கூறப்பட்டது. ஐ. நா. வின் பாதுகாப்பு வலயங்களுள் ஒன்றான பீகச் நகரைச் சுற்றிய மோதலை ஐ. நா. ஆட்சேபித்த போதும், இழந்த மண்ணை மீட்க பொசுனியாவின் அரசு போர் தொடுப்பதை தான் தடுப்பது இயலாத வேலை எனக்கூறியது. ஆனால் இப்போது எல்லாம் தலைகீழாகிவிட்டது. பெருமளவில் பின்வாங்கிய சேர்பியர் தமது வலிமை யாவற்றையும் ஒன்று சேர்த்து மிகத் தீவிரமான தாக்குதலை பீகச் நகரைச் சுற்றியிருந்த பொசுனிய அரச படைகள் மீது தொடுத்தனர். இப்போது நடைபெறும் மோதலில் பொசுனிய சேர்பியர் தாம் இழந்த யாவற்றையும் திரும்பப் பெற்றதோடு, ஐ. நா. வின் பாதுகாப்பு வலயமான பீகச் நகருக்குள் நுழைந்தும் விட்டனர். இதனால் பெரும் அச்சம் கொண்ட பீகச் நகர மக்கள் தலைதெறிக்க தப்பியோடினர். தாங்கமுடியாத மனித அவலம் இங்கே நிகழ்வதாக அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம் கூறுகின்றது. அதுமட்டுமன்றி ஐ. நா. வின் ஆணைப் பகுதிக்குள்ளே நுழைந்ததால் ஐ. நா. வின் எதிர்காலப் பணிகளே கேள்விக்குறியாக்கி விடப்பட்டும் விட்டது. அத்தோடு குரோசியாவில் இன்னமும் தமது கட்டுப்பாட்டிலிருக்கும் பகுதியிலிருந்து சேர்பியர் இத்தாக்குதலை மேற்கொண்டதால் அப்பகுதிநிலைகள் மீதே, நேட்டோ அமைப்பின் மிக நவீன குண்டு வீச்சு விமானங்கள் மூலம் பெரும் குண்டுகளை வீசிய போதும் எப்பயனும் அதனால் கிட்டவில்லை. **இப்போது என்னவென்றால் கிழக்குப் பொசுனியாவில் பலநூற்றுக்கணக்கான ஐ. நா. வின் அமைதிப்படையினரைத் தடுத்து வைத்திருக்கும் பொசுனியச் சேர்பியர், நேட்டோ அமைப்பு மேற்கொள்ளும் தமது நிலைகள் மீதான வான்வெளித் தாக்குதல்களை இதனால் தள்ளிப்போட வைத்தும் விட்டனர்.** இப்போது பொசுனிய சேர்பியரின் முன்னேற்றத்தை தம்மால் தடுக்க முடியாததென நேட்டோ அமைப்பே கூறிவிட்டது. இதற்கிடையில் பொசுனியா தொடர்பாக மேற்குலக நாடுகட்கும் அமெரிக்காவுக்கும், ருஸ்யாவுக்குமிடையில் பெரும் பிளவுகளும் இப்போது தோன்றிவிட்டன. இவற்றால் மீண்டும் பொசுனிய முசுலிம் அரசே பெரிதும் பாதிக்கப்பட்டு விட்டது.

ஏனென்றால் பொசுனிய முசுலிம்கட்கு அண்மைக் காலமாக கனரக ஆயுதங்கள் கிடைக்கும் நிலைமைகள் தோன்றின. அமெரிக்காவின் மறைமுக ஆதரவோடு குரோசியாவுக் கூடாக துருக்கி, ஈரான் போன்ற நாடுகளிலிருந்து பெருமளவு ஆயுதங்கள் கொண்டு வரப்பட்டன.

**தமிழீழத்திலிருந்து பாலகுமாரன்**

அண்மைக்காலமாக பொசுனிய முசுலிம்கள் நல்ல காலணிகளையும் புதிய ரக A. K 47 ரக துப்பாக்கிகளையும் தாங்கித் திரிவதாகச் செய்தியாளர் கூறுகின்றனர். இதற்கிடையில் அமெரிக்காவின் படை அதிகாரிகள் பொசுனிய முசுலிம்கட்கு உதவுவதாகக்கூட செய்திகள் வெளிவந்தன. ஆனாலும் உடனடியாக பொசுனியப் படையினர் இவற்றினால் முற்றிலும் நன்மை அடையத்தக்கதாக இல்லையென்றே இப்போது கருதப்படுகின்றது. இதற்கு இரண்டு பிரதான காரணங்கள் கூறப்படுகின்றன. நீண்ட காலமாக தக்க பயிற்சிகளின்றி இருக்கும் பொசுனியப் படையினருக்கு தாங்கிகள், கவசவாகனங்கள், கனரக பீரங்கிகள் போன்றவற்றை திறமையாக இயக்க, பயிற்சி கொடுக்க அதிக காலம் பிடிக்கும் என்றும் எனவே **புதிய ஆயுதங்கள் வருகைக்கும் - இவர்கள் பெறவேண்டிய பயிற்சிக்கான இடைவெளிக் காலத்தை பொசுனியச் சேர்பியர் பயன்படுத்தி மேலும் வெற்றிகளைப் பெறமுடியும் என்றும் படை ஆய்வாளர்கள்** இப்போது கூறுகின்றனர். அத்தோடு அமெரிக்கா இப்போது பொசுனிய முசுலிம்கட்கு எதிரான ஆயுதத்தடையை நீக்கமுற்பட்டபோதும், கடந்த 3 ஆண்டுகளாக ஆயுதத்தடை நீக்கப்படவேண்டும் என்று மிகக்கடுமையாக உலகைக்கோரி வந்த பொசுனிய அரசு இப்போது சற்றுப் பின்வாங்குகிறது. இதற்குக் காரணம் இவ்வாயுதத் தடை நீக்க முடிவு **அமெரிக்காவால் மட்டும்** எடுக்கப்பட்டிருப்பதாலும், இம்முடிவுக்கு மிகக்கடுமையான எதிர்ப்பை பிரான்சு, பிரித்தானியா போன்றவை காட்டுவதும் தமது துருப்புக்களை அவ்வாறான நிலையில் திரும்பப் பெற்றுவிட நேரிடும் என அச்சுறுத்துவதும், இதனால் ஐ. நா. வின் மனிதாபிமானப்பணி முற்றிலுமாக நிறுத்தப்படும் நிலை தோன்றிவிடும் என்பதேயாகும். இப்போது பொசுனியாவில் தலையிட்ட நேட்டோ, ஐ. நா. அமெரிக்கா, ருஸ்யா இவர்களின் ஒன்றுக்கொன்று மிக முரண்பட்ட போக்கால் பொசுனியாவின்




குரோசிய முசுலிம் கட்டுப்பாட்டுப் பகுதி — சேர்பிய கட்டுப்பாட்டுப் பகுதி

நிலை மேலும் குழப்பகரமானதாகிவிட்டது.

### ஊர் இரண்டுபட்டால்...

பொசுனியா தொடர்பான அமெரிக்காவின் போக்கு, என்றுமில்லாதவாறு மிகக்கடுமையாக எல்லாத் தரப்பாலுமே இப்போது எதிர்க்கப்படுகின்றது. முன்னாள் யூகோசிலேவிய பகுதிகளில் இப்போது தனது படைகள் எதுவுமில்லாத நிலையில் அமெரிக்கா தன்னிச்சையாக வீராப்பாக எடுக்கும் முடிவுகள், அதிகம் படைகளை வைத்திருக்கும் பிரித்தானியா (3160), பிரான்சு (4450), கனடா (2040) போன்றவை தம்மையே பாதிக்குமென கருதுகின்றன. ஒரு பிரான்சிய அதிகாரி இதுபற்றி மிகக் கோபமாக கூறுகையில் **பொசுனியாவிலிருந்து நாம் கற்ற பாடம் என்னவென்றால், அங்கு அமெரிக்கப் படையினர் எவரும் இல்லை என்பதே என்றார்.**

அதே சமயம் சனாதிபதி கிளின்

## உலக உலா

டனுக்கோ அமெரிக்க கொங்கிரஸ் போடும் அழுத்தத்தால் எதுவும் செய்ய முடியாதநிலை. பொசுனியாவிற்கு படைகளை அனுப்பவோ, அங்கு பணிபுரியும் ஐ. நா. படைகட்கு நிதியுதவி அளிப்பதையோ அமெரிக்க மக்கள் அவையும் செனற்றும் சற்றும் விரும்பவில்லை. இதற்கிடையில் அமெரிக்க நிருவாகத்தினரோ ஐரோப்பிய நாடுகள் வரவர கூடுதல் முசுலிம் எதிர்ப்புணர்வு கொண்டவராக, அவர்கள் தங்களைப் பாதுகாக்க எடுக்க முயலும் தற்காப்பு நடவடிக்கைகளைத் தடுப்போராக மாறிவருவதாகக் குற்றம் சாட்டுகின்றனர்.

எனவே ஐ. நா. வில் பேசும் போது சனாதிபதி கிளின்டன் கடந்த அக்டோபர் 15 ஆம் நாளுக்குள் இறுதியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள 51-49 விழுக்காட்டு அமைதித்திட்டத்தை (இத்திட்டம் 51 விழுக்காட்டு பொசுனியப் பகுதியை பொசுனிய முசுலிம்கள், குரோசியர்க்கும், 49 விழுக்காட்டை பொசுனிய சேர்பியர்க்கும் பங்கிடுகின்றது. சேர்பியர் ஏற்காவிட்டால் பொசுனிய முசுலிம்கட்கு **எதிரான ஆயுதத் தடையை ஐ. நா. நீக்கவேண்டும் எனக் கோரிய போது, அதற்கு மிகக்கடுமையான எதிர்ப்பு ருஸ்யா, பிரான்சு, பிரித்தானிய தரப்பிலிருந்து வந்தது.** எனவே இப்போது அமெரிக்கா மட்டுமே இத்தடையை தான் நீக்கிவிட்டதாகவும் இதுவரை காலமும் எட்ரியாட்டிக்கடலில் ஆயுதங்கள் கப்பல்களில் வருகின்றதா என்பதைக் கண்காணிப்பதில் ஈடுபட்டிருந்த அமெரிக்க போர்க்கப்பல்களை விலக்கிக்கொள்வதாகவும் அறிவித்தது. இத்தகைய முடிவினை கிளின்டன் எடுத்தபோதும், இம் முடிவினை ஐரோப்பிய நாடுகட்கு பாதிப்பில்லாமல் மெல்ல நடைமுறைப்படுத்தலாம் என கிளின்டன் எண்ணிய எண்ணம் இப்போது மண்ணாகிவிட்டது. ஏனென்றால் இப்போது அண்மையில் அமெரிக்காவில் நடந்த தேர்தலின்பின் அமெரிக்க மக்கள் அவையிலும், செனற்றிலும் குடியரசுக் கட்சியே என்றுமில்லாதவாறு பெரும்பான்மையைப் பெற்றுவிட்டது. புதிய நிலைவரம் செனற்றில் குடியரசுக் கட்சியைச் சேர்ந்தோர் 53 ஆகவும், சனநாயகக் கட்சியைச் சேர்ந்தோர் 47 ஆகவும், மக்களவையில் சனநாயகக் கட்சியினர் 199 இடங்களைக் கொண்டதாகவும் குடியரசுக் கட்சியினரே 227 உறுப்பினரைக் கொண்டதாக பெரும்பான்மை பெற்றுவிட்டனர். அதிலும், இப்போது செனற் சபையின் அதிகாரம் மிக்க தலைவரான குடியரசுக் கட்சியாளரான பொப் டோலும் (Bob Dole) மக்களவையின் செல்வாக்குமிக்க நியுட் ஜிஞ்சரிச்சும் **(Newt Gingrich), பொசுனியாவில் இருந்து ஐ. நா. படைகள் உடனடியாக வெளியேற வேண்டும் என்றும், பொசுனிய முசுலிம்கட்கு எதிரான ஆயுதத் தடை உடனடியாக நீக்கப் படவேண்டும்** என்றும் கடுமையாகக் குரல் கொடுக்கின்றனர். நேட்டோவை, ஐ. நா. வை மிகக் கடுமையாகக் குறைகூறும் இவர்கள் போக்கு, ஐரோப்பிய நாடுகளிடையே பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியும், கிளின்டனால் எதுவுமே செய்யமுடியாத நிலையைத் தோற்றிவிட்டது. புதிய அமெரிக்க அதிகாரச் சமநிலையின் விளைவு இது. இவ்வாறான சிக்கலெல்லாம் பொசுனிய மக்களுக்கே தீங்காகின்றது. எனவே இப்போது முன்னெப்போதும் இல்லாத அளவில் மேற்குலகம் பொசுனியா தொடர்பாக இரண்டுபட்டுவிட்டது. "ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம்" என்பதைப் போல், சேர்பியர் தமது விருப்பத்தையே செயற்படுத்த வாய்ப்பாகியும் விட்டது.

### முரண்பாடுகள் முனைப்படைகின்றன

பொசுனிய முசுலிம்கட்கு எதிரான ஆயுதத் தடைநீக்கத்தை முற்றாக பிரித்தானியா, பிரான்சு, ருஸ்யா போன்றவை வெவ்வேறு காரணங்களுக்காக விரும்பவில்லை. ஆயுதங்கள் தடை நீக்கப்பட்டு போர் முனைப்படைந்தால் தமது நாட்டு படைவீரர் இடையில் சிக்கி இறக்க நேரிடும் என்பதும் பொசுனிய முசுலிம்கள் கையோங்கும் நிலையில் பெருமளவு ஆயுதங்கள் அதற்குக் கிடைக்கும் நிலையில் பொசுனிய சேர்பியத் தலைவர் றடோவான் காஜிச்சுக்கு மீண்டும் சேர்பியா உதவக்கூடும் என்கிற அச்சமும் பிரித்தானியா, பிரான்சு போன்ற நாடுகளை பிடித்தாட்டுகின்றது. அத்தோடு ருஸ்யாவின் போக்கும் இப்போது மிக வேறுபட்டதாகிவிட்டது. தமது சக சிலவிய

தொடர்ச்சி 7 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 16-01-93 அன்று வங்கக்கடலில் காவியமான உங்கள் நினைவுகள் எங்கள் மனங்களில் கரையேறும் அலைகளாக மீண்டும்...மீண்டும்...




www.tamilarangam.net

# கேணல் கிட்டுவின் நினைவாக

# எம் இளையோர் மகிழ

# ஓர் இனிய உலகம்

## (சிறுவர் பூங்கா)







"முன்னேறிய நாடுகளில், அந்நாட்டுப் பாதுகாப்புக்காக ஒதுக்கப்படும் ...ியளவுக்குச் சமமாகக் குழந்தைகளின் பராமரிப்புக்கும் கல்விக்கும் நிதி ஒதுக்கப்படுகின்றது, நாமும் குழந்தைகளின் பராமரிப்பு, கல்வி ஆகியவற்றை அமைப்பு ரீதியாக ...ங்குபடுத்தி எழுச்சிமிக்க எதிர்கால ...ாயத்தை உருவாக்க வேண்டும்"

- கேணல் கிட்டு

"குழந்தைகளைச் சரியாக வழிநடத்துவதன் மூலமே, நாம் ஒரு எழுச்சிமிக்க எதிர்கால சந்ததியினரை உருவாக்க முடியும், குழந்தைப் பிராயத்திலேயே அவர்களின் மனநிலையை உளவியல் ரீதியாக, திட்டமிட்டு வளர்ப்பதன் மூலம் சிறந்ததோர் எதிர்காலச் சந்ததியை உருவாக்கலாம்"

- கேணல் கிட்டு





"குண்டு வீச்சு விமானங்களின் தாக்குதல்களினாலும், இராணுவ முகாம்களிலிருந்து ஏவப்படும் குண்டுகளினாலும் எமது குழந்தைகளின் மனோநிலை பெரிதும் பாதிக்கப்படுகின்றது, அதனால் எமது எதிர்கால சமுதாயமே உளவியல் ரீதியில் மிகவும் பாதிப்படைந்து வருகின்றது"

- கேணல் கிட்டு

"உளவியல் ரீதியாகப் பாதிப்படையக் கூடாது என்பதற்காகவும், பாதிப்படைந்த குழந்தைகளுக்கு சிறிதளவேனும் நிவர்த்தி கொடுப்பதற்காகவுமே நாம் ஆங்காங்கு சிறுவர் பூங்காக்கள், சரணாலயங்கள், சிறுவர் விளையாட்டரங்குகள் ஆகியவற்றை அமைத்து வருகின்றோம், இவற்றால் குழந்தைகளின் மனநிலை, தேகாரோக்கியம், அறிவாற்றல் ஆகியவற்றை வளர்க்க முடியும்"

- கேணல் கிட்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இந்தியப் பிரமை தமிழரிடையே அகலும் போது சிங்கள புத்திஜீவிகளிடம் புதிதாக தோன்றுகிறது

**- கருத்தரங்கில் புதிய ஜனநாயகக் கட்சியின் செயலர்**

"சமாதானப் பேச்சுவார்த்தைகள் இரகசியமாக நடைபெறுவதன் மூலம், சாதகமான முடிவுகளை விரைவில் எடுக்க முடிவதுடன், அநாவசியத் தலையீடுகள், விமர்சனங்கள் என்பவற்றை இதனால் தவிர்த்துக் கொள்ள முடியும். ஆனால் சமாதானப் பேச்சுவார்த்தையின் முடிவுகள் நிச்சயமாக மக்களின் முன் அங்கீகாரத்திற்கு விடப்படவேண்டும்". இவ்வாறு கொழும்பு பல்கலைக்கழக முதனிலை சட்ட விரிவுரையாளர் வி. ரி. தமிழ்மாறன் வெள்ளவத்தை கிங்ஸ்ரன் அனைத்துலக கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

'சமகால உலகில் சமாதான முயற்சிகள்' என்ற தலைப்பில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், அயர்லாந்து விடுதலைப் போராட்டத் தலைவர் ஜெரி அடம்ஸ் பெரும் பயங்கரவாதியென ஒருபோது வர்ணிக்கப்பட்டவர். பிரித்தானியப் பிரதமர் இந்த ஐ. ஆர். ஏ. போராளியுடன் சந்தித்து சமாதானம் பேசியது -ஒப்பந்தம் முடிவுக்கு வரும்வரை எவருக்கும் தெரியாது.

"சமாதான முயற்சிகள் ஏற்படும் போது பயங்கரவாதிகள் என்று பிரித்துப் பார்ப்பதோ, பட்டம் சூட்டுவதோ எதுவித பயனும் தரமாட்டாது" என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணரவேண்டும். ஏதோ ஒரு தீர்வை அல்லது முடிவை ஏற்படுத்துவதற்கான ஒரு வழியாகவே போர் நடைபெறுகின்றது.

சமாதானத்தின் மூலம் தான் நல்லதொரு தீர்வைக் காண முடியுமென உலக வரலாறுகள் கூறுகின்றன. இரண்டாவது உலகப் போரிற்கு பின்பு, சமாதானத்திற்கான வழி ஏற்பட்டிருக்கின்றதே தவிர, சமாதானம் ஏற்படவில்லை" என்றார்.

இக்கருத்தரங்கில் உரையாற்றிய புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலர் திரு. சி. கா. செந்தில்வேல், வெளிநாட்டவர்களுக்கெதிராக தொடக்கப்பட்ட சிங்கள தேசியவாதம் இனவாதமாக மாறி, சிங்கள -முசுலிம் கலகமாகி, தமிழ் -சிங்களக் கலவரமாக மாறி, இன்று அது பேரினவாதமாக வளர்ந்துள்ளது. சிங்களத் தேசியவாதம் என்பது பேரினவாதப் போராகி, இன்று மக்கள் ஏதிலிகளாக (அகதி) அல்லல்படும் அளவிற்கு தள்ளிவிட்டது.

இந்த பேரினவாத அலை மதவாதிகள், அறிவுஜீவிகளிடம் மட்டுமன்றி ஆயுதப்படையினர் மத்தியிலும் வேரூன்றிவிட்டதை நாம் காண்கின்றோம். எனவே பௌத்த சிங்கள இனவாதம் என்ற கருத்தியலில் ஜே. ஆர். முதல், டி. பி. விஜேதுங்கா வரை மக்கள் தவறாக வழிநடத்தப்பட்டதே நாட்டின் சீரழிவுக்கு காரணம் என்பதை நியாயமாக சிந்திப்பவர் எவரும் மறுக்க மாட்டார்கள்.

அயல் நாட்டில் நமது நட்பு சக்தியாக இருக்கவேண்டிய இந்தியா, தென்னாசியாவில் தனது பிராந்திய மேலாதிக்கத்தை வலுப்படுத்த முயற்சிப்பது அவதானிக்கப்பட வேண்டுடியதாகும். இந்தியப்பிரமை இன்று தமிழரிடையே இல்லாமற் போய்க்கொண்டிருப்பினும், சிங்கள அறிவுஜீவிகள் மத்தியில் இந்தப் பிரமை புதிதாகத் தோன்றியுள்ளமை வேதனைக்குரியதாகும்.

சமாதானம் என்பது தடுக்கப்பட்ட பாதையைத் திறப்பதோ, மின்சாரம் கொடுப்பதோ அல்லது வவுனியாவிலிருந்து பாதை போடுவதோ அல்ல. சுயநிர்ணய அடிப்படையில் அரசியல் தீர்வை முன்வைத்து, அரசியலமைப்பில் அதற்கான திருத்தம் கொண்டு வந்து, நிரந்தர சமாதானம் ஏற்பட இதயசுத்தியுடன் ஈடுபடவேண்டும்" என்றார். ■

## தமிழீழ மீட்புநிதி கடன் 1200 பேருக்கு மீளளிப்பு

தமிழீழ மீட்புநிதிக்கு கடன் கொடுத்து உதவியவர்களில், 19-94 மாவீரர் ஏழலில் (வாரம்) மீளளிப்பதற்கென 1200 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களின் எண்பட்டியல் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையினரால் வெளியிடப்பட்டுள்ளது. 1993 -மார்கழி தொடக்கம் 1994 -கார்த்திகை வரையிலான காலப்பகுதிக்கு கடன் மீளளிப்பதற்கென இவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களின் விபரங்கள் ஈழநாதம் செய்தித்தாளில் வெளிவந்துள்ளன. இதேவேளை 1990, 1991, 1992, 1993 ஆம் ஆண்டுகளில் மீளளிப்பதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில், இதுவரை மீளப்பெறாதவர்களும் உரிய ஆவணங்களைக் கையளித்து, அவர்களின் கடனை 1994 மாவீரர் ஏழலில் மீளப்பெற்றுக்கொள்ளலாம் எனவும் நிதித்துறையினர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ■

# கச்சதீவை கபளீகரம்....

பிரகடனம் செய்தது. முதன் முதலில் கரையிலிருந்து 5 மைல்களுக்கப்பால் இலங்கை, இந்திய எல்லைக்குட்பட்ட பகுதியினையும் (தலைமன்னாரிலிருந்து -சுண்டிக்குளம் வரை) 1990 இன் பின்னர் வடபகுதி முழுவதையும் இவ்வாறு தடைசெய்யப்பட்ட வலயமாகப் பிரகடனம் செய்தது. இதன் விளைவாக இலங்கையின் வடபகுதி மீனவர்கள் முற்றாக மீன்பிடி செய்யத் தடைசெய்யப்பட்டனர். ஆயினும், இந்திய மீனவர்கள் இலங்கையின் தடைசெய்யப்பட்ட பகுதிக்குள் தடையையும் மீறி மீன்பிடித்தலில் ஈடுபடலாயினர். இதன் காரணமாக சிறீலங்கா கடற்படையினரின் கடும் தாக்குதல்களுக்குள்ளாகினர். இதன் காரணமாகக் கச்சதீவு தொடர்பான புதிய நிலைப்பாட்டை இந்தியா முன்னெடுக்க வேண்டியதாயிற்று.

### இந்தியாவின் நிலைப்பாடும்
#### வடபகுதி மீனவர்களின் எதிர்காலமும்.

1974 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின்படி கச்சதீவுப் பகுதியில் பாரம்பரியமாக அனுபவித்து வந்த உரிமைகளைத் தொடர்ந்தும் அனுபவிக்க இந்தியா, இலங்கை அரசினை வற்புறுத்தி வருகின்றது. வரலாற்று ரீதியான ஆதாரங்களை மீண்டும் கிளப்பி கச்சதீவினையும் அதன் கடற்பகுதியினையும் மீண்டும் கைப்பற்றிக்கொள்ள முனைகின்றது. பேராசிரியர் வி. சூரியநாராயணன் என்பவர் "வரலாற்று ரீதியாக இராமநாதபுர ஜமீந்தார் ஆட்சியில், கச்சதீவு ராமநாதபுர ராஜாவின் (Raja of Ramanad) கீழ் இருந்ததாக பல ஆவணங்களை ஆதாரம் காட்டியுள்ளார். அனைத்துலக சட்டப் பேராசிரியர் T. S. ராமராவ் இலங்கையானது கச்சதீவை நிர்வாகம் செய்வதற்கான எந்த ஒரு சான்றினையும் தாம் அறிந்த வரையில் கொண்டிருக்கவில்லை என்றும் 1947 இல் ஜமீந்தார் ஒழிப்புச் சட்டத்தின் பின் கச்சதீவு தமிழ் நாட்டு அரசுக்குரியதாயிற்று" என்றும் கூறுகின்றார். அத்துடன் "வெற்றி கொள்வதற்கான உறுதியான ஆதாரம் இந்தியாவுக்கு இருந்தும் வன்மம் பாராட்டாது 1974 இல் இதனை இலங்கைக்கு நட்பு ரீதியாக கையளித்தது" என்றும் எல்லைகளை வரைந்த போது டில்லி அரசு சமஅளவு தூரத்தை கணிப்பில் எடுத்துக் கொள்ளவில்லை எனவும், கச்சதீவு இலங்கையின் பக்கம் போகக்கூடியவாறு எல்லை வரையப்பட்டன என்றும் கூறுகின்றார்.

இந்திய கடற்படை அதிகாரியான திரு. சார்நெஸ்ரோ என்பவர் கருத்துத் தெரிவிக்கையில், 1974 ஆம் ஆண்டு ஒப்பந்த 5 ஆவது சரத்து, இருநாட்டு மீனவர்களும் கச்சதீவுப் பிராந்தியத்தில் மீன்பிடிக்க அனுமதியுண்டு எனக் கூறுகின்றது எனவும், 1976 ஒப்பந்தப்படி மன்னார் வளைகுடாவிலும் வங்காளவிரிகுடாவிலுமே அனுமதியின்றி ஒருநாட்டின் எல்லைக்குள்மற்றையநாடுமீன்பிடித் தொழில் செய்யமுடியாது எனக் கூறுகின்றது என்றும் கூறுகின்றார்.

மேற்குறிப்பிட்ட கருத்துக்களை நோக்கும் போது கச்சதீவுப் பகுதியில் தொடர்ந்தும் இந்தியா தனது ஆதிக்கத்தை நிலைநாட்டுகின்ற போக்கினையே காட்டி நிற்கின்றது.

கச்சதீவுப் பகுதியினை இந்தியாவுக்கு விட்டுத்தர வேண்டுமெனவும், பதிலாக இந்தியாவுக்கு உரித்தான 'வோட்ஜ்' (Wadge) மீன்பிடி மேடையில் இலங்கை மீனவருக்கு அனுமதி வழங்கலாம் எனவும் இந்திய தரப்பில் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டும் உள்ளது.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா "தமிழக மீனவர்களின் நலன்களைப் பாதுகாக்க இலங்கையிடமிருந்து கச்சதீவை காலவரையற்ற குத்தகைக்குப் பெற்றுத்தர வேண்டும் எனக் கூறியுள்ளார். இதனைப் பெற்றுவிட்டால் அத்தீவைச் சுற்றியுள்ள கடல் நீரில் மீன் பிடிக்கும் உரிமை இயற்கையாக இந்திய மீனவர்களுக்கும் தமிழக மீனவர்களுக்கும் கிடைத்துவிடும் என்பது உறுதி எனவும் சிறீலங்காவிலுள்ள அரசியல் தலைமை மாற்றத்தைப் பயன்படுத்தி மத்திய அரசு மிகவிரைவில் இப்பணியைச் செய்ய வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்துள்ளார் (தினத்தந்தி செப். 94)

கச்சதீவுப் பகுதியில் இந்தியாவின் கவனம் திரும்பியுள்ளமைக்குக் காரணம், அப்பகுதியின் சிறந்த கடல் வளத்தின் முக்கியத்துவமேயாகும். பெரும்தொகையான அந்நியச் செலாவணியை ஈட்டித்தருகின்ற இறால், கடலட்டை போன்றன மிகுந்து காணப்படுவதும் பல ஆயிரக்கணக்கான மீனவக் குடும்பங்கள் இக் கடற்பகுதியை நம்பி வாழ்வதும் இப்பகுதியில் கவனம் திரும்பியமைக்குரிய காரணங்களாகவுள்ளன.

### வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் ஆபத்துக்கள்

இந்தியாவினால் கச்சதீவுப் பகுதியானது குத்தகைக்குப் பெறப்படுமானால் இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பு என்றுமில்லாதவாறு மிக மோசமானதாகவே அமையும். கடந்த காலங்களில் இந்திய மீன்பிடி ரோலர்கள் பேசாலை, நெடுந்தீவு, பாலைதீவு ஆகிய பகுதிகள் வரையிலும் சென்று மீன் வளங்களைச் சுரண்டிச் சென்றதுடன் இந்திய மீனவர்கள் வடபகுதி மீனவர்களின் மீன்பிடி வலைகளைச் சேதப்படுத்தியும் களவாடியும் சென்றுள்ளனர். இப்பகுதியில் தொடர்ந்தும் தமது ஆக்கிரமிப்பைச் செய்வார்களாயின் சுமார் ஒரு இலட்சம் தமிழீழ மீனவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாவர். இப்பகுதி மீன்பிடி மூலம் கிடைக்கும் அந்நியச் செலாவணி சம்பாத்தியமும் பெரும் பாதிப்புக்குள்ளாகும்.

வடபகுதியைச் சேர்ந்த மன்னார்த் தீவுப்பகுதி, யாழ். மேற்குக்கரையோரம், யாழ்ப்பாண தீவுப்பகுதிகள், பூநகரி, விடத்தல்தீவு, நாச்சிக்குடா போன்ற பகுதியில் உள்ள மீனவர்களுக்கு இலங்கையின் ஏனைய பகுதிகளில் உள்ளது போன்று கரையிலிருந்து 200 மைல் தூரம் வரையிலான கடற்பரப்பு கிடையாது, அத்துடன் இப்பகுதியிலிருந்து வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்வதும் சாத்தியமற்றது. இந்நிலையில் குறுகிய பாக்குநீரிணைப் பகுதியே மிக முக்கியமான தளமாக உள்ளது. இந்நிலையில் தனது கடல்எல்லையுடன் இந்தியா நில்லாது, கச்சதீவு கடற்பகுதியிலும் இலங்கையின் எல்லைக்குட்பட்ட பகுதியையும் பயன்படுத்த முற்படுவது ஒருவகையில் ஆக்கிரமிப்பு முயற்சியாகவே கொள்ளலாம்.

இந்தியா கோருவது போன்று கச்சதீவுப் பகுதியை சிறீலங்கா அரசு குத்தகைக்கோ அல்லது விட்டுக்கொடுப்போ செய்யாது எனக் கூறி விடுவதற்கில்லை. ஏனெனில் இக்கடற்பிராந்தியத்தின் முழுமையான பயன்பாடும் வடபகுதி தமிழ் மீனவர்களுக்கே உரியதாகும். ஏற்கனவே கடல் வலயத் தடைச் சட்டம் போட்டு அப்பாவி மீனவர்களைக் கொடுமைப்படுத்தும் சிறீலங்கா அரசு, கச்சதீவுப் பகுதியை இந்தியாவுக்கு விட்டுக் கொடுத்தால் அது ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இதன் மூலம் தமிழக மீனவர்களையும், வடபகுதி தமிழ் மீனவர்களையும் மோதவிட்டு அரசியல் இலாபம் தேடவும் முயற்சிக்கலாம். எனவே கச்சதீவு விடயத்தில் எமது தமிழ் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியமாகிறது.

1974 இலும் 1976 இலும் இலங்கை - இந்திய பாரம்பரிய நீர்ப்பரப்பிற்கிடையிலான கடல் எல்லைகள் வகுக்கப்பட்டபோது, இலங்கை முன்பு பயன்படுத்திவந்த வோட்ஜ் மீன்பிடி மேடையை முற்றாக இழந்தது. அத்துடன் வடபகுதியிலுள்ள பேதுறு மேடையின் 2/3 பகுதியையும் இந்தியாவிடம் இழக்க நேரிட்டது. வட பகுதிக்கான கடல் பிராந்தியம் மட்டுப்படுத்தப்பட்டுள்ள இந்நிலையில் கச்சதீவுப் பகுதியையும் இந்தியாவுக்கு விட்டுக் கொடுப்பது என்பது தற்கொலைக்கு ஒப்பான செயலாகும்.

தொடக்க காலங்களில் தொழில் அலகுகளில் எண்ணிக்கை குறைவாக இருந்ததுடன் மீன்பிடி முறையிலும், தொழில் நுட்பத்திலும் பாரம்பரிய முறைகளே அதிகமாகப் பின்பற்றப்பட்டு வந்தது. இதனால் மிகக்குறைவான எண்ணிக்கையினரே இப்பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டு வந்தனர். ஆனால் இன்று மீன் பிடித்தொழில் அலகுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன் நவீன மீன்பிடி முறைகளும், புதிய தொழில் நுட்பமும் அறிமுகப்படுத்தப்பட்டமையால் இத்தொழிலில் ஈடுபடுவோரின் எண்ணிக்கையும் இருநாட்டிலும் அதிகரித்துள்ளது. இதனால் இக்குறுகிய கச்சதீவு சார்ந்த பாக்குநீரிணைப் பகுதியின் வளம் மிக விரைவாகவும், மிகையாகவும் சுரண்டப்படும் ஆபத்து தோன்றியுள்ளது. அத்துடன் தத்தமது எல்லைகளை விட்டு எல்லைகளை மீறிச்செல்வது என்பது பெரும் சிக்கலுக்குள்ளாகியிருக்கிறது. 1974 ஒப்பந்தத்தில் உள்ள 5 ஆவது 6 ஆவது சரத்துக்களில் கூறப்பட்ட கருத்துக்களை மீள்பரிசீலனை செய்ய வேண்டிய ஒரு தேவை இன்று எழுந்துள்ளது. பாரம்பரிய உரிமைகளைத் தொடர்ந்து அனுபவிக்க விடுவது இருநாட்டு மீனவர்களிடையேயும் க்சப்புணர்வுகளை வளர்க்கவே வழி செய்யும்.

பாரம்பரிய உரிமைகளைத் தொடர்ந்து அனுபவிக்க ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டுள்ளமையானது, இலங்கையின் கடல் எல்லைப்பகுதிக்குள் இந்திய மீனவர்களால் மிகக்கூடுதலான கடல் வளங்கள் சுரண்டிச் செல்லப்படுவதற்கு சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது. வடபகுதி அரசியல் நெருக்கடிகள் தீர்ந்து, கடல் பாதுகாப்பு வலயச் சட்டம் நீக்கப்படுமிடத்து வடபகுதி தமிழ் மீனவர்களும், இந்திய மீனவர்களும் மோதிக்கொள்ளும் நிலை ஏற்பட சந்தர்ப்பங்கள் உண்டு, இத்தகைய விரும்பத்தகாத நிகழ்வுகள் நடைபெறாவண்ணம் உறுதியான நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமாகும். ஒவ்வொரு நாடும் தத்தமது எல்லைப்பகுதியிலேயே மீன்பிடியில் ஈடுபட ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும். கச்சதீவில் தரை நடவடிக்கைகளாக ஓய்வெடுத்தல், வலைகளை உலரவிடுதல், கருவாடிடல் மற்றும் சமய விழாக்களில் பங்குபற்றுதல் போன்ற நடவடிக்கைகளுக்கு தொடர்ந்தும் அனுமதி வழங்கலாம்.

இந்திய அரசு இலங்கையின் வடபகுதி வாழ் மீனவர்களின் நன்மைகள் எதனையும் கவனத்திற் கொள்ளாது, கச்சதீவுப் பகுதியினை மீளப்பெறுவதிலேயே குறிப்பாக இருக்கிறது. தமிழீழப் பகுதியிலிருந்து எவ்வித எதிர்ப்பும் இதுவரையில் வெளியிடப்படவில்லை. கச்சதீவு விவகாரத்தில் தொடர்ந்தும் நாம் அசட்டையாக இருப்போமானால், கச்சதீவு என்னும் சிறிய மீனை இந்தியா என்ற திமிங்கிலம் மிகவிரைவில் விழுங்கி விடுவதை எவராலும் தடுத்து நிறுத்திவிடமுடியாது. ■

> "கச்சதீவு விவகாரத்தில் தொடர்ந்தும் நாம் அசட்டையாக இருப்போமானால், கச்சதீவு என்னும் சிறிய மீனை இந்தியா என்ற திமிங்கலம் மிக விரைவில் விழுங்கி விடுவதை எவராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறு கதை

நேசன் - அவன் ஒரு தமிழாசிரியன்.
வாரத்தில் ஒருமுறை அதுவும் ஞாயிற்றுக்கிழமையில் நடாத்தப்படும் அந்த தமிழ்ப்பாடசாலையின் நிர்வாகத்தரும் அவன்தான். பன்னிரண்டு பிள்ளைகளுடன் தொடங்கி இன்று நூறு பிள்ளைகளுக்குமேல் படிக்கிறார்கள். இவனுடன் ஐந்து ஆசிரியர்கள். அந்தப் பாடசாலையின் வளர்ச்சியில் அவன் பங்கு.... ஞாயிற்றுக்கிழமைகளில் நேசன் பாடசாலைக் கதவைத் திறக்கத்தான் அந்தச்சிவர் மணிக்கூடும் ஒன்பது மணியடிக்கும். சிலர் மணிக்கூட்டின் பசிக்கும் பற்றறியின் சக்திக்கும் இடையில் ஏற்படும் பற்றாக்குறை சில சமயம் மணிக்கூடு ஒன்பது மணியாகக்காட்டாமல் பிந்திவிடலாம். ஆனால் நேசன் பாடசாலைக்கு வரப்பிந்தியதில்லை. அவன் அடிக்கடி தனது ஆசிரியர்களுக்குக் கூறும் வார்த்தைகள் இவை; நாம் எதையும் முன்னோடியாகச் செய்து காட்டுவதன் மூலந்தான், எம்மைப் பின்பற்றுபவர்களையும் வழிநடத்தமுடியும். அவன் தன்னிடம் அந்தப் பெற்றோர்கள் கொடுத்த அந்தப் பொறுப்பை மிகவும் கண்ணியமாகச் செய்து வந்தான். மாணவர்களிடத்தில் நேசன் ஒரு தனி இடத்தைப் பெற்றுவிட்டான். என்ன நேசன்வாத்தியார், பிள்ளைகளிடத்தில் இவ்வளவு அன்பாக இருக்கிறியள். தமிழே படிக்கமாட்டோம் என்று வெளிநாட்டில் இருந்த பிள்ளைகள் எல்லாம், ஒன்றுதிரட்டி, தமிழ் படிக்கவைச்சிட்டியள் என்ற பாராட்டுகளுக்கெல்லாம் தலையைக் குனிந்தபடியே சிரித்துக் கொண்டு போறவன்.

"என்ன நேசன் கதைக்கிறதுக்கே நேரமில்லாமல் இருக்கிறதுபோல் இருக்கு" என்ற போதெல்லாம் "தமிழன் கதைத்துக்கொண்டு காலங்கழிக்கவேண்டிய நேரமில்லை; இது செயற்பட்டுக் கொண்டு கதைக்கவேண்டிய காலம் இது" என்று தலைவர் சொல்லுவார் எனச் சுருக்கமாக கூறிவிட்டு தன்னை இனங்காட்டிக் கொள்ளாமல் செல்லும் நேசனுக்கு, ஆசிரியர் கிருஸ்ணபிள்ளையின் கேள்விகள் அவனை அவ்வளவு இலகுவாக விலகிச்செல்ல விடுவதில்லை?

'நேசன் நீங்கள் யாழ்ப்பாணம் யூனிவேசிற்றியா அல்லது கொழும்பு யூனிவேசிற்றியா?'

## "விளையாட்டுப் போட்டியில் என்னைத் தூக்கி முத்தமிட்ட அந்தக் கிட்டுமாமா இனி வரமாட்டாரா....?"

"நான் களத்தில் படித்தவன், பாசறையில் வளர்ந்தவன்".

நல்ல ஒரு தலைவனின் வழிநடத்தலில் நல்ல தளபதியின் வளர்ப்பிலும் வளர்ந்தவன். பல்கலைக்கழகத்தின் பக்கமே போனதில்லை. என்னைப் போய்ப்பட்டதாரி என்கிறியளே? நேசன் நின்று நிதானமாக சொன்ன வார்த்தைகள் அவன் தன்னை இனங்காட்டிக்கொள்ள விரும்பாத போதும், தலைவன் காட்டிய பாதை, தளபதி அவனை வளர்த்த வளர்ப்பு இவற்றில் இருந்து அவன் மாறவில்லை....

இன்று ஞாயிற்றுக்கிழமை நேசன் வழமைபோல் சற்று முன்னதாகவே பாடசாலைக்கு வந்திருந்தான். அவனது உடலில் ஒரு தளர்வு. தினமும் ஒன்பது மணிக்கு அவன் வரவை எதிர்பார்த்த சிவர்மணிக்கூட்டுக்கு தான் பிந்திவிட்டேனா என்ற ஒரு சந்தேகம். வழமைபோல் வாசற் கதவைத் திறந்தவுடன் அந்த சாக்குப்பை யக்கற்றை கழற்றிக் கொழுக்கியில் மாட்டும் அவன், இன்று எதையும் கவனிக்காது வகுப்பறைக்குள் சென்றான். கையில் இருந்த றேடியோவின் முணுமுணுப்பில்மட்டும் அவனது அக்கறை இருந்தது. இரவிரவாக தன்னுடன் உரையாடி அழவைத்துக் கொண்டிருந்த அந்த ரேடியோவின் பி. பி. சியில் மீண்டும் தமிழ்ச்செய்தி.... அவனை வளர்த்த அந்த தளபதி! மூத்த தளபதி! கிட்டண்ணாவுடன் ஒன்பது வீர வேங்கைகள் வீரச்சாவைத் தழுவியது உறுதியாகிவிட்டது.

"கிட்டண்ணா....! கிட்டண்....ணா...."

அந்த அறையே ஒரு முறை அலறியது.
இதயத்தின் இரத்தம் சிவப்புத்தான் ஆனாலும் அவை அவன் கண்வழியே நீராகத்தான் வெளிவந்தது.




'எம் தலைவர் தொட்டுத் தூக்கிவிட்ட கைக்கு மாற்றான் கைவிலங்கிட முடியாது என்பதை நிரூபித்து விட்டியளே. எம் தலைவர் கட்டி அணைத்த தோளை விலைபேச நினைத்த இந்தியாவின் அரக்கத்தனத்திற்கு....

- உணர்ச்சி.... ஆவேசம்.... அவன்.... அவனுக்குள் இருந்த.... அவன் வெளிப்பட்டான். -

'டேய் நேசன்....' கிட்டண்ணா அவனை அப்படித்தான் அழைப்பார். அன்பும் பாசமும் எங்கு எவர்களிடம் நிறைந்திருக்குமோ, அங்கு அதட்டி அணைக்கும் உரிமையும் உடனிருக்கும் என்பதற்கு கிட்டண்ணா ஒரு உதாரணம்.

சமாதானப்படை என்று கூறிக் கொண்டு தமிழீழம் வந்த இந்தியாவின் துரோகத்தில் சிதறுண்டு வெளிநாடு வந்தவர்களில் நேசனும் ஒருவன். கடந்த ஐந்து வருடங்களிற்கு மேலாகத் தன்னைத்தானே இனங்காட்டிக் கொள்ளாமல் இருந்தவன். தமிழ்ப்பிள்ளைகளுக்கு தாய்மொழிக் கல்வியை கற்றுக்கொடுக்க தமிழ்ப்பாடசாலையை ஆரம்பித்து அதனுடன் ஒன்றிவிட்ட அவனால் இந்த வெளிநாட்டு வாழ்க்கையில் ஒன்றிக்கொள்ள முடியவில்லை. தலைவரின் அரவணைப்பில், தளபதி கிட்டண்ணாவின் வளர்ப்பில் வளர்ந்த அவனுக்கு கதைத்துக் கொண்டே காலத்தைக் கழிக்கும் சில வெளிநாட்டுத் தமிழர்களுடன் வாழப்பிடிக்கவில்லை. தமிழீழத்தில் வெந்துகொண்டு இருக்கும் தாயக மக்களின் அவலநிலைக்கு ஆதரவு எனக்கூறி செயற்பாடற்ற திட்டங்களைத்தீட்டி, அதன்மூலம் தங்களை வளர்த்துக் கொள்ளும் சில வெளிநாட்டுத் தமிழர்களுடன் இருப்பதைக்காட்டிலும், தமிழீழம் சென்று மீண்டும் தன் பங்களிப்பை ஆற்ற விரும்பியவனாக கிட்டண்ணாவுடன் தொடர்பு கொண்டான்.

- அந்த நீண்டநேர உரையாடலின் பின் -

'டேய்.... நேசன்....
வெளிநாட்டில் மக்கள் மத்தியில் செயற்படுவதற்காக ஒரு தனித்துவம் தேவை. அதை முதலில் நீ கற்றுக் கொள்ள வேண்டும்... தமிழீழம் என்பது அனைத்துத் தமிழின மக்களுக்குமாகத் தான் என்பது தலைவரின் கருத்து. இதில் எமது மக்களை அரவணைத்து அவர்களின் ஒருமித்த பங்களிப்பின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூற வேண்டியது உனது கடமை. அதை நீ செய். உன்னால் முடிந்தால் இந்தக்கிளையின்

## "குழந்தாய்....நீ... சிரித்துக் கொண்டு முகக் கண்ணாடியைப்பார்; உன்சிரிப்பில் கிட்டுமாமா தெரிவார். உன் மழலையில் கிட்டுமாமா ஒலிப்பார்..."

பொறுப்பை ஏற்றுக்கொள். விடுதலைக்காக அர்ப்பணித்த நீ எங்கே எப்படி செயற்பட வேண்டும் என்பதைத் தலைமை தீர்மானிக்கும்.'

அடக்கமான அந்தப்பதில், கிட்டண்ணா உரிமையுடன் அழைத்த முறை ஒரு கணம் களத்தில் அவரது பாசறையில் நின்ற உணர்வு அவனுக்குத் தெரிந்தது. கிட்டண்ணாவின் இத்தகைய பொறுப்பை நான் ஏற்பதா? வெளிநாட்டில் வாழும் தமிழர்களின் வாழ்க்கை முறை.... அவர்களுடன் கதைக்கும் தன்மை எனக்கு உண்டா? இரண்டு வாரம் கழித்து பதில் சொல்கிறேன்.




அந்த இரண்டு வாரத்தின் இறுதியில் கிட்டண்ணாவின் இந்தச்செய்தி அவனைக் கலக்கத்திற்குள்ளாக்கியது. யுத்த முனைகளிலும் தாயக பூமியின் எல்லாப்பரப்பிலும், கம்பீரமாய் உலாவிவந்த வேங்கை, கால் உடைந்து கட்டிலில் வீழ்ந்த போதிலும் சோர்வுறாத வீரத்தளபதிக்கு இந்து சமுத்திரத்தில் இப்படி ஒரு நிலமையா? கிட்டண்ணா ஈழத்தின் சொத்து என்பது இந்தியாவிற்குத் தெரிந்திருந்தும், அவரின் சாவுக்கு இந்தியாவே காரணம். அவன் மனம் ஒரு இடத்தில் நிலைகொள்ளவில்லை. அந்த அறையின் யன்னலூடே அவன் பார்வை வெளிச்சென்றது.

இலுப்பம்பூ கம்பளம் போட்டது போன்று வெண்பனி படர்ந்து கிடந்தது. ஞாயிற்றுக்கிழமை தெருவில் சனநடமாட்டமேயில்லை. ஒரே நிசப்தம். அதன் மத்தியில் வெளிநாட்டுத் தமிழ்க்குஞ்சுகள் தமிழ்ப் பாடசாலைக்கு வந்துகொண்டிருந்தன.

'நேசன் வாத்தியார்' அர்ச்சுனனின் கையில் எப்போதும் வில் இருக்கிறதே.... ஏன்?
- என்றைக்கும் வணக்கம் வாத்தியார் என்ற வார்த்தைகளுடன் வகுப்பறைக்குள் நுழையும் மாணவர்கள் இன்று அதையெல்லாம் விடுத்து ஏதோ ஆவேசப்பட்டவர்களாகக் கேள்வி கேட்டது, நேசனுக்கு ஆச்சரியந்தான். -

'வாத்தியார் அர்ச்சுனன் அரசசபைக்குப் போகும் போதுகூட கையில் வில்லுடன் போகின்றானே.... ஏன்? இது அடுத்த மாணவனின் கேள்வி.

'அர்ச்சுனன் கையில் வில் இருப்பது அவனது ஆயுதம்; அது அவன் பாதுகாப்பிற்கு....'
'அப்படியானால்.... கிட்டுமாமா கையிலும் ஆயுதம் இருந்திருந்தால் அவர் உயிர் பாதுகாக்கப்பட்டிருக்குமல்லவா....?'

'வாத்தியார்! கிருஸ்ணபகவான் கீதா உபதேசம் செய்யும்பொழுது கூட சக்கரத்தை கையில் வைத்திருக்கிறார் தானே....'

நேசன்.... முடுபனிக்குள் மூழ்கியவனாக விறைத்து நின்றான்.

'பிள்ளைகளே கிட்டுமாமா சமாதானப் புறவையாகத்தான் பயணம் செய்தார்.

**புதியவன்**

ஈழத்தின் சமாதான நல்லெண்ணத்திற்கு இந்தியா என்றும் ஆதரவு தரும் என்ற வார்த்தையை நம்பியிருந்தோம்.'

தொடர்ச்சி 19 ஆம் பக்கம்...

www.tamilarangam.net



# படையினரின் கெடுபிடி மத்தியிலும் திருமலையில் மாவீரர் நாள்

சிறீலங்காப் படையினரின் அடாவடித்தனங்களுக்கு மத்தியிலும் தமிழீழ மாவீரர் நாள், திருகோணமலை -மூதூர் பகுதியிலுள்ள பல கிராமங்களில் பெரும் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.

மூதூரிலுள்ள முகத்துவாரம், முட்டுச்சேனை, வாழைத்தோட்டம் கல்லடி, இலங்கைத்துறை, பாட்டாளிபுரம், சின்னக்குளம், தங்கபுரம் ஆகிய கிராமங்களிலுள்ள மக்கள், தாயக விடிவுக்காக தம்மை அர்ப்பணித்த மாவீரர்களின் நினைவாக, வீதிகளை சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரித்திருந்தனர்.

வெருகல் பகுதியில் மாவீரர்களின் வித்துடல்கள் விதைக்கப்பட்டுள்ள வெருகல் -முகத்துவாரம் மாவீரர் துயிலும் இல்லத்தில், தொடர்ச்சியாக ஏழு நாட்கள் மலர்வளையங்களை வைத்து மாவீரர்களை மக்கள் நினைவுகூர்ந்தனர்.

கடந்த நவம்பர் 26 ஆம் நாள் பி.ப. 5 மணிக்கு, பாட்டாளிபுரத்தில் மாவீரர் வணக்கக் (அஞ்சலி) கூட்டமும் நடைபெற்றது. வெருகல் பகுதியிலுள்ள பாடசாலைகளில் மாவீரர் நினைவாக கவிதை, கட்டுரைப் போட்டிகளும் நடாத்தப்பட்டன. கைப்பந்தாட்டப்போட்டி நடாத்தப்பட்டு, பரிசுகளும் வழங்கப்பட்டன.

மாவீரர் ஏழல் (வாரம்) காலப்பகுதியில், சிறீலங்காப் படையினர் பாட்டாளிபுரம், வீரமாநகர், இலக்கந்தை ஆகிய பகுதிகளைச் சுற்றிவளைத்து, அடாவடித்தனங்களை நடாத்தினர்.

வெருகல் மாவீரர் துயிலும் இல்லத்தை, நவம்பர் 26 ஆம் நாள் காலை 5 மணியளவில் சற்றிவளைத்த படையினர், மக்களைத் துன்புறுத்தியதோடு, செய்யப்பட்டிருந்த அலங்காரங்களையும் அழித்தனர்.

ஆனால் படையினர் அப்பகுதியைவிட்டுச் சென்றதும், மக்கள் மீண்டும் அலங்காரங்களைச் செய்து, மாவீரர் நாளை உணர்வுபூர்வமாகக் கொண்டாடினர் என்பது குறிப்பிடத்தக்கது. ■





27-11-94 இல் மேற்கு அவுஸ்திரேலியாவில் நடாத்தப்பட்ட "மாவீரர் நாள்" நிகழ்ச்சியின் போது இடம் பெற்ற கலை நிகழ்வுக் காட்சிகள் சில.

# சம்பியன்களான நாவாந்துறை....

இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றோம்" என்று சுருக்கமாகக் கூறிமுடித்தார்.

உங்கள் பிள்ளைகளின் வெற்றிக்குக் காரணமாக அமைந்தவை எவை என பயிற்றுநரை வினவியபோது, "Stamina வை வளர்த்தெடுத்தல், Ball Controlling விளையாட்டு ஒழுங்கு விளையாட்டு நுட்பங்கள் -இவ்வாறாக ஒரு ஒழுங்கு முறையிலேயே பயிற்றுவித்தேன். இதோடு கடினமான வாழ்நிலையில் இருந்துவரும் பிள்ளைகள் இவர்கள். ஆனால் இவர்களின் ஆர்வம், பணிவு, பெற்றார்களின் ஒத்துழைப்பு எல்லாமே வெற்றிக்குக் காரணம். அதோடு கிராம மக்களின் தணியாத ஒத்துழைப்பும் முதன்மையானது என்கின்றார்."

அமைதியாக அமர்ந்திருந்த அதிபர் திரு. ஜே. ஜேசுதாசனைப் பார்த்தோம்.

"சகல வீரர்களும் எமது நாவாந்துறைக் கிராமத்தைச் சேர்ந்தவர்களே; எமது பயிற்றுநர் மிகுந்த அனுபவசாலி; திறமைசாலி; ஆகவே பயிற்றுநரைத்தேடி வெளியில் செல்லவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. நான் விளையாட்டுத்துறையில் சிறப்புக் பயிற்சிபெற்றவன். ஆனால் பயிற்றுநரின் உயர்தரம் எனது தேவையைத் தேவையற்றதாக்கிவிட்டது.

அத்தோடு எமக்கெனத் திடல் (மைதானம்) இல்லாதபோதும் மிகுந்த அன்புடனும், உரிமையுடனும் மாணவர்களைப் பயிற்றுவிக்க திடல் அனுமதியளித்த சென். மேரிஸ், சென். நிக்கலஸ், கலைவாணி கழகங்களை மிக நன்றியுடன் நினைவு கூருகின்றோம்" என்றார்.

ஒரு பந்து 1200 ரூபாவுக்கு மேல். நீங்களோ வசதி குறைந்த பாடசாலையைச் சேர்ந்தவர்கள் என்ற முதன்மையானதொரு விடயம் பற்றிப் பேச்சுக் கொடுத்தோம். ஆசிரியர் நகுலநாதன் இதற்குப் பதிலளிக்கையில், "பாடசாலை அபிவிருத்திச் சபை எமக்கு ஓரளவு உதவியது. மேலும் பாடசாலை வசதிக் கட்டணம் போன்றவற்றையும் ஓரளவு பயன்படுத்தினோம். முதன்மையாக அதிபர் எதுவித தயக்கமும் இன்றித் தனது பணத்தைச் செலவழித்துள்ளார். அடுத்தடுத்த மாதங்களில் அவர் பெரும் பொருண்மிய நெருக்கடிக்குள்ளாவார் என்பது நிச்சயம்" என்றார்.

"அதிபரின் பங்களிப்பு எல்லா வகையிலும் உச்சம் தான். அதிகாலை 6 மணிக்கு அவர் என்னுடன் திடலில் நிற்பார், எமக்கு எது தேவையோ அதனை உணர்ந்தே செய்தவர் அவர். அதேபோலத்தான் ஆசிரியர்கள் ப. ஜெயரட்ணராசாவும், ந. நகுலநாதனும். நாங்கள் ஒரே அணியாக இணைந்தே இந்த பெருமையைப் பெற்றோம்" என்கிறார் பயிற்றுநர்.

ஆசிரியர் ஜெயரட்ணராசாவுடன் உரையாடும்போது, அணி நடந்துகொள்ளவேண்டிய முறை பற்றித் தாங்கள் மிக இறுக்கமாகவே நடந்துகொண்டதாகக் கூறுகிறார். இதே கருத்தை அதிபரும் பிரதிபலித்தார்.

"எந்த நிலையிலும் முறை தவறி விளையாடக் கூடாதென்பது எமது கட்டளை. இது எமது எல்லா அணிகளுக்கும் பொதுவான கட்டளை. இதனால் நாம் பாதிக்கப்பட்டதும் உண்மை. ஆனால் எமது நேர்மையான எண்ணம்தான் இந்த வெற்றியை எமக்குத் தந்தது.

இந்த வெற்றி எமது அதிபர் இங்கு வந்த சில காலங்களுக்குள்ளேயே எம்மை வந்தடைந்தது. நல்வாய்ப்புமிக்க (அதிஸ்டம்மிக்க) அதிபரின் கீழ் இன்னமும் எம் மாணவர்கள் பல சாதனைகள் புரிவர்" என்கிறார் ஆசிரியர் ந. நகுலநாதன்.

இவர்கள் எல்லோரும் மிகவும் அன்னியோன்னிய பாவத்துடன் இணைந்து செயற்படுவதைத் தெளிவாகவே அவதானிக்க முடிகிறது.

இந்த வெற்றிக்கான காரணங்கள் களத்தினுள் மட்டுமல்ல வெளியிலும் நிறையவே காணப்பட்டிருக்கின்றன. இப்போட்டிகளில் யாழ்ப்பாணத்தில் பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்ட ஒரு அணி இவர்களின் 19 வயதிற்குட்பட்ட அணி. அது இறுதியாட்டத்திற்குத் தெரிவு செய்யப்படாமையின் துயரம் இவர்களில் தெரியத்தான் செய்கின்றது. இருந்தும் மாணவருக்கு வெற்றி தோல்வியின் பாங்கினை உணரும் அனுபவமாக அதைக்கொள்ள வேண்டும் என்கின்றார்கள்.

விளையாட்டு வீரர்களிடம் கதைகொடுத்தோம். அவர்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள், "ஆசிரியர் சொன்ன அறிவுரைகளை மனதிற்கொண்டே களத்தில் இறங்கினோம். எங்களுக்கு நம்பிக்கை இருந்தது. ஆனால், மற்றைய அணிகளின் திறமையை மதித்தே விளையாடினோம். எங்களுக்குச் சவாலாக அமைந்த அணியென்றால் அது நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் தான். எங்களை நிறைய நெருக்கினார்கள். தலா 2 கோல் என்றவாறு சமன் செய்தோம்" என்கிறார்கள்.

ஜே. ஜெயகுமார் கோட்ட மட்டப் போட்டிகள் வரையிலும், மாவட்ட மட்டப் போட்டிகளில் கி. சுமன்ராயுவும் அணித்தலைவர்களாக விளங்கியவர்கள். எல்லோருமே சிறந்த வீரர்கள். இவர்களைப் பற்றி ரசிகர்களின் கருத்தும் இதுவே. இருந்தும் சில வீச்சுக் கூடிய வீரர்களை உதைபந்தாட்ட ரசிகர்கள் இனங்கண்டு வைத்திருக்கிறார்கள். ஞா. ஜேசுதாசன், ரி. யூட். டொரிங்ரன், ஜே. ஜெயகுமார், கி. சுமன்ராஜ், தி. றெஜினோல்ட் மட்டும் தனித்து தன் பாங்கில் 15 க்கு மேற்பட்ட கோல்களைக் குவித்துள்ளார்கள். இந்த புதுமையான, மிக இளம் வீரர்களை உதைபந்தாட்ட ரசிகர்கள் எல்லோர் சார்பாகவும் வாழ்த்தி அவர்களிடம் இருந்து விடைபெற்றோம். ■

# இறுதிப் போட்டிவரை....

அடுத்து, இவ்வணிப் பயிற்றுநராகத் திரு. வெள்ளையும் திரு. சின்னராசாவும் கடமையாற்றி இருந்தனர். திரு. வெள்ளையுடன் பேசியபோது, "பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் எமக்கு முழு ஒத்துழைப்பையும் நல்கியிருந்தனர். குறிப்பாக வீரர்கள் கட்டுப்பாடுமிக்கவர்கள். எம்மை மதித்து சலிக்காமல், அனைத்துப் பயிற்சிகளையும் செய்தார்கள். அடுத்த ஆண்டுத் தொடக்கத்திலிருந்தே கூடிய பயிற்சி எடுத்து, சிறந்த அணியாக உருவாக்க உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இக்கல்லூரியின் விளையாட்டுப் பொறுப்பாசிரியர் திரு. பசுபதி அவர்கள், வசாவிளான் மாவித்தியாலயத்தில் கல்வி கற்பித்த போது, அவரின் மாணவராகத் திரு. வெள்ளை இருந்துள்ளார். அத்தொடர்பின் மூலமே இக்கல்லூரிக்கு இவர் பயிற்றுநராக அமர்த்தப்பட்டுள்ளார். இக்கல்லூரியில் சேவை மனப்பான்மையுடன் திரு. வெள்ளை கடமை புரிந்து வருகின்றார்.

இந்த அணி வீரர்களுடன் உரையாடியபோது, இளம்வயதுச் சிறார்கள் என்பதால், அவர்கள் கூச்ச உணர்வுடனேயே பேசினர். நீங்கள் சந்தித்த போட்டிகளில் உங்கள் அனுபவம் என்ன? போட்டிகள் கடுமையானதா? என நாம் வினாவியபோது, "தாம் ஆடிய ஆட்டங்களில் கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலத்துடனும் சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலயத்துடனும் ஆடிய ஆட்டமே கடுமையானதும் தமக்கு மறக்க முடியாதது" எனவும், ஏனைய ஆட்டங்களில் தாம் எளிதாக வெற்றி பெற்றதாகவும் கூறினர்.

இறுதியாட்டம் பற்றிக் கேட்ட போது, "தாம் இப்போட்டியில் சம்பியனாக வராதுபோயினும், தமது விளையாட்டுப் பாங்கில் தமக்குத் திருப்தி ஏற்பட்டது என்றும் இறுதிவரை நன்றாக விளையாடினோம் என்றும் தெரிவித்தனர்.

மேலும், எதிரணி வீரர்கள் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலய வீரர்கள் டொறிங்டன், வின்சன் போன்றோர் திறமையாக விளையாடினார்கள் என மனந்திறந்து கூறினார்கள்.

மேலும் வெள்ளை அண்ணா, சின்னராசா அண்ணாமார்களின் வழிகாட்டலும் காலை -மாலை ஒழுங்கான பயிற்சியுமே தம்மை இந்த நிலைக்கு உருவாக்கியது என்றும், அதிபர் ஆசிரியர்களின் அன்பும் அரவணைப்பும் பக்கபலமாக இருந்ததெனவும் அவர்கள் கூறினார்கள்.

இச்சிறிய வீரர்கள், இனிவரும் காலத்தில் சிறந்த வீரர்களாகத் திகழ்ந்து, பல சாதனைகள் படைத்து, இக்கல்லூரி அணியை முன்னெடுத்துச்செல்ல விளையாட்டு அரங்கு சார்பாக வாழ்த்தி, புன்னகையுடன் விடைபெற்றோம். ■

# ''புலிகளின் உளவாளி என்று கூறி படை அதிகாரி என்னைத் தாக்கினார்''

### - விடுவிக்கப்பட்ட விறகு வியாபாரி தகவல்

"எனது கண்களையும் கைகளையும் கட்டிவைத்து படை அதிகாரி, 'நீ புலி அல்லது புலிக்கு உளவு பார்ப்பவன்' என்றுகூறி, வலுவாகத் தாக்கினார்".

பலாலிப் படைத்தளத்தில் தடுத்துவைக்கப்பட்டு, விடுவிக்கப்பட்டசின்னத்தம்பி -கனகசிங்கம், பருத்தித்துறை இறங்குதுறையில் வைத்து, எமது வடமராட்சி செய்தியாளருக்கு முன்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடும்போது, "நான் ஒரு விறகு வியாபாரி; நானும் வேறு சிலருமாகக் கட்டுவன் பகுதிக்கு விறகு தேடச் சென்றோம். சம்பவநாள் அங்கு மறைந்திருந்த படையினர், சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அப்போது என்னுடன் வந்தவர்கள் ஒருவாறு ஓடிவிட்டனர்; என்னால் ஓடமுடியவில்லை. அதேசமயம் படையினர் என்னைக் கைதுசெய்தனர்.

படையினர் என்னைக் கைதுசெய்ததும் எனது சேட்டைக் கழற்றி, எனது கண்களையும் கைகளையும் கட்டினர். பின்னர் டிரக் ஒன்றில் ஏற்றிச்சென்றனர். கட்டுவனுக்குச் சென்றதும் விசாரணை நடைபெற்றது. அதனையடுத்து பலாலியில் இருந்து உயர்படை அதிகாரி ஒருவர் வந்தார்; அவர் என்னை விசாரணை செய்தார்; தமிழிலேயே பேசினார்.

என்னை விசாரணைசெய்த அந்த உயர் அதிகாரி, எனது இருப்பிடத்தை விசாரித்தார். நான் மல்லாகத்தில் தற்போது இருப்பதாகக் கூறினேன். அதற்கு அந்த அதிகாரி, 'யாழ்ப்பாணத்தில் இருப்பவர்கள் அனைவரும் புலிகள்தான்; நீயும் புலியாக இருக்கலாம் அல்லது புலியின் ஆதரவாளனாக இருக்கலாம். நீ புலிக்கு விறகு எடுக்க வந்திருக்கின்றாய்' என்றுகூறி, என்னை வலுவாகத் தாக்கினான்.

பின்னர் காங்கேசன்துறைக் காவல் நிலையத்தில் என்னை ஒப்படைத்தனர். விடுவிக்கும் வரை நான் அங்கேயே தங்கியிருந்தேன்" என்றார். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 15 வயதிற்கு கீழ்ப்பட்டோர் உதைபந்தாட்ட இறுதிப்போட்டி




## நாவாந்துறை றோ.க. பாடசாலை சம்பியன் பட்டம் வென்றது

யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில், 15 வயதுக்குட்பட்டோருக்கான இறுதிப்போட்டிகள் அண்மையில் கொக்குவில் இந்துக் கல்லூரித் திடலில் (மைதானம்) இடம்பெற்றது.

மூன்றாவது இடத்துக்கான ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயத்தை எதிர்த்து, ஏழாலை சிறீமுருகன் வித்தியாலய அணி மோதியது.



வெற்றிக் கிண்ணத்தை பெற்றுக் கொண்ட நாவாந்துறை றோ.க.வித்தியாலய அணியினர்

போட்டி தொடங்கியது முதல் இறுதிவரை மிகவும் விறுவிறுப்பாகவே இருந்தது. 15 வயதுக்கு உரித்தான சராசரி உயரத்தை விட, சிறிய தோற்றத்தை உடைய வீரர்கள் இரு அணிகளிலும் இடம்பெற்றிருந்தமையும், அவர்கள் பிரமிக்கத்தக்க வகையில் ஆடியமையும் ரசிகர்களின் நெஞ்சங்களைத் தொட்டன.

ஆட்டத்தின் முதல் பாதியில் சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலய அணிசார்பில் நவசீலன் முதல் கோலையும், இரண்டாவது பாதியில் பிரதீப் போட்ட கோலையும்கொண்டு, சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலயம் 2 -0 என வெற்றிகொண்டு, மூன்றாம் இடத்துக்கான வெற்றிக்கிண்ணத்தையும் சுவீகரித்துக்கொண்டது.

கடந்த ஆண்டு உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் தம்மை இணைத்துக்கொண்ட இவ்விரு அணிகளும் அரை இறுதிப்போட்டிவரை தமது திறமையை உயர்த்திக்காட்டியதன் மூலம், உதைபந்தாட்டத்தில் தமக்குள்ள ஈடுபாட்டை வெளிப்படுத்தியுள்ளன.

மூன்றாம் இடத்துக்கான போட்டிக்கு நடுவராக திரு. ப. முருகவேல் கடமையாற்றினார். திருவாளர்கள் செ. வைத்தீஸ்வரன், து. குகன் ஆகியோர்கள் உதவிநடுவர்களாகக் கடமை புரிந்தனர்.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற முதலாவது, இரண்டாவது இடங்களைத் தெரிவுசெய்வதற்கான ஆட்டம் தொடங்கியது. இதில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தை எதிர்த்து, உரும்பிராய் இந்துக் கல்லூரி அணி மோதியது. ஆட்டம் தொடங்கியவுடனேயே இரு பகுதியும் வேகமாக ஆடத்தொடங்கின. நாவாந்துறை றோ. க. அணியினர் பட்டறிவுமிக்க (அனுபவம்) வீரர்களைப்போல் பந்தை தமது வீரர்களுக்கிடையில் பரிமாற்றம்செய்து, விளையாடியமை குறிப்பிடவேண்டியதாகும்.

**தமிழீழத்திலிருந்து**
**நிர்மலன்**

ஆட்டம் தொடங்கி, ஐந்தாவது மணித்துளியில் (நிமிடம்) நாவாந்துறை றோ. க. அணி வீரர் சூ. சுகிர்தன் தமது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக் கொடுத்தார். இதன்பின் உரும்பிராய் இந்துக்கல்லூரி அணியினர், மிகவும் அழுத்தம் கொடுத்து, நெருக்கத் தொடங்கினர். இருந்தபோதும் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க அணியின் பிற்காப்பு வீரர்கள் கோல்போடும் முயற்சியைத் தடுத்த்வண்ணம் இருந்தனர். மீண்டும் 15 ஆவது மணித்துளியில் றோ. க. அணிவீரர் ஞா. ஜேசுதாசன் தனது அணிக்கான இரண்டாவது கோலைப்போட்டார். இடைவேளையின்போது 2 -0 என்ற நிலையில் றோ. க. அணி முன்னணிவகித்தது. மீண்டும் இடைவேளையின்பின் உரும்பிராய் இந்துக் கல்லூரி அணியினர் திறமையாகத் தமது கட்டுப்பாட்டுக்குள் பந்தை வைத்திருந்து ஆடியபோதும் திறம்பட முடிக்கும் தன்மை (Finishing) இல்லாததால் கோல்களைப் போடத் தவறினர். மீண்டும் இடைவேளையின் பத்தாவது மணித்துளியில் நாவாந்துறை றோ. க. வீரர் தனது அணிக்கான மூன்றாவது கோலையும் போட்டு, தமது வெற்றியை உறுதிப்படுத்தினார். 3 -0 என்ற வகையில் உரும்பிராய் இந்து அணியை வெற்றிகொண்டு, லெப். கேணல் இம்ரான் சுற்றுக் கிண்ணத்தைத் தட்டிச்சென்றனர். மிகவும் இளம் சிறார்களான இவ்விரு அணிவீரர்களும் ரசிகர்களைத் திருப்திப்படுத்தும் வகையில், மிகவும் தரமான ஆட்டம் ஒன்றை ஆடியிருந்தனர். மேலும் இப்பிரிவில் இரண்டாம் இடத்தைப்பெற்ற உரும்பிராய் இந்துக் கல்லூரியைத் தவிர, ஏனைய மூன்று இடங்களையும் பெற்ற அணிகள் பின்தங்கிய சிறிய பாடசாலைகள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாட்டத்திற்கு நடுவராகத் திரு. ஆர். சிறீதரன் அவர்களும், உதவி நடுவர்களாகத் திரு. பா. கிருபாகரனும், திரு. ஆர். தனராஜரட்ணம் அவர்களும் கடமையாற்றியிருந்தனர். ■

## இறுதிப் போட்டிவரை முன்னேறிய உரும்பிராய் இந்துக்கல்லூரி அணி

யாழ். மாவட்டப் பாடசாலை விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்பட்ட 15 அகவைக்கு (வயது) உட்பட்டோர் பிரிவிற்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில், இரண்டாவது இடத்தைப்பெற்றது யாழ். உரும்பிராய் இந்துக் கல்லூரி அணி.

இந்த அணியை ஈழநாதம் விளையாட்டரங்கு வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துமுகமாக விளையாட்டரங்கு சார்பில் நிர்மலனுடன் நானும் கல்லூரிக்குச் சென்றிருந்தேன். அங்கு நடைபெற்ற கலந்துரையாடலில் பாடசாலை அதிபர், விளையாட்டுப் பொறுப்பாசிரியர், பயிற்றுநர், வீரர்கள் போன்றோர் கலந்துகொண்டனர்.

கோப்பாய் கோட்ட மட்டத்தில் நடைபெற்ற போட்டியில், ஐந்து புள்ளிகளுடன் முதலாம் இடத்தைப்பெற்று, மாவட்டமட்டப் போட்டிகளுக்குத் தகுதி பெற்றுள்ளோம் என, இறுதிப்போட்டிக்குத் தயாரானது பற்றி விளையாட்டுப் பொறுப்பாசிரியர் திரு. பசுபதி தெரிவித்தார்.

மேலும் அவர் விளக்குகையில், "மாவட்டப் போட்டிகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியையும் கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயத்தையும் வெற்றிகொண்டு, அரை இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலயத்தை வென்று, போட்டிக்குத் தகுதிபெற்றோம்.

இறுதிப் போட்டியில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் எமது அணியை வெற்றிகொண்டதால், இரண்டாம் இடத்தைப்பெறவேண்டி வந்தது" என்றார்.

மேலும், "அணிக்கு வீரர்களை இல்ல விளையாட்டுப் போட்டிகளின் மூலம் சிறந்த பெறுபேறுகள் பெறும் வீரர்களைப் பயிற்றுவிப்பதாகவும், பிள்ளைகள் பின்தங்கிய கிராமங்களிலிருந்து படிக்க வருகின்றார்கள் என்றும், அவர்களின் உடல் வளர்ச்சிக்கு, போதிய ஊட்டம் இன்மையால் பாதிப்படைந்திருப்பதனால், விளையாட்டின்போது மிகவும் களைப்படைந்து விடுகின்றார்கள்" என்றும் கூறினார். தாம் வெற்றிக்கிண்ணத்தை இழந்ததற்கு, இதுவும் ஒரு காரணம்

**தமிழீழத்திலிருந்து**
**எஸ். தயாபரன்**

ஆகலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த அணிக்கு பொருண்மிய (பொருளாதாரம்) வசதிகள் குறிப்பிட்ட நலன்விரும்பிகளிடமிருந்து கிடைக்கப்பெறுவதாகவும் பாடசாலை ஆசிரியர்கள் தனிப்பட்ட முறையில் பல உதவிகளைச் செய்துள்ளார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

மற்றும் பயிற்றுநர் தமது பந்தையே கொண்டுவந்து பயிற்றுவித்ததோடு, பண உதவிகள் புரிந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

பாடசாலை அபிமானிகள், வீரர்களுக்கு சிற்றுண்டிகள்போன்ற உணவுகள் வழங்கி, உதவிகள் செய்தனர் எனவும் அவர் தெரிவித்தார்.

போட்டிகளில் கலந்துகொள்வதற்காக தூர இடங்களுக்கு சிறிய வீரர்களே ஆசிரியர்களை ஏற்றிச் செல்கின்றனர். ஒருமுறை போட்டியில் கலந்துகொள்வதற்காக தமக்கு போட்டி நடைபெறும் திடல் (மைதானம்) சரியாக அறிவிக்கப்படாததால், தாம் கொட்டும் மழையிலும் பிள்ளைகளை சைக்கிள்களில் ஏற்றிக் கொண்டு அலைந்ததாகவும் (மானிப்பாய் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ். பல்கலைக்கழகம், யாழ். இந்துக்கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி) மத்திய கல்லூரியில் வைத்து ஆட்டம் மறுநாளுக்கு ஒத்திவைக்கப்பட்டதாகவும் சொன்னார்.

இக்கல்லூரி பத்து ஆண்டுகளின் பின்பு, இம்முறை திறமையான அணிகளை உருவாக்கி உள்ளது. இவ்வளர்ச்சிக்கு என்னுடன், திருவாளர்கள் ஜெயராஜா, நரேந்திரன், மாசிலாமணி, கோகுலன் போன்ற ஆசிரியர்கள் முதன்மைப் பங்காற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...



இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட உரும்பிராய் இந்துக் கல்லூரி அணியினர்

## சம்பியன்களான நாவாந்துறை றோ.க. அணியுடன் ஒரு சந்திப்பு

1994 ஆம் ஆண்டுக்கான லெப். கேணல் இம்ரான் நினைவுச் சுற்றுக்கிண்ணத்தை பெருமையுடன் தமதாக்கிக் கொண்டவர்கள், நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தினர். அண்மையில் கொக்குவில் இந்துக்கல்லூரித் திடலில் (மைதானம்), நடைபெற்ற 15 அகவைக்குட்பட்ட (வயது) உதைபந்தாட்ட இறுதியாட்டத்தில், தம்முடன் மோதிய உரும்பிராய் இந்துக்கல்லூரியை 3 -0 என்றவகையில் மேவி, இப்பெருமையைப் பெற்றார்கள் இவர்கள்.

இவ்வெற்றி வீரர்களைக் காணும் முகமாக, இவர்களின் வித்தியாலயத்திற்குச் சென்றிருந்தோம். இளம்வீரர்கள் மீளவும் சீருடை தரித்து எமக்காகக் காத்திருந்தனர். அதிபர், பயிற்றுநர், மற்றும் திரு. நகுலநாதன், திரு. ஜெயரெட்ணராசா எல்லோரும் எம்மை மிக அன்பாக வரவேற்றனர். பயிற்றுநர் திரு. அ. யோண் ஆசிரியரிடம் முடிவுற்ற ஆட்டங்கள் பற்றி விசாரித்தோம். யாழ். கோட்டத்தில் அடங்கும் தாங்கள் மொத்தம் 14 ஆட்டங்களில் பங்கு கொண்டதாகக் கூறினார். 'லீக்' முறையில் அமைந்த போட்டிகளில் நாங்கள் முதலிடம் பெற்றோம். அதைத் தொடர்ந்து விலகல் முறையுடன், அரை இறுதிப் போட்டிகள் தொடங்கின. இப்போட்டியில் நாம் யாழ். சென். ஜேம்ஸ் ம. வித்தியாலயத்தை வென்றோம். இறுதியாட்டத்தில் கொழும்புத்துறை புனித யோசப் வித்தியாலயத்தைச் சந்தித்து 3 -0 என்றவாறு வெற்றி கண்டோம். இதைத்தொடர்ந்து மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்குகொண்டோம். மாவட்ட நிலையில் 32 பாடசாலைகள் பங்குகொண்டன. இவை 8 பிரிவாக ஆட்டங்களில் போட்டியிட்டன. அடுத்தகட்டமாக 16 அணிகள் தெரிவுசெய்யப்பட்டபோது விலகல் முறையும் தொடங்கிற்று. இக்கட்டத்தில் மீண்டும் கொழும்புத்துறை புனித யோசப் வித்தியாலயத்தை (5 -0) வென்று, கால் இறுதியாட்டத்தில் அளவெட்டி அருணோதயாக்கல்லூரியை (3 -0) வென்று, அரையிறுதி ஆட்டத்தில் ஏழாலை சிறீமுருகன் வித்தியாலயத்தை (2 -0) வென்று,

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போர் நிறுத்தம் - போக்குவரத்துப் பாதை திறப்பு;

போர் நிறுத்தம், போக்குவரத்துப் பாதை திறப்பு, இவ்விரண்டு விவகாரங்களும் கடந்த சில வாரங்களாக அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்படும் விவகாரமாகவும் ஆராயப்படும் அம்சமாகவும் உள்ளன. இவ்விவகாரங்கள் குறித்து அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடிதப் பரிமாற்றங்களும் இடம்பெற்றுள்ளன.

விடுதலைப்புலிகளுக்கும் - அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் இம்மாத இறுதியில் ஆரம்பிக்கலாம் என கடந்தமாத இறுதித் தினத்தில் தகவல் துறை அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான தர்மசிறி சேனநாயக்காவின் அறிவிப்பு வெளிவந்ததில் இருந்து இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் பற்றியவிடயம் அரசியல் அரங்கில் மீண்டும் முதன்மை பெறத் தொடங்கியது.

**தேசிய இனங்களுக்கிடையிலான பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கு அமோக ஆதரவுடன் மக்களின் ஆணையைப்பெற்ற திருமதி சந்திரிகா குமாரதுங்கா சிறீலங்காவின் ஜனாதிபதியாகப் பதவியேற்றவுடன், இரண்டாவது கட்டப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டு அதன்பிரகாரம் போர் நிறுத்தம் ஏற்பட்டு, போக்குவரத்துப்பாதை திறக்கப்படுமெனவும் தமிழீழ மக்களால் மட்டுமல்ல, சர்வதேச சமூகத்தினாலும் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இவற்றுக்குப் பதிலாக பேச்சுவார்த்தைக்கான கால இழுத்தடிப்புக்களே நடைபெற்றன. இந்நிலையிலே இக்கட்டுரை எழுதப்பட்டு ஈழநாதம் செய்தித்தாளில் வெளியிடப்பட்டது. சிறீலங்கா அரசின் இடைப்பட்ட கால இழுத்தடிப்புக்களுக்கான காரணங்களையும் பாதுகாப்பான - சுதந்திரமான ஒரு பாதை திறப்பதில் உள்ள தமிழீழ மக்களின் நியாயமான காரணங்களையும், சிறீலங்காவுக்கான போப்பாண்டவரின் வருகையைப் பாதைத்திறப்பு விவகாரத்துடன் தொடர்புபடுத்த முனைவது பற்றியும் இக்கட்டுரை தெளிவாக விளக்குவதால் இங்கு அதனை மறுவெளியீடு செய்கின்றோம்.**

தொடக்கத்தில் இச்சமாதானப் பேச்சு அறிவிப்பைத் தொடர்ந்து நத்தார்-புது வருடகாலத்தில் ஓர் போர் நிறுத்த அறிவிப்பை அரசாங்கம் செய்யலாம் என அரசியல் விமர்சகர்கள் ஆருடம் கூறினர். ஆனால் தற்பொழுது வரும் அறிவிப்புகள் மூலம் அதற்கு முன்னரே தாக்குதலை தவிர்ப்பு நிலை (Cessation of Hostlities) உடன்பாடு உருவாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதேசமயம், "தாக்குதல் தவிர்ப்பு நிலை" பெரும்பாலும் ஜனவரி 20 ஆம் திகதி இடம் பெறவுள்ள இலங்கைக்கான போப்பாண்டவரின் வருகை வரை பெரும்பாலும் நீடிக்கும் வாய்ப்புண்டு; ஆனால் அதற்குப் பிறகான காலநீட்சியானது அரசாங்கத்திற்கும் -விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுவார்த்தையில் போர் நிறுத்தம் (Ceasefire) பற்றிய முடிவிலேயே தங்கியுள்ளது என்றே தற்போதைக்குக் கூற முடியும்.

இரண்டாவது விடயமாக ஆராயப்படுவதும் அலசப்படுவதுமாகிய விடயம் யாழ். குடாநாட்டிற்கான தரைவழிப் பாதை திறப்பு விவகாரமாகும். இவ் விவகாரமானது தீவிரமாகப் பேசப்பட்டாலும் போர்நிறுத்தம் குறித்து ஓரளவேனும் முன்னேற்றகரமான சூழ்நிலை உருவாகியுள்ளது போன்று இதில் தெரிவதாக இல்லை. அரசாங்கத் தரப்பு இது குறித்து நிரம்பப் பேசினும், தமது முன்னைய நிலைப்பாட்டில் இருந்து சற்றும் விட்டுக் கொடுப்பதாக இல்லை.

அரசும் - இராணுவத்தரப்பும் இவ்விடயத்தில் புளித்துப் போன பழைய கதையையே பேசுகின்றன. ஆனால் அதில் சில புதிய விடயங்களை இணைத்துக்

## அரசு - இராணுவம் கூட்டாக புதிய யுக்தி

கொண்டு அரசியல் லாபம் தேட முனைகின்றார்கள். பாப்பரசரின் கொழும்பு வருகையை இதற்கு ஆதாயமாகப் பயன்படுத்தப் பார்க்கின்றார்கள். ஆனால் யாழ். மாவட்ட கத்தோலிக்க மக்களினதோ அன்றி ஆயரின் கோரிக்கைக்கோ அவர்கள் செவிமடுப்பதாக இல்லை.

### தாக்குதல் தவிர்ப்பு நிலையும் போர் நிறுத்தமும்

பொதுவாகவே உலகில் தாக்குதல் தவிர்ப்பு நிலை என்பது போர் நிறுத்தத்தின் ஒரு அங்கமாகவே கொள்ளப்படுவதுண்டு. ஆனால், சிறீலங்கா இராணுவத் தரப்பு இதனை இரு வேறு விடயங்களாக்கியுள்ளது. இதன் பிரகாரம் "தாக்குதல் தவிர்ப்பு நிலையில்" எதிரணியினரின் இலக்குகளைத் திட்டமிட்டு தாக்குவதைத் தவிர ஏனைய நடவடிக்கைகள் யாவும் வழமைபோல் இடம்பெறும். அதாவது இராணுவத்தை தயார் படுத்துதல், தயார் நிலையில் வைத்திருத்தல், புலனாய்வு வேலைகளைத் தொடர்வது, பதுங்கு குழிகளை அமைப்பது போன்ற சகல நடவடிக்கைகளையும் தாக்குதல் தவிர்ப்பு நிலை என்பதின் கீழ் மேற்கொள்ளமுடியும்.

இந்தவகையில், சிறீலங்கா இராணுவமானது போர்நிறுத்தம் ஒன்றைப் பிரகடனப்படுத்தாமல் தாக்குதல் தவிர்ப்பு உடன்பாடு ஒன்றிற்கு தயார்படுத்திக் கொண்டிருப்பது இராணுவம் போர்நிறுத்தத்திற்கு, அதாவது போர் நடவடிக்கைகளின் தயாரிப்புக்கான நிறுத்தத்திற்கு இன்னமும் பச்சைக் கொடி காட்டவில்லை என்பதை புலப்படுத்துவதாகவே உள்ளது எனலாம்.

இவ்வாறானதொரு நிலைப்பாட்டை இராணுவம் மேற்கொள்ளக் காரணம், தற்பொழுது இராணுவத்திற்கு உள்ள சாதகமான நிலை எதையும் இழக்காது பேணிக் கொள்ள முடியும் என்பதினாலேயே ஆகும். அதாவது தாக்குதல் தவிர்ப்பு நிலை மூலம் இராணுவத்தின் இன்றைய நிலை தொடர்ச்சியாகப் பேணிப் பாதுகாக்கப்படும்.

இந்நிலையில் போர் நிறுத்தமானது விடுதலைப்புலிகளுக்கும் -அரசாங்கத்திற்கும் இடையிலான அடுத்த கட்டப் பேச்சுக்களின் போது ஆராயப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதில் போர் நிறுத்தத்தின் போது கடைப்பிடிக்கப்படும் நிபந்தனைகள் தொடர்பான இணக்கமே நிலையான போர் நிறுத்தத்திற்கு வழி செய்ய வேண்டும்.

### பாதை திறப்பும் பின்னடிப்பும்

போர் நிறுத்தம் தொடர்பாக சிறிதளவேனும் தளர்ச்சியைக் காட்டியுள்ள இராணுவம் பாதை திறப்பு விவகாரத்தில் விட்டுக் கொடுப்பதற்கு இடமில்லை என்ற நிலையிலேயே உள்ளது. அரசாங்கமும் -இராணுவமும் போர் நிறுத்தத்திற்கு இணங்கியுள்ளது என்ற நிலையில் போக்குவரத்துப் பாதை விவகாரத்தில், இராணுவத்தின் நிலைப்பாட்டை 'ஏற்றுக் கொண்டுள்ளதாகவே தெரிகின்றது.

சந்திரிகா அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பேற்ற போது, போர் நிறுத்தம், போக்குவரத்துப்பாதை திறப்பு விவகாரம் இரண்டிலும், இராணுவம் விட்டுக்கொடுப்பிற்கு இடமில்லை என்ற தொனியிலேயே பேசி வந்தது. தொடக்கத்தில், இவ்விவகாரத்தில் அரசாங்கம் எடுத்த முயற்சிகளும் தோல்வியடைந்தது.

ஆனால், ஜனாதிபதி, தேர்தலின் பின் ஏற்பட்ட முழுமையான அதிகார மாற்றத்தின் பின்னர் இராணுவத்தரப்பு சில நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டி வந்ததினால், சற்று தளர்ச்சியைக் கடைப்பிடிக்க வேண்டிய தேவையும் அவசியமும் அதற்கு எழுந்தது. இந்த நிலையிலேயே போர் நிறுத்தத்திற்கு இணக்கம் தெரிவித்துள்ள அதேவேளை தமது நிலையிலிருந்து பின்வாங்கல்கள் எதுவும் ஏற்படாதவாறு தமது நிலையை உறுதிப்படுத்துவதில் கவனம் செலுத்தியது. இதன் அடிப்படையிலேயே போக்குவரத்துப் பாதை திறப்பு விவகாரமும் இராணுவத்தால் கையாளப்படுகின்றது எனலாம்.

இதன் பிரகாரம் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் போர் நிறுத்தமோ அன்றி தாக்குதல் தவிர்ப்பு உடன்பாடோ தோல்வியடையும் பட்சத்தில் போரை நிறுத்திய இடத்தில் இருந்து தொடர்வதே இராணுவத்தின் நோக்கமாகும். அதாவது யாழ்ப்பாணத்தின் மீதான இராணுவ நடவடிக்கைத் திட்டத்தை மாற்றமின்றியே செயற்படுத்தும் திட்டமாகும்.

இந்தநிலையில் இராணுவத் தரப்பும் -அரசும் இணைந்து பாதை திறப்பு விவகாரத்தை மத உணர்ச்சி ஒன்றிற்குள் இணைத்துவிட முற்படுகின்றன. இதன் வெளிப்பாடாகவே கொழும்பு வரும் பாப்பரசரைத் தரிசிக்கச் செல்லும் யாத்திரிகர்களுக்கு ஆனையிறவுப் பாதையைத் திறந்து விட -திறந்து விட்டுள்ளதாக அரசும் -இராணுவமும் தொடராக வெளியிடும் அறிவிப்புகளாகும்.

### ஆயரின் கோரிக்கை

கொழும்பு வரும் பாப்பரசரைச் சந்திக்க பாதுகாப்பான பாதை ஒன்று திறந்து விடப்பட வேண்டும். அதற்கான பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு என யாழ். மறை மாவட்ட ஆயர் சிறீலங்கா ஜனாதிபதியிடமும், இராணுவத் தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்தது வெளிப்படையானது.

இக் கோரிக்கையானது, யாழ்ப்பாணத்தில் இருந்து யாத்திரிகர்கள் செல்வதற்குப் பாதை இல்லாததினால் அல்ல. பெருந்தொகையானோர் செல்ல இருப்பதால் சற்றுச் சிரமமின்றிப் போக்குவரத்தை மேற் கொள்வதற்காக விடுக்கப்பட்டதே ஒழிய, இதுவரை அரசியல் / இராணுவ ரீதியாக முக்கியம் பெற்ற ஒரு பிரச்சினையுடன் மதத்தையும் இணைத்து விடுவதற்கான கோரிக்கையல்ல.

இதனை அருட்திரு. அலெக்சாண்டர் அவர்கள் தெளிவாகவே கூறியிருந்தார். "பாப்பரசரைத் தரிசிப்பதற்காகக் கொழும்பு செல்லும் யாத்திரிகர்கள் நிரந்தரப் பாதை ஒன்று ஊடாகவே கொழும்பு சென்று வர வேண்டும் என்பதையே நாம் விரும்புகின்றோம். இடைப்பட்ட தேவை ஒன்றிற்காக தற்காலிகமான பாதை திறப்பதை நாம் விரும்பவில்லை. இது ஒரு அரசியல் சார்ந்த பிரச்சினை. மிக அவதானமாகவே இவ் விவகாரம் கையாளப்படவேண்டும்" என இச் சிக்கலான அரசியல் விவகாரத்தை மதத்துடன் இணைக்க வேண்டாம் என அவர் தெளிவு படுத்தியிருந்தார்.

இதேசமயம், இக் கோரிக்கையானது பாப்பாண்டவர் வருகையையொட்டித்தான் முதன் முதலாக முன்வைக்கப்பட்ட கோரிக்கையும் அல்ல. யாழ்ப்பாண மக்களின் சார்பாக ஏற்கனவே ஆயர் உட்பட பலராலும் முன்வைக்கப்பட்ட கோரிக்கை தான்.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்...

## மோதல் தவிர்ப்பு...

இப்படி நடமாடுகையில், 400 மீற்றர் தூரம் சூன்யப் பிரதேசமாகப் பேணப்படும். இந்த ஒழுங்குமுறைகளை யார் மீறினாலும் அவர்கள் அத்துமீறலாகச் செயற்பட்டதாகக் கருதப்படும் என, அனைத்துலக செய்தித்தாள்கள் செய்தி தெரிவித்துள்ளன.

இந்த 'மோதல் தவிர்ப்பு' ஒப்பந்தம் அமுலாவதை மேற்பார்வையிடுவதற்கு, விடுதலைப் புலிகளின் இருபிரதிநிதிகளும் சிறீலங்கா அரசின் இருபிரதிநிதிகளும், அனைத்துலக நாடுகளின் அரசுகளைச் சேர்ந்த ஒரு பிரதிநிதியும் கொண்ட 'கண்காணிப்புக் குழுக்கள்' நியமிக்கப்படவும் தீர்மானிக்கப்பட்டது. அனைத்துலகப் பிரதிநிதி கண்காணிப்புக் குழுவின் தலைவராகக் கடமையாற்றுவார். யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு -அம்பாறை ஆகிய பிரதேசங்களுக்கென ஆறு கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்படவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கண்காணிப்புக் குழுக்களில் பங்குபற்றவென நெதர்லாந்து, நோர்வே நாட்டு அரசுகள் தனது பிரதிநிதிகளை அனுப்ப இணங்கியுள்ளதாகவும், கனடா அரசிடமிருந்து விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கும் கனடா சாதகமான பதிலை அளித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்திற்கான உடன்பாடு, 03. 01. - 1995 செவ்வாய்க்கிழமை தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் சிறீலங்கா அரசுப் பிரதிநிதிகளுக்கும் இடையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தையின்போது எட்டப்பட்டது.

மேலும், சிறீலங்கா கடற்படையும் விமானப்படையும் தமது சட்டரீதியான நோக்குகளை, அத்துமீறல் சம்பவங்களுக்கு இடங்கொடுக்காத வகையில் தொடரும் என சிறீலங்கா வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ■

## இருவாரங்களுக்குப்....

நம்பிக்கையீனமான நிலையினை வெளிப்படுத்துகிறது" என டெக்ஸ்டர் குரூஸ் தெரிவித்துள்ளார்.

"இதுதான் நாங்கள் முதல் தடவையாக ஒரு ஒப்பந்தத்துள் நுழைவது; இது எப்படி செயற்படப்போகின்றது என்பதைப் பார்க்க விரும்புகிறோம். இது ஒரு பரீட்சார்த்தமான முதல் சுற்று. நம்பிக்கையைக் கட்டிவளர்க்கும் ஒரு முயற்சி" என சிறீலங்கா ஜனாதிபதி சிறீலங்காப் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பரிசுத்த பாப்பரசரின் இலங்கை விஜயத்தையொட்டி, சிறீலங்கா அரசு மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்திற்கு முக்கியத்துவம் அளித்துவிட்டு, பின்னர் அதனைக் கைவிட்டு விடுமோ என்ற சந்தேகத்தை சந்திரிகாவின் "இருவார கால" எல்லை நிர்ணயம் அவதானிகள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளதாகக் கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கச்சதீவை கபளீகரம் செய்யுமாறு இந்தியாவில் கோசம் வலுக்கிறது

~ திரு. சூசை ஆனந்தன், விரிவுரையாளர், புவியியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்

1990 தொடக்கம், கச்சதீவைச் சூழவுள்ள கடற்பகுதியை உள்ளடக்கிய இலங்கையின் வடபகுதிக் கடற்பிராந்தியம், தடைசெய்யப்பட்ட பாதுகாப்பு வலயமாக சிறீலங்கா அரசால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் 1 இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழீழ மீனவர்கள் முழுமையாகப் பாதிப்படைந்துள்ளனர். தடையை மீறி பாதுகாப்பு வலயத்துள் பிரவேசித்த தமிழக மீனவர்களும் சிறீலங்கா கடற்படையினரின் தாக்குதலுக்குள்ளாகினர். இதனால் தமிழக மீனவர்களைப் பாதுகாக்கும் பொருட்டு, கச்சதீவை இலங்கையிடமிருந்து மீளப்பெற வேண்டுமென்ற கோரிக்கை இந்தியாவில் வலுப்பெறத் தொடங்கியுள்ளது. கச்சதீவு தொடர்பான இந்தியாவின் இன்றைய நிலைப்பாடும், தனது ஆதிக்கத்தை கச்சதீவுப் பகுதியில் தொடர்ந்தும் நிலைநாட்ட முனைகின்ற போக்காகவேயுள்ளது. இலங்கையைப் பொறுத்தவரையில் கச்சதீவைச் சூழவுள்ள கடற்பிராந்தியத்தின் முழுமையான பயன்பாடும் வடதமிழீழ மீனவர்களுக்கே உரியது. ஏற்கனவே கடல் வலயத்தடைச்சட்டம் போட்டு அப்பாவி மீனவர்களைக் கொடுமைப்படுத்திவரும் சிறீலங்கா அரசு, இந்தியா விரும்புவது போன்று கச்சதீவை இந்தியாவுக்கு விட்டுக்கொடுத்து, அதன் மூலம் தமிழீழ மீனவர்களையும், தமிழக மீனவர்களையும் மோதவிட்டு புதிய முறையில் அரசியல் இலாபம் தேடவும் முயற்சிக்கலாம். இக்காரணங்களினாலேயே இது இந்தியாவினதும், சிறீலங்காவினதும் பிரச்சினை என்று எண்ணியிருக்காது, இவ்விடயத்தில் தமிழீழ மக்கள் மிக விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியம் என்பதை இக்கட்டுரை விளக்க முனைகின்றது.

சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்தே இந்தியாவுக்கும் -இலங்கைக்கும் இடையில் கச்சதீவு தொடர்பான பிணக்குகள் இருந்து வந்துள்ளன. ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்கு மேலாக (1921 -1974) இருந்துவந்த கச்சதீவு தொடர்பர்ன பிணக்குகள் 1974 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இலங்கை -இந்திய பாரம்பரிய நீர்ப்பரப்பு எல்லை தொடர்பான ஒப்பந்தத்தின் மூலம் முடிவுக்கு வந்தது. ஆயினும் 20 ஆண்டுகளின் பின்னர் இன்று மீண்டும் கச்சதீவு தொடர்பான பிணக்குகள் தலைதூக்கியுள்ளன.

இதுவரைகாலமும் அமைதி வலயமாகக் காணப்பட்ட கச்சதீவும் அதன் கடற்பரப்பும் 1983 இன் பின்னர் வடக்கு -கிழக்குப் பகுதிகளில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளின் பின்னர் கலவரம் நிறைந்த பிரதேசமாகவும், இரத்தக்களரி நிறைந்த பிரதேசமாகவும் மாறியுள்ளது.

**"வடபகுதிக்கான கடல் பிராந்தியம் மட்டுப்படுத்தப்பட்டுள்ள இந்நிலையில், கச்சதீவுப்பகுதியையும் இந்தியாவுக்கு விட்டுக்கொடுப்பது என்பது தற்கொலைக்கு ஒப்பான செயலாகும்"**

பாதுகாப்புக் காரணங்களுக்காக இலங்கையின் வடபகுதிக் கடற்பிராந்தியம், தடைசெய்யப்பட்ட பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டமையும், தடையையும் மீறி பாதுகாப்பு வலயத்துள் பிரவேசித்த தமிழகத்தைச் சேர்ந்த மீன்பிடித் தொழிலாளர்கள் சிறீலங்கா கடற்படையினரின் தாக்குதல்களுக்குள்ளாகியமையும் இத்தீவு தொடர்பான சர்ச்சை எழுவதற்குக் காரணமாயிற்று.

கச்சதீவையும் அதனைச் சூழவுள்ள கடற்பரப்பிலும் சிறீலங்கா பாதுகாப்புப் படைகளின் நட்வடிக்கைகளினால் 1994 நடுப்பகுதி வரை 84 இற்கு மேற்பட்ட மீனவர்கள் கொல்லப்பட்டும், 162 பேர்வரையில் காயப்படுத்தப்பட்டும் உள்ளனர். 60 இற்கு மேற்பட்ட 'ரோலர்கள்' சேதமாக்கப்பட்டுள்ளன எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய நிகழ்வுகள் மாநிலரீதியிலும், தேசியரீதியிலும் இந்தியாவைக் கொதிப்படையச் செய்துள்ளது. இச்செயல்களைக் கண்டித்து தமிழகம் எங்கும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும், கண்டனப் பேரணிகளும் நடைபெற்றுள்ளன. கச்சதீவுப் பகுதியில் இந்திய மீனவர்கள் பாரம்பரியமாக அனுபவித்து வருகின்ற உரிமைகள் தொடர்பாகவும், கடல்வளத்துறையில் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பாகவும் பல்கலைக்கழக மட்டத்திலும், இத்துறைசார்ந்த வல்லுநர் மட்டத்திலும் கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன. மாநில, மற்றும் மத்திய அரசுகள் மட்டத்தில் கச்சதீவு தொடர்பாக எழுந்துள்ள உணர்வலைகளும், கருத்துக்களும் இப்பகுதியில் மீன்பிடித் தொழிலைச் செய்யமுடியாது முடங்கிக்கிடக்கும் வடபகுதியில் வாழும் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட மீனவர்களின் எதிர்காலத்திற்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. எனவே இந்தியா எடுத்துவரும் நிலைப்பாடானது, வடபகுதிவாழ் மீனவர்களுக்கு எத்தகைய பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பதைக் கவனத்திற்கொண்டு அணுகுமுறைகள் மேற்கொள்ள வேண்டிய தேவை எழுந்துள்ளது.

## கச்சதீவின் புவியியல் பின்னணி

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையிலுள்ள ஒடுங்கிய நீர்ப் பரப்பான பாக்குநீரிணையின் மையப்பகுதியில் இத்தீவு அமைந்துள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் நெடுந்தீவுக்குத் தென் மேற்கே 9.8 கிலோ மீற்றர் தொலைவிலும் தலை மன்னாருக்கு வடக்கில் இராமேஸ்வரத்திற்கு வடகிழக்கிலும் இது அமைந்துள்ளது. 1.5 கி.மீ நீளத்தையும், 300 மீற்றர் அகலத்தையும் கொண்டுள்ள இத்தீவு ஏறக்குறைய 7 கி.மீ சுற்றளவையும் கொண்டுள்ளது. எந்தத் தரமான உலகப்படத்திலும் அது காட்டப்படவில்லை. இதன் கரையோரத்தின் .சில பகுதிகள் மணற்றிட்டுக்களையும் சில பகுதி முருகைக் கற்பாறைகளையும் கொண்டதாக விளங்குகின்றது. அவ்வவ்போது தென்படும் கடற்பாம்புகளைத் தவிர எவ்வித உயிரினங்களும் இங்கு இல்லை. நீண்ட காலமாக மக்கள் வாழிடமற்ற பகுதியாகவே இத்தீவு காணப்படுகின்றது. இத்தீவினைச் சூழவுள்ள கடற்பகுதியானது மீன்பிடித்தொழிலுக்கு வாய்ப்பான சமுத்திரச் சூழலைக் கொண்டுள்ளது. ஆழம் குறைவாகக் காணப்படுகின்ற இக் கடற்பகுதி அடித்தளம் சேறும், மணலும் கலந்து காணப்படுகின்றது. கடலட்டை, சங்கு, இறால் போன்ற அந்நியச் செலாவணியை ஈட்டித்தருகின்ற கடலகப் பொருட்கள் இப்பகுதியிலேயே கூடுதலாக உற்பத்தி செய்யப்படுகின்றன. 'இறால் வைப்பகம்' (வங்கி) ('Prowns Bank') என அழைக்கப்படும் இப்பகுதியில் ஆண்டுதோறும் பெருந்தொகையான இறாலும் மீனும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

கச்சதீவுப் பகுதிகளில் மீன்பிடித்தொழிலில் ஈடுபடுவோர்கள், இத்தீவில் தற்காலிகமாகத் தங்கி இளைப்பாறுவதுடன் மீன்களைக் கருவாடிடல், வலைகளை உலரவிடல் போன்ற நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதும் உண்டு. இத்தீவு சார்ந்து அட்டை சங்கு குளித்தல் நடவுடிக்கைகளும் நடைபெறுவது உண்டு -2 ஆம் உலகப் போரின்போது இப்பகுதி துப்பாக்கி சுடுதல், குண்டுவீச்சுப் பயிற்சிகள் மேற்கொள்ளும் தளமாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனைவிட புனித அந்தோனியார் சொரூபம் ஒன்று வைக்கப்பட்டு, சிறிய தேவாயலயம் ஒன்றும் கட்டப்பட்டு ஆண்டுதோறும் தொடர்ச்சியாக மூன்று தினங்கள் திருவிழா கொண்டாடப்பட்டும் வருகிறது. இத்திருவிழாவில் தமிழகத்தைச் சேர்ந்தவர்களும் தமிழீழத்தைச் சேர்ந்தவர்களும் பெருந்திரளாகப் பங்குபற்றுவதுமுண்டு.

இவ்வாறாக மக்கள் வாழிடமற்ற பகுதியாக இருந்தபோதிலும் தமிழக மற்றும் இலங்கை வடபகுதி மீனவர்கள் பல்வேறு பொருளாதார, பண்பாட்டு நடவடிக்கைகளுக்காக இத்தீவினைப் பயன்படுத்தியமையால் முக்கியத்துவமுடைய ஒரு தீவாக விளங்கியுள்ளது. இத்தகைய முக்கியத்துவம் இத் தீவினை இரு நாடுகளும் உரிமை கோருவதற்குக் காரணமாக அமைந்துவிட்டது.


## இலங்கை - இந்திய கடல் எல்லைகள்

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் அமைந்துள்ள ஒடுங்கிய கடற் பகுதியானது மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. வங்காள விரிகுடாப் பகுதி
2. பாக்குநீரிணைப் பகுதி
3. மன்னார் குடாப் பகுதி

1971 ஆம் ஆண்டுவரை இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் திட்டவட்டமான கடல் எல்லை வகுக்கப்படவில்லை. 1971 இல் இலங்கை தனது ஆள்புல எல்லையை 12 மைல்களாகவும், 200 மைல் தூரம் வரையிலான பகுதியைப் பிரத்தியேகப் பொருளாதார வலயமாகவும் பிரகடனப்படுத்தியது. ஆயினும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கடற்பகுதி ஒடுங்கிய கடற்பகுதியாகக் காணப்பட்டமையால் அகலாங்கு, நெட்டாங்கு அடிப்படைகளில் எல்லைகளை வகுக்க வேண்டியதாயிற்று. இதனடிப்படைகளில் 1974 இல் பாரம்பரிய நீர்ப்பரப்பு எல்லை தொடர்பான ஒப்பந்தப்பிரகாரம் ஆதாம் பாலத்திலிருந்து பாக்குநீரிணைவரையிலான கடற்பகுதிக்கும், 1976 இல் வங்காளவிரிகுடாப்பகுதி மற்றும் மன்னார்குடாப்பகுதி கடற்பரப்பிற்கும் அகலாங்கு, நெட்டாங்கு அடிப்படைகளில் கடல் எல்லை வகுக்கப்பட்டது. 1974 ஆம் ஆண்டு போடப்பட்ட எல்லையே கச்சதீவுடன் தொடர்புடைய எல்லையாகும்.

கச்சதீவு அமைந்துள்ள பாக்குநீரிணைப் பகுதிக்கான எல்லை வகுத்தல் உடன்படிக்கையில், கச்சதீவானது




இலங்கையின் எல்ல்லக்குள் வருகின்றபோதிலும், இந்திய மீனவர்கள் பாரம்பரியமாக இப்பகுதியில் அனுபவித்துவந்த உரிமைகளைத் தொடர்ந்தும் அனுபவிப்பதற்கு வசதியாக 5 ஆவது , 6 ஆவதுமான இரண்டு முக்கிய சரத்துக்கள் சேர்க்கப்பட்டிருந்தன.

5 ஆவது சரத்தானது, "இந்திய மீனவர்களும் யாத்திரிகர்களும் இதுவரை அனுபவித்தது போல கச்சதீவுக்குச் செல்லும் உரிமையைப் பெறுவர். தொடர்ந்தும் அவ்வுரிமையை அனுபவிப்பர். இந்நோக்கங்களுக்காகப் பிரயாண ஆவணங்களோ அனுமதிப்பத்திரமோ இலங்கையிலிருந்து பெறவேண்டுமென தேவைப்படுத்த முடியாது. இதற்கு அவசியமும் இல்லை. இலங்கை இதற்கு நிபந்தனைப்படுத்தவும் முடியாது" என்பதும்,

6 ஆவது சரத்தானது, "இலங்கையினதும், இந்தியாவினதும் படகுகள் மற்றவரின் நீர்ப்பரப்பினுள் ஒவ்வொருவர் -நீர்ப்பரப்புப் பகுதிகளிலும் பாரம்பரியமாக அனுபவித்து வந்த உரிமைகளைத் தொர்டர்ந்து அனுபவிப்பர்" என்பதுமாகும்.

1976 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஆதாம் பாலத்திலிருந்து மன்னார்க்குடா வரையிலான பகுதிக்கும், பாக்கு நீரிணையிலிருந்து வங்காளவிரிகுடாப் பகுதிக்கும் உரியதாகும். "ஒரு நாட்டின் எல்லைப் பகுதிக்குள் மற்ற நாட்டின் அனுமதியின்றி எவ்வித நடவடிக்கைக்ளையும் மேற்கொள்ள . முடியாது" என இவ்ஒப்பந்தம் கூறுகின்றது.

மேற்குறிப்பிட்ட இவ்விரண்டு ஒப்பந்தங்களும் வேறுபட்ட இயல்புகளைக் கொண்டதாகும். 1974 ஒப்பந்தமானது பாக்குநீரிணைக் கடற்பகுதியில் இந்திய மீனவர்களும் இலங்கை மீனவர்களும் இலங்கை -இந்திய கடற்பரப்பில் தொடர்ந்தும் பாரம்பரிய உரிமைகளை அனுபவிக்க வழிகோலுகிறது. அதேவேளை 1976 ஒப்பந்தம் வங்காள விரிகுடாக் கடலிலும், மன்னார்க்குடாக் கடலிலும் தத்தமது எல்லைக்குட்பட்ட பகுதிகள் தவிர மற்றைய நாட்டின் எல்லைக்குள் செல்வதைத் தடைசெய்கிறது.

எவ்வாறாக இருந்தபோதிலும், இருபகுதி மீனவர்களும் இருநாட்டுப் பகுதிக் கடற்பரப்பிலும் சென்று தமது தொழில் முயற்சிகளை மேற்கொண்டே வந்தனர். இருநாட்டு அரசுகளும் இதைக் கண்டும் காணாதது போலவே இருந்து வந்தன. துரதிஸ்டவசமாக வடக்கு -கிழக்குப் பகுதிகளில் நிலவிய அரசியல் நெருக்கடிகள் காரணமாக சிறீலங்கா அரசு பாதுகாப்புக் கருதி வடபகுதி கடற்பகுதியினை தடை செய்யப்பட்ட வலயமாகப்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யாழ். பல்கலைக்கழகத்தில் 16-11-94 இல் நடைபெற்ற ஆய்வுப்பட்டறையில் ஒலித்தவை

# மூலவளங்களின் உச்சப் பயனைப் பெற நிதிப்பயன்பாடு திட்டமிடப்படவேண்டும்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன (TEEDOR)ப் பணிப்பாளர் செம்பியன்

"குடாநாட்டுக்கு வெளியே முழுமையாகப் பயன்படுத்தப்படாமல் இருக்கும் மூலவளங்களின் உச்சப்பயனைப்பெற, அங்கு மக்களை நகர்த்தக்கூடிய வகையில், தமிழீழத்தின் நிதிப்பயன்பாடுகளும் திட்டங்களும் முதன்மைப்படுத்தப்பட வேண்டும்". இவ்வாறு யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஆய்வுப்பட்டறையில் உரையாற்றிய தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பணிப்பாளர் வி. செம்பியன் அவர்கள் தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்:

"தரவுகள் போதியளவில் கிடைக்காததால், வடக்கு -கிழக்கிற்கான திட்டமிடலில் வடக்கை மையப்படுத்தி இந்த நிகழ்வு அமைந்திருந்தாலும், முழு வடக்கு -கிழக்குப் பிராந்தியத்தையும் தழுவியதாக இதை அமைக்க, இனிவரும் காலங்களில் நாங்கள் தீவிர கவனம் எடுக்கவேண்டியிருக்கும். இந்தக் கருத்தரங்கில் உண்மையின் அடிப்படையாக அமைந்த விடயம் யாதெனில், இந்தப் பிராந்தியத்தின் தேவைகளை, நன்கு உணர்ந்தவர்களாகிய நாம் இந்தப் பிராந்திய மக்களின் அபிலாசைகளை முழுமையாக வெளிக்கொணரப்பட வேண்டும் என்பதே; இவர்களது ஆலோசனை, தேவைகள் என்பன உணரப்படாது, பிற இடங்களில் இருந்து திட்டங்களை உருவாக்கி செயற்பட்டவிதமே கடந்தகால பட்டறிவாகும் (அனுபவம்). அதனால் ஏற்பட்ட தோல்விகள் நாங்கள் அறிந்ததே. எந்த ஒரு விரிவாக்கத் (அபிவிருத்தி) திட்டத்திலும், மக்களின் பங்களிப்பை முழுமையாக இணைக்கவேண்டிய தேவை இருக்கின்றன. அவர்களிடம் கலந்தாலோசித்துத் திட்டங்களைத் தீட்டவும், நடைமுறைப்படுத்தவும் மிகவும் இன்றியமையாத தேவைகள் இருக்கின்றது. இங்கே நாங்கள் சில அணுகுமுறைகளை மேற்கொள்ளலாம் எனக்கருதுகின்றோம். அதாவது ஏற்கனவே இங்கு குறிப்பிட்டதுபோல், ஒரு நீடித்து நிற்கக் கூடிய விரிவாக்கத்திற்கான வரையறைகளைப் போட்டுக் கொள்வோம்.

அடுத்தது இங்குள்ள வளங்களின் உச்ச பயன்பாடு -முழு பயன்பாடுகளையும் கருத்தில் எடுத்துக்கொள்வோம். எடுத்துக்காட்டாக இங்கு வறண்ட பிரதேசத்திலே வீணாகிக்கொண்டிருக்கின்ற ஒவ்வொரு துளிநீரும் பெறுமதிமிக்கது. ஒவ்வொரு துளிநீரும் பயன்படுத்தப்பட வேண்டும். இதேபோன்று அனைத்து மனித ஆற்றல், மற்றும் பௌதீக வளங்கள் முழுமையாக உச்சப்பயன்பாட்டிக்கு உட்படுத்தப்பட வேண்டும். அடுத்தது இங்கே வருமான ஏற்றத்தாழ்வுகள், வசதி ஏற்றத்தாழ்வுகள் தனிநபர்களிடத்தே இருக்கின்றது. இங்கே உருவாக்கிய திட்டங்கள், செயற்பாடுகள் என்பனவற்றிற்கு மேற்கூறிய இடைவெளிகளைக் குறைக்கவேண்டிய தேவை இருக்கின்றது. தனிநபர்களிடத்தே மட்டுமல்லாது, கிராமங்களுக்கும் நகரங்களுக்குமிடையில் ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. அந்த ஏற்றத்தாழ்வு இடைவெளியும் நீக்கப்படவேண்டும். ஏற்றத்தாழ்வற்ற பங்கீட்டு முறை இருக்கவேண்டும். இதேபோல் இந்தப் பிரதேசங்களுக்கிடையே இருக்கின்ற வசதிகள், உட்கட்டுமான விரிவாக்கம் போன்றன சமச்சீராக வழங்கப்படவேண்டும். குடாநாட்டுக்கு வெளியே ஏராளமான வளங்களைக்கொண்டு இருக்கின்றோம். இங்கே சனத்தொகை அதிகமாக இருக்கின்றது. மனித ஆற்றல், மனித நிபுணத்துவம் இங்கே சிறந்து காணப்படுகின்றன. அதேநேரத்தில் குடாநாட்டிற்கு வெளியே ஏனைய மூலவளங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படாமல் ஏராளமாக இருக்கின்றன. குடாநாட்டிற்கு வெளியேயுள்ள வளங்களை முழுமையாகப் பயன்பாட்டுக்குக் கொண்டு வந்து, விரிவாக்கம் செய்யக்கூடியவிதத்தில், அங்கு மக்களை நகர்த்தக்கூடிய விதத்தில், கிடைக்கக்கூடிய நிதிப்பயன்பாடுகள் மற்றும் திட்டங்கள் முதன்மைப்படுத்தவேண்டிய இடம் குடாநாட்டிற்கு வெளியேயுள்ள பிரதேசங்களாகும்.

அடுத்து எமது அடிப்படைக் கோட்பாடான தன்னிறைவு, சுயசார்பு, தன்னிறைவுக்கு அப்பால் ஏற்றுமதி. இதுபோன்ற நடவடிக்கைகளில் இங்குள்ள வளங்களின் முழுப்பயன்பாட்டையும் கொண்டுவர வேண்டும். அத்துடன் 21 ஆம் நூற்றாண்டிற்குள் எமது வடக்கு -கிழக்கு தமிழீழத்தை விரிவாக்கத்தில் இட்டுச்செல்லவேண்டும். 21 ஆம் நூற்றாண்டிற்குள் தமிழீழத்தை இட்டுச்செல்கின்ற மிகமுதன்மைத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாக, இக்கருத்தரங்கு கால்கோள் இடவேண்டும். புதிய கைத்தொழில் வளர்ச்சிபெற்ற நாடாக எமது வடக்கு -கிழக்கை முதன்மைப்படுத்த வேண்டும்.

அத்துடன் இங்கே உள்ளூரில் கிடைக்கக்கூடிய மனித ஆற்றல், மூலவளங்கள் முதன்மையாகக் கருத்தில் எடுக்கப்படவேண்டும். உள்ளூர் உற்பத்திக்கும் முன்னுரிமை வழங்கப்படவேண்டும். உள்ளூர் நிபுணத்துவ ஆற்றல்களுக்கு, உள்ளூர் துறைசார்ந்த ஆற்றல்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும். இனிவரப் போகும் காலகட்டங்களில் பெரியளவு நிதிப்பயன்பாடு இங்கேயுள்ள பிரதேசங்களுக்கும், பிரதேசத்தைச் சார்ந்தவர்களுக்கும் கிடைக்கவேண்டும். இங்குள்ள நிபுணத்துவ ஆற்றல், வெளிநாட்டுத் தரத்துக்கு ஏற்றவிதமாக வளர்த்தெடுக்கப்படவேண்டும். அதற்கு கூட்டுமுயற்சிகள் மூலம் அந்த செயற்பாடு முழுமையடைய வேண்டும்.

இங்கே இன்னொன்றையும் கவனிக்கவேண்டி இருக்கின்றது. எங்களுடைய தமிழினத்தின் நிபுணத்துவ ஆற்றல் என்பது, இங்கேயும் வெளிநாடுகளிலேயும் மிகப்பரந்தளவில் செறிந்து இருக்கின்றது. அந்த உள்நாட்டு, வெளிநாட்டு நிபுணத்துவ ஆற்றல் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட வேண்டும். அதற்கான தொடர்புமுறைகள், தகவல்கள் என்பன ஆராயப்பட வேண்டும். மற்றும் நிதி, ஆளணி, தொழில்நுட்பம், உள்ளீடுகள் பொறி (இயந்திரம்) சாதனங்கள் போன்றவை தீட்டப்படும் எமது திட்டங்களுக்கு ஒத்திசைவாகக் கிடைக்க ஏற்பாடு செய்யப்படவேண்டும். அத்துடன் நாங்கள் ஒரு குறிப்பிட்ட இலக்கை வரையறுத்து, ஆண்டு அடிப்படையில் அந்த இலக்கை அடையக்கூடிய விதத்தில் இந்த செயற்பாடுகளை நகர்த்தவேண்டும். இங்கே பொருண்மியக் குறிகாட்டிகள் ஆண்டுதோறும் வரையறுக்கப்பட்டு, பொருண்மிய விரிவாக்கத்திற்கான குறிகாட்டிகள் சரியான முறையில் ஆராயப்பட்டு, அந்த குறிகாட்டிகள் மூலம் எமது வளர்ச்சி விழுக்காடு (வீதம்) ஒப்பிடப்படவேண்டும். அதற்கான நிறுவன அமைப்பு உருவாக்கப்படவேண்டும்.

இறுதியாக இந்த நிகழ்வு முழுமை அடையும் இறுதிக்கட்டத்தில், அடுத்து ஐந்து ஆண்டு காலத்திற்கான, ஆண்டு அடிப்படையிலான வேலைத்திட்டங்களாக இவை பிரிக்கப்பட்டு, ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.

சுதந்திரம் பெற்ற இலங்கைத்தீவில் ஒரு பகுதியாயிருந்தும், விரிவாக்கத்தில் தமது பங்கைப் பெறாத எமது மக்களுக்கு, நீண்ட போரினால் அழிவுகளைக் கண்ட நம் நாட்டிற்கு, இதுவரை காலமும் வீரம் செறிந்த -உறுதியுடன் எமது உரிமைகளுக்காக போராடிய எமது மக்களுக்கு நாம் கொடுக்கும் பரிசாக, இந்தக் கருத்தரங்கு நிகழ்வுகள் நீண்டகால நன்மைகளைக் கொடுக்கக்கூடியதாக அமைய வேண்டும். இனவாத போர்ப் பிரபுக்களின் மூலம் எம்மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட, கொடுமைமிக்க இந்தப் போரின் வடுக்களை, வறுமையை நிரந்தரமாக அகற்ற வேண்டும்" எனத்தெரிவித்தார். ■

# குறைந்த மூலதனத்துடன் செய்யக்கூடியது விவசாயம்

சாவகச்சேரி பிரதேசச் செயலர் சுந்தரம்பிள்ளை

குறைந்த மூலதனத்துடன் செயற்படுத்தக் கூடிய தொழில் விவசாயம் என்று சாவகச்சேரிப் பிரதேச செயலர் திரு. பு. சுந்தரம்பிள்ளை யாழ். வளாகத்தில் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற அரச திணைக்களங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் இணைந்து நடாத்தும் 'அனர்த்தங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை இனங்காணல்' என்ற ஆய்வுப் பட்டறையில் முதல்நாள் 1 ஆம் அமர்வில் விவசாயம், விலங்கு வேளாண்மை, சூழல், கடல்வளம் என்ற தலைப்பில் தலைமையுரையாற்றும் போது குறிப்பிட்டார்.

மேலும் அவர் தமது உரையில், "எமது மண்ணில் உள்ள தொழிலாளர்களில் 44 விழுக்காடானவர்கள் (வீதம்) விவசாயத்தில் ஈடுபடுகின்றனர்; அவர்கள் பாரம்பரிய முறையில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளுகிறார்கள். இந்த விவசாயத்திற்கு மண்ணும், நீரும் முக்கிய காரணிகளாக அமைகின்றன. கிடைக்கும் மழையில். 70 விழுக்காடு விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றது. விவசாய சேவைகள் ஒழுங்கில்லாமை காரணமாக 19-81 ஆம் ஆண்டுக்குப் பின் பயிர்ச்செய்கை மூன்றில் ஒரு பங்காகக் குறைந்துள்ளது. எனவே யாழ். மாவட்டத்தில் விவசாய அபிவிருத்தி செய்யவேண்டியது அவசியமாகின்றது.

விவசாயத்தோடு மக்களுக்குத் தேவையான எண்ணெய்ப் பயிர்ச் செய்கையும் ஊக்குவிக்கப்பட வேண்டும். இந்தச் செய்கையை யாழ். மாவட்டத்திற்கு வெளியே செய்வது உகந்ததாகும். இத்தோடு ஒரு முக்கிய தொழிலாக விவசாயம் முக்கியத்துவம் பெறுகின்றது என்றும்" கூறினார். இந்த நிகழ்வில் வடமாகாண விவசாய ஆராய்ச்சி நிலையப் பிரதிப் பணிப்பாளர் கலாநிதி க. விவேகானந்தன், 'விவசாய புனரமைப்பும் எதிர்கால அபிவிருத்தியும், விவசாயிகளின் தேவைகளும்' என்ற தலைப்பிலும், நங்கூரம் நிர்வாக ஆசிரியர் திரு. பொ. ஐங்கரநேசன் 'நிலைத்து நிற்கும் அபிவிருத்தித் திட்டங்களும் சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவமும்' என்ற தலைப்பிலும் கடற்றொழில் அபிவிருத்தித்திட்ட முகாமையாளர் திரு. செ. எட்வேட் 'கடல்வளம்' என்ற தலைப்பிலும், நல்லூர் உதவி பிரதேசச் செயலர் திரு. இ. இளங்கோவன், 'கடற்றொழில் துறைசார் புனர்நிர்மாணமும் அபிவிருத்தியும்' என்னும் தலைப்பிலும் கருத்துரை வழங்கினர். ■

# தமிழீழ பிரதேசங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிப்பு

அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் பிரதிநிதிகள், தொழில்சார் வல்லுநர்கள், அறிவுஜீவிகள் கலந்துகொண்ட ஆய்வுப்பட்டறையில், இரண்டாயிரம் ஆண்டு வரைக்குமான தமிழீழப் பிரதேசங்களின் விரிவாக்கம் (அபிவிருத்தி) பற்றிய திட்டங்கள் உலகளாவிய ரீதியில் வைத்துத் தயாரிக்கப்பட்டுள்ளன.

யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இவ் ஆய்வுப் பட்டறையில், தமிழீழத்தின் புதிய தலைநகரம் முதல் கிராமம் வரையிலான விரிவாக்கத் திட்டங்கள் மற்றும் தொழில்சார் விரிவாக்கத் திட்டங்கள், போக்குவரத்து, விவசாயம், மீன்பிடி மற்றும் அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கியதாக விரிவாக்கத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. 1995 ஆம் ஆண்டு தொடக்கம் 2000 ஆம் ஆண்டு வரையிலான திட்டங்கள் வகுக்கப்பட்டு, 21 ஆம் நூற்றாண்டிற்கு தமிழீழத்தை அழைத்துச் செல்வதற்கான திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி திட்டங்கள் பற்றிய கருத்துக்கள் அறிவுஜீவிகள் மற்றும் துறைசார் வல்லுநர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர்கள் தமது கருத்துக்களைத் தெரிவிக்கும்படியும் கேட்கப்பட்டுள்ளனர்.

"கடந்தகாலங்களில் இங்கு நடைபெற்றுவந்த விரிவாக்கங்கள், ஒரு சிலரின் எண்ணக்கருத்தில் இருந்துதான் உருவானது; இதனால் ஒரு முழுமையான செயற்திட்டம் ஒன்றில்லாமல் எல்லோரையும் திருப்திப்படுத்த முடியாமல் இருந்துவந்தது".

இந்நிலைமைமாறி, இப்போது விரிவாக்கத் திட்டங்களை வகுக்கும்போது, பழைய நிலைமைக்குக் கொண்டுவராமல், 2000 ஆம் ஆண்டில் எமது நாடு எவ்வாறு இருக்கவேண்டும் என்பதைத் திட்டமிட்டு, என்னென்ன முறைகளில் விரிவாக்கம் கையாளப்படவேண்டும் என்பதை ஒவ்வொரு துறைகளிலும் வகுத்து, அதற்கான அறிவுரைகள் என்பவற்றைக்கொண்டு, இத்திட்டம் உருவாக்கப்படுவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

# தங்கு நிலையற்ற, நிலையான சமூக-பொருண்மிய அடித்தளம் தேவை

- தமிழீழ நிர்வாகப் பொறுப்பாளர் டொமினிக்

"எமது போராட்டம் தமிழீழ இலக்கை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் தங்கு நிலையற்றதும், நிலைத்து நிற்கக் கூடியதுமான சமூக, பொருண்மிய அடித்தளம் ஒன்றினை உருவாக்கிக்கொள்ள வேண்டிய தேவை எழுந்துள்ளது என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்வீர்கள்; எமது போராட்ட காலத்திலேயே சகல துறைகளிலும் சமாந்தரமாக முன்னேறிச் செல்லவேண்டி இருக்கிறது". 16. 11. 1994 இல் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் அனர்த்தங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை இனங்கண்டு, அவற்றை நடைமுறைப்படுத்தும் நோக்குடன் நடைபெற்ற ஆய்வுப்பட்டறையில் உரையாற்றிய தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் டொமினிக் தெரிவித்தார்.

"எமது பொருண்மியம் மரபு சார்ந்த தொழில் நுட்பத்திற்கு மீண்டும் செல்லாது. பொருத்தமான தொழில் நுட்பங்களோடு வலுப்பெறக் கூடிய பொருண்மிய கட்டமைப்பொன்றை கட்டியெழுப்ப வேண்டிய அவசியமும், அவசரமும் எழுந்துள்ளது;

சமாந்தரமான அபிவிருத்தி நிகழ்வுகள் போராட்டத்தோடு ஏற்படாவிட்டால், இன்று நெல்சன் மண்டேலா அவர்கள் நாடுகளிற்கிடையிலே சென்று இரந்து நிற்கின்ற நிலைமைதான் எங்களது நாட்டிற்கும் ஏற்படும். அவ்வாறான ஒரு நிலைமை ஒன்று ஏற்படாமல் எங்களது நாட்டினது பொருண்மியம் எங்களது நாட்டிலேயே தங்கியிருக்க வேண்டிய கட்டமைப்புகளை உருவாக்க வேண்டியது ஒரு தேவை. இந்தத் தேவையை நிறைவேற்றுவதற்கான ஆலோசனை சபை, அதற்கான ஒரு அடிக்கட்டுமானமாக இந்தக் கருத்தரங்கைப் பயன்படுத்தும் என நான் நம்புகிறேன்". ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




## அழியாத சுவடுகள்

இந்திய அரசின் துரோகத்தால், சர்வதேசக் கடல் எல்லையில் 16-01-1993 அன்று வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட தளபதி கிட்டு அவர்களினதும், ஏனைய ஒன்பது போராளிகளினதும் நினைவாக உருவாக்கப்பட்ட, "அழியாத சுவடுகள்" எனும் "ஒலி இசைத்தட்டு" (CD) வெளிவந்துள்ளது. இவ் இசைத் தட்டினை இப்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேசக் கிளைகள் யாவற்றிலும் பெற்றுக் கொள்ளலாம்.



வெளிவந்துள்ளது





### இலண்டனில்

# விஞ்ஞானக் கண்காட்சியும்
# கேணல் கிட்டுவின் இரண்டாம் ஆண்டு
# நினைவுக் கலை நிகழ்ச்சியும்

**காலம் : 14 - 1 - 95 சனிக்கிழமை**

**நேரம் :** 3.00 pm - 5.45 pm விஞ்ஞானக் கண்காட்சி
- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் (பிரித்தானியக் கிளை)

6.00 pm - 10.30 pm கலை நிகழ்ச்சிகள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

இடம் : Walthamstow Assembley (Town) Hall
Forest Road
Walthamstow, London E17.
Walthamstow Central

**நிகழ்ச்சிகள் :**

- தேசியக்கொடி ஏற்றல்
- மௌன அஞ்சலி
- "தியாகத்தில் மாவீரன் கிட்டு" - திருமதி ராகினி ராஜகோபால் வழங்கும் அழியாத நினைவுகள்
- 'Kittu - The Inimitable Hero' - Speech in English by Mr. S. Sriskandarajah
- "வீணாஞ்சலி" - சைவ முன்னேற்ற சங்க கலை நிலைய வீணை ஆசிரியை திருமதி செந்தில் செல்வி வாமநானந்தனின் மாணவர்கள்
- "காவியநாயகன் கிட்டு" - தொகுத்து வழங்குபவர் திரு. கரவைக் கவி
- "களத்தில்" இசைக்கவிதை நிகழ்வு - பிரித்தானியக் கம்பன் கழகப் பாலர்கள்
- "என் இனியவளுக்கு" - கேணல் கிட்டு அவர்களினால் ஆக்கம் பெற்ற நூல் வெளியீடு

இடைவேளை

- "சத்தியாஞ்சலி" - லண்டன் கலைஞர்கள் வழங்கும் புலவர் சிவநாதனின் கலைப்படைப்பு
- "கிட்டுவின் ஓவியக் காட்சிகள்" - திருமதி பத்மினி குணசீலன் / புலவர் சிவநாதன் இணைந்து வழங்கும் நாட்டியாஞ்சலி.
- தேசியக்கொடி இறக்கல்


## அர்ச்சுனன்...

- அங்கு வந்திருந்த அந்த ஆசிரியையின் அமைதியான பதிலின் பின்னும் பிள்ளைகள் தொடர்ந்தன. -

'விளையாட்டுப் போட்டியில் என்னைத் தூக்கி முத்தமிட்ட அந்த கிட்டுமாமா இனி வர மாட்டாரா?'

- ஆறு வயதும் நிரம்பாத அந்தப்பிள்ளையின் செதும்பல்.... -

'எங்கள் கிட்டுமாமா.... எங்கே....? மூக்குக்கண்ணாடி கிட்டுமாமா எங்கே....?'

'வாத்தியார்.... கிட்டுமாமா எங்களையெல்லாம் அந்த நிமிடத்தில் நினைத்திருப்பாரா....?'

'நிச்சியமாக.... நீங்கள், நாங்கள், எமது தலைவர், அம்மா, அக்கா, எமது மண்ணை நேசித்து எல்லோருமே அந்த நிமிடம் அவரது மனக்கண்ணில் வந்துதான் போயிருப்போம்.'

நீண்டநேர மௌன அஞ்சலியின் பின் நேசன் மனம்திறந்து உரையாற்றினான்.

'பிள்ளைகளே... கிட்டண்ணா சமாதானப் புறா

தொடர்ச்சி 5 ஆம் பக்கம்...


# ஈர நினைவுகள் சுமந்த
# 2 வது ஆண்டு
# 16 - 01 - 1995

அனைத்துலகக் கடற்பரப்பில் வைத்து, இந்திய அரசின் சதியால் தம்மைத் தாமே அழித்து, வங்கக்கடலில் விடுதலைக்கு வித்தாகிப்போன, தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டுவினதும் ஒன்பது போராளிகளினதும் நினைவுநாள்.

**காலம்: 14.01.1995 சனிக்கிழமை**
**நேரம்: பிற்பகல் 16.00 மணி**

**இடம்:**
PAROISSE SAIN GABRIEL
81, Rue de la Plaine,
75020 Paris,
Metro: Maraichers.

தளபதி கிட்டு என்னும் நூலும், அழியாத சுவடுகள் என்னும் இசைத்தட்டும் அன்றைய நாள் வெளியிடப்பட இருப்பதுடன், தளபதி கேணல் கிட்டு பற்றிய விவரணச் சித்திரமும் உண்டு.

தமிழீழ விடுதலைப் புலிகள் - பிரெஞ்சுக்கிளை


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாவீரர் நாளில் (1994) விடுதலைப்புலிகளின் படைமுகாமொன்றில்

# மாவீரர் நினைவுச்சுடர் ஏந்தி

## மாவீரர்களை நினைவு கூரும் போது...

### தமிழீழத்தேசியத் தலைவர் வழங்கிய மாவீரர் நாள் - 94 செய்தியிலிருந்து ...

"மனித ஈகத்தின் உச்சங்களை எமது போராட்ட வரலாறு தொட்டு நிற்கிறது. இந்த மகோன்னதமான தியாக வரலாற்றைப் படைத்தவர்கள் எமது மாவீரர்கள்"

"இன அழிப்பின் தாங்கமுடியாத நெருக்குவாரங்களின் விளைவாக, நாம் ஒரு விதி செய்துகொண்டோம். எமது தலைவிதியை நாமே நிர்ணயிக்கத் தீர்மானித்தோம். விடுதலை பெற்ற மனிதர்களாக வாழ்வதற்கு, நாம் முடிவு செய்து கொண்டோம்"

"சிங்களப் பேரினவாத அரசுகள் தொடர்ச்சியாக இழைத்து வந்த கொடுமைகளுக்கு புதிய அரசு , முதலில் பரிகாரம் காணவேண்டும். தேசிய இனப்பிரச்சினையின் அடிப்படைகளை ஆராய்வதற்கு முன்னராக, எமது மக்களின் ஜீவாதாரப் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படவேண்டும். சமாதான சூழ்நிலையை உருவாக்கி, தமிழர் மீதான தடைகளை நீக்கி, பொருளாதார வாழ்வைச் சீரமைத்து, இயல்பு நிலையைத் தோற்றுவிக்க அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்"

"எமது தாயக மண்ணில், வரலாற்று ரீதியாக எமக்கு உரித்தான எமது சொந்த மண்ணில் நாம் நிம்மதியாக, சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழவேண்டுமென்பதே எமது குறிக்கோள். இதுவே எமது தேசத்தின் அபிலாசை. இந்தத் தேசிய அபிலாசையை நிறைவு செய்யும் ஒரு தீர்வையே நாம் வேண்டி நிற்கிறோம்"

"நாம் மிகவும் பலமான, உறுதியான அத்திவாரத்தில் இன்று நிற்கிறோம். ஒரு பலமான சக்தியாக வலுவான தளத்தில் நாம் நிற்பதால்தான், சிங்கள அரசு எம்முடன் பேச்சுக்களை நடாத்த விரும்புகின்றது"



"சருகாக நெரிபட்ட தமிழனை மலையாக நிமிரச் செய்தவர்கள் மாவீரர்கள்"
பெருமிதத்தோடு நினைவுகூருகின்றார் தலைவர்

U.T.O
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

L.T.T.E
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

W.T.C.C
Gold Gasse-8, 7000 Chur
SWITZERLAND
Tel/Fax: 077-816609

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F091-611 3179

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

T.C.C
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

T.C.C
Glommingé Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943

Printed by Observer Group Newspapers

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்